எஸ். இராமகிருஷ்ணன்

கம்பன் கண்ட அரசியல்

மீனாட்சி
புத்தக
நிலையம்

—Eswari

கம்பன் கண்ட அரசியல்

டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, மதுரை—1

கிளை : 228, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5

முதற் பதிப்பு : ஜூலை, 1959
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1963
மூன்றும் பதிப்பு : அக்டோபர், 1969
நான்காம் பதிப்பு : செப்டம்பர் 1979

மீனுட்சி 96

விலை ரூ 5-25

MEENAKSHI PUTHAKA NILAYAM
60, West Tower St., Madurai-625 001

Branch : 228, Triplicane High Road, Madras-600 005

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14

15-6

பதிப்புரை

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் காவியப் பெருமை, கவிநயம், பாத்திர சிருஷ்டி ஆகியவை பற்றிப் பலரும் எழுதியுள்ளார்கள். ஆனல் கவிஞர் பெருமானின் அரசியல் கருத்தை ஆராயும் முதல் நூல் இதுதான்.

கம்பன் தனது பெருங் காவியத்தில் மூன்றுவித அரசியலைப் பற்றிப் பேசியுள்ளான். அரசியலுக்கு அவன் கொடுத்துள்ள இடம் மிகக் குறைவுதான் என்றுலும், அந்தக் குறைவான இடத்திலே தனது கருத்தைத் தெளிவாக விளக்கியுள்ளான். கவிஞர் பெருமான் சுருக்கமாகவும், ஆனல் ஸ்பஷ்டமாகவும் கூறியுள்ள அரசியல் கருத்துக்களைத் தொகுத்து நன்கு விளக்கியுள்ளார் ஆசிரியர் இராமகிருஷ்ணன்.

கம்பனது அரசியல் கருத்துக்கள் மாணவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும்கூட சிறந்த நல் விருந்தாகும்.

இச் சிறந்த நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்களித்த திரு. இராமகிருஷ்ணனவர்கட்கு எங்கள் நன்றி.

மீனுட்சி புத்தக நிலையத்தார்

பொருளடக்கம்

பாடல் எண் – சிறு குறிப்பு

கம்பன் கழகம் (சென்னை) வெளியிட்டுள்ள கம்பராமாயணப் பதிப்பில் (1976) உள்ளவாறு, காவிய மேற்கோளுக்குக் காண்டம், படலம், பாட்டு எண்கள் தரப் பெற்றுள்ளன.

1. பாரம்பரியம்

அரிஸ்டாட்டில் என்ற பண்டைய கிரேக்க ஞானி ஆட்சிக்கலையினைத் தலைமையான அறிவியல் (Master Science) என்று போற்றினார். இக் கலை இந்தியர்களாகிய நமக்கு ஆகிவந்த ஒன்றேயாம். மகாபாரதத்தின் சாந்தி பருவத்தில் பிதாமகனான பீஷ்மர், பாண்டு புத்திரனான யுதிட்டிரனுக்கு அரசநீதியை விரிவாக எடுத்துரைக்கிறார். வான்மீகி முனிவரின் ஆதிகாவியம், கோசலத்தில் விளங்கிய கோனாட்சியின் பெருமையைப் பேசுகிறது. மௌரியர் காலத்தில் வாழ்ந்த கௌடில்யரின் அர்த்த சாத்திரமும், ஏறக்குறைய அதே காலத்தில் இறுதி வடிவம் பெற்ற மனுஸ்மிருதியும் அரசநீதியை முறையாகப் பேசுகின்றன. அரசநீதி அல்லது தண்டநீதி (தண்டம்-செங்கோல்) என்பது நான்முகன் அருளிய பெருநூல் என்றும், அது பல கடவுளராலும் முனிவராலும் பன்முறை சுருக்கப் பெற்று மானிடரிடையே வழங்கப்படுகிறதென்றும் பாரதம் கூறும் கதையிலிருந்து இந்தியஅரசியல் சிந்தனையின் தொன்மையை ஒருவாறு உய்த்துணரலாம்.

பூர்வீக காலத்தில், அரசோ குற்றம் புரிவாரை ஒறுக்கும் தண்டனைக் கருவிகளோ இருந்ததில்லையென்றும், 'யான்,

எனது' என்ற தனி நோக்கில் தாழாத மக்கள், இயல்பாக நன்னெறியில் சென்று நேயமாக வாழ்ந்தனரென்றும் பாரதம் கூறுகிறது. நாளடைவில் மனிதனது தன்மை கெட்டு, காமமும் வெகுளியும் பொருளாசையும் தோன்றின; சண்டை சச்சரவுகள் மலிந்தன; வலியார் எளியாரை வதைத்தனர். அந்நிலையில், சமுதாயம் முறையாக இயங்கு வதற்கு வாய்ப்பாக அரசு தோன்றியது என்பார் பீஷ்மர். பொதுவுடைமைச் சமுதாயத்தில், வறுமையையும் துன்பத் தையும் பகிர்ந்து வாழ்ந்த பண்டைய மக்களிடையே, அரசு என்ற தனிக் கருவிக்குத் தேவையில்லாதிருந்ததென்றும் தனி உடைமை தோன்றிய பின்னரே, உடையவன்-இல்லா தவன் என்ற வர்க்க வேற்றுமை முற்றிய பின்பே, அரசு தோன்றியதென்றும் மார்க்ஸிய அறிஞர்கள் மொழிந்திருப் பதைப் பீஷ்மர் அருளிய கருத்தோடு ஒப்புநோக்குவது பெரும் பயன் தருவதாகும்.

பிரபஞ்சத்தையும் மனிதகுலத்தையும் ரட்சிப்பதற் காகத் தருமத்தின் உருவாக அமைந்ததே தண்டம் (செங் கோல்) என்பார் மனு. பிரபஞ்சத்தை ஒரு நெறியில் செலுத்துவதாக அமைந்துள்ள '*ரித*'[1] அல்லது முறையினைப் பற்றி வேதங்கள் பேசுகின்றன. அந்த *ரித* அல்லது ஊழின் வழித் தோன்றலே தண்டம் என்பது மனுவின் கருத்து. முறைதவருத மன்னர்களுக்குத் தண்டம் உறுதுணையாக உள்ளது. ஆனுல், அறம் திறம்பும் அரசனை அது வேர் அற மாய்த்துவிடுகிறது. கொடுமை சூழ்ந்த வேனன் என்ற வேந்தன், அந்தணரது மந்திரத்திறன் பெற்ற புல்லாயுதங் களுக்கு இரையானுன் என்ற கதை, கொடுங்கோலரைக் கோறுவதற்கு நியாயம் கற்பிப்பதாயுள்ளது.

அரசன் மனம்போன போக்கில் சட்டம் இயற்ற முடி யாது. அவன் சட்டத்தின் *கர்த்தா* அல்ல; காவலனே. வேத

---

1 *ரித* (பிரபஞ்சமுறை) என்னும் இந்தக் கோட்பாடு ரிக்வேத சிந்தனை எழுச்சியின் சிகரமாகலாம் என்பர் பாஷம் (The Wonder That was India, P. 239)

மும் ஸ்மிருதியும் மரபும் சான்ருேர் கருத்துமே சட்டத்தின் தோற்றுவாய்களாகக் கருதப்பட்டன.

அரசன் நிலத்துக்கு உரிமையாளன் அல்ல. நாடு காவல் என்ற நற்பணி ஆற்றுவதற்குக் கூலியாகவே அவன் நிலவரியும், வேறு வரிகளும் பெற்ருன்.

பசியும் பிணியும் பகையும் நீக்கிக் குடிகளைப் புரப்பது அரசன் பொறுப்பு. அவன் குடிகளை அச்சுறுத்தி அமைதி நிலவச் செய்வோனுக இருத்தல் கூடாது. குடிகளை எவருக்கும் அஞ்சாதவராய் அறநெறியில் வாழ்விப்போனே வேந்தன். ''சட்டமும் ஒழுங்கும் ஓம்புதல்'' என்பது ஆங்கிலேயர் கால வழக்கு. ''அறமும் அஞ்சாமையும் நிலைபெறச் செய்தல்'' என்பது ஜனகன், யாஞ்ஞவல்கிய முனிவர் ஆகியோர் காலத்திலிருந்து நின்று நிலைத்த கருத்து.

பனிமுடி தரித்த இமயம் முதல் நித்தம் தவம் செய்யும் குமரி எல்லை வரையில் பரவிப் படர்ந்துள்ள பாரதமே சக்கரவர்த்தியின் க்ஷேத்திரம் (நிலப்பரப்பு) என்பார் கௌடிலியர். பெருநில வேந்தர்கள் வேள்வி இயற்றுவதைப் பற்றிய குறிப்புக்கள் பழைய நூல்களில் உள்ளன.

சங்க காலத்துக்கு முன்பே அகில இந்திய அரசியல் உருவாகிவிட்டது. எனவே சங்க நூல்களில் மேற்சொன்ன கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்; அதனுல்,
யான் உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே[1] (186)

என்ற புறப்பாட்டு வேந்தனின் உயர்வையும் பொறுப்பையும் புலப்படுத்துவதாகும். அரசன் அன்பும் அருளும்

1 தானை-சேனை.

அமையப்பெற்றுச் சேயை வளர்க்கும் தாய்போல் நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பார் நரிவெரூஉத் தலையார் (புறம் 5).

மாண்ட அறநெறி முதற்றே அரசின் கொற்றம்[1](புறம்55)

என்பார் மருதன் இளநாகனார்.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும் (388)

என்பார் வள்ளுவர். தமிழ்நாட்டுச் சாசனங்கள் பலவற்றில் அரசன் தருமமகாராஜன் என்றே குறிக்கப் பெறுகிறான்.

வட திசை எல்லை இமய மாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை (பதிற்றுப்பத்து 43:6-7)

இருந்த வேந்தர்களையெல்லாம் அமரில் வென்றவன் என்று செங்குட்டுவனைப் பரணர் புகழ்வதில், கௌடில்யரது சக்கரவர்த்தி க்ஷேத்திரக் கருத்தின் வெளியீட்டைக் காண்கிறோம். இராசசூய யாகம் செய்த மன்னர்களைப் பற்றிய செய்திகளும் சங்கநூல்களில் உள.

அரசனையும் உள்ளிட்டு இராஜ்யத்தில் ஏழு உறுப்புக்கள் உண்டு என்றனர் வடநூலார். இதே கருத்தினை,

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு[2] (381)

என்ற குறளில் காண்கிறோம்.

''பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே" என்று பதிற்றுப்பத்திலும், ''பார்ப்பார்த் தப்பிய கொடுமை''

1 மாண்ட-மாட்சிமைக்கு உரிய; கொற்றம்-வெற்றி.

2 குடி என்பதனுள் நாடும் அடங்கும். கூழ் என்றது அதற்கு ஏதுவாகிய பொருளை.

என்று புறநானூற்றிலும் (34), "நின் முன்னேரெல்லாம் பார்ப்பார் நோவன செய்யலர்" என்று இன்னெரு புறப் பாட்டிலும் (43) உள்ள வாசகங்கள் சங்க காலத்தில் அந்தணர்களுக்கு ஏற்பட்டிருந்த பெருமையை எடுத்துக் காட்டுவன.

விருப்பு வெறுப்புக் கொள்ளாது, இன்னன் இனியன் என்று பாராது, நடுநிலையோடு நீதி வழங்கவேண்டுமென்ற கருத்தை மனுநீதிச் சோழன் கதை வலியுறுத்தும். ஆராயாது கோவலனைக் கொன்ற நெடுஞ்செழியன் தன் குற்றத்தை உணர்ந்தவுடன்,

யானே அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்என[1]
(20: 73-77)

மயங்கி வீழ்ந்து உயிர்நீத்தான் என்பார் இளங்கோ அடிகள்.

வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது (25: 8-99)

என்று பாண்டியன் செயலைப் புகழ்வான் செங்குட்டுவன்.

இறைமைக்குரிய செங்கோல் வளையாத நாட்டில் மழை தப்பாமல் பெய்யும் என்றனர் முன்னோர்.

மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்,
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்,
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகல் ஞாலம்[2] (புறம் 35)

என்றார் வெள்ளைக்குடி நாகனார்.

---

1. மன்பதை-மனிதகுலம். தென்புலம்-பாண்டிய நாடு. பிழைத்தது-தவறியது.

2. மாரி-மழை. வாரி-விளைச்சல் காவலர்-அரசர். கண் அகல்-இடம் அகன்ற. ஞாலம்-உலகம்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்[1] (559)

என்பது குறள்.

மணிமேகலையும் இதே கருத்தினை வலியுறுத்தும் :

கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்;
மாரி வறங்கூரின் மன்னுயிர் இல்லை;
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதிஇன்று ஆகும்.[2] (7: 8-12)

மன்னவன் கோல் கோடினால், பசுவின் பால் குன்றும் என்றும், அந்தணர் வேதங்களை மறப்பர் என்றும் வள்ளுவர் கூறுவார்.

ஆபயன் குன்றும்; அறுதொழிலோர் நூல்மறப்பர்;
காவலன் காவான் எனின்.[3] (5(0)

சங்ககாலத் தமிழகத்தில், வேந்தருக்குத் துணையாக அமைந்த அவையங்களில், சான்றோர் முறை வழங்கினர். அவர்கள் அறவழி வழுவாத அன்பு உடையராயிருந்தனர். இத் தகுதியினைப் பெருதவரை அவையத்தாராக நியமிப் பதே கொடுங்கோன்மையாகக் கருதப்பட்டது. எனவே போருக்கு எழுந்தபோது பாடிய வஞ்சினப் பாட்டில்,

---

1. கோடி-தவறி. உறை-மழைத்துளி. ஒல்லாது-செய்யாது.

2. கோள்-கிரகம். வறங்கூரல்-வறண்டு போதல். தகுதி இன்று-தகுதி இல்லாது.

3. ஆ-பசு. அறு-தொழிலோர்-அந்தணர்.

அறன் நிலை திரியா அன்பின் அவையத்து,
திறன் இல் ஒருவனை நாட்டி, முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக[1] (புறம். 71)

என்று கூறுகிறான் பூதப்பாண்டியன்.

வீரம் பொருந்திய சோழரின் உறந்தை (உறையூர்) அவையத்தில் அறம் நிலைத்திருப்பதாக நப்பசலையார் கூறுவார்:

மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற்று. (புறம். 39)

விரைவில் பரிசில் வழங்கித் தன் வறுமையை நீக்க வேண்டுமென்று சோழமன்னனை வேண்டிய பெருங்குன்றூர்க் கிழார்,

சான்றோர் இருந்த அவையத்து உற்றோன்
ஆசுஆகு என்னும் பூசல் போல
வல்லே களைமதி[2] (புறம். 266)

என்றார்.

தமக்குப் பற்றுக்கோடு ஆகி நீதி வழங்க வேண்டுமென்று கேட்டோர்க்கு, அவையத்தார் உடனே முறை வழங்கிக் குறை தீர்ப்பதுபோல், தம் இன்மைத் துன்பத்தைக் களைய வேண்டினார் அப்புலவர்.

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றவும் உவகையும் செய்யாது காத்து

---

1. மெலிகோல்-கொடுங்கோல்.

2. ஆசு-பற்று. பூசல்-ஆரவாரம், வல்லே-உடனே,

ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகி[1]
சிறந்த கொள்கை அறம்கூறு அவையமும் (489-92)

என்று மாங்குடி மருதனுரின் மதுரைக் காஞ்சி பேசும்.

அவையத்துச் சான்ருேரின் தகுதிகளைப் பற்றித் திருக்குறள் விரிவாகப் பேசுகிறது.

கிராம ஆட்சி என்பது தமிழகத்தில் தன்னேரில்லாப் பெருமையை மேவியது எனலாம். ஊர் மக்கள் அனைவரும் 'மன்றம்' என்ற இடத்தில் கூடிப் பொது விவகாரங்களைப் பற்றிப் பேசி முடிவு செய்தனர் என்பதைப் புறநானூறு முதலிய சங்க நூல்களில் உள்ள செய்திகளிலிருந்து உய்த்துணரலாம். எட்டாம் நூற்ருண்டின் இறுதியில் ஏற்பட்ட பாண்டியர், பல்லவர் கல்வெட்டுக்களும், பத்தாம் நூற்ருண்டில் தோன்றிய சோழர் கல்வெட்டுக்களும் கிராம சபைகளைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றன.

பொதுவாகப் பாரதத்திலும், சிறப்பாகத் தமிழகத்திலும் உருப்பெற்ற ஆட்சிக் கலையின் முக்கிய அம்சங்கள் இவையே. அரசன் அச்சம் நீக்கி அறம் காப்போனுகவும் குறை தீர்த்து முறை செய்வோனுகவும், குடி தழுவிக் கோலோச்சுவோனுகவும், சான்ருேரைத் துணைவராகக் கொண்டவனுகவும் திகழ வேண்டுமென்பதே தொல்லோர் வகுத்த ஆட்சிக் கலை என்று சுருங்கக் கூறலாம். இதனைக் கருதியே,

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்குஎலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெரும் காவலன்
(திருநகரச் சிறப்பு 5-14)

என்ருர் பெரிய புராணம் அருளிய சேக்கிழார்.

இந்தச் சிறந்த பாரம்பரியத்துக்கு உரியவனுகத் தோன்றினுன் கம்பன். முன்னேர்களது அரசியல் கருத்துக்

1. செற்றம்-வெறுப்பு. ஞெமன்கோல்-துலாக்கோல்.

களைக் கசடறக் கற்றுத் தெளிந்த கம்பன், கொள்வன கொண்டும், விடுப்பன விடுத்தும், புதியன புனைந்தும், ஆட்சிக் கலையில் புரட்சியைச் செய்திருக்கிறான். இதனைக் கோசலத்தின் கோன்மை நிலையில் உள்ளங்கை நெல்லிக்கனி போல் கண்டு உணர்கிறோம்.

உழவும் தொழிலும், உள்நாட்டு வெளிநாட்டு வாணிக மும் பல்கிப் பெருகும் சூழலில் வளர்ந்தான் கம்பன். அவனி யில் வாழ்வோரையெல்லாம் அணைத்துக்கொள்ளும் அருள் நோக்கோடு இப் பொருட்செல்வம் பயன்பட்டால் இன்மை யும் புன்மையும் பழங்கால நினைவாகுமென்பதை ஓர்ந்தான் அவன். இத் திருநோக்கால் பண்பட்ட அவனது உள்ளத் தில் புதிய கனவு பிறந்தது. அதுவே, வெண்சுடர்நிலை எய்திய அவனது மனோபாவனையில், அறத்தின் மூர்த்தியான இராமனை ஈன்றெடுத்த கோசல்மாக உருவெடுத்தது. தமிழகம் கோசலமாக மாறுவதற்குத் தடையாக அதிகார ஆணவமும், செல்வச் செருக்கும், சமயத் தருக்கும், சாதிப் பித்தும் வளர்ந்து நிற்பதைக் கண்ட கவிஞனது மனம் மறுகியது. பொருட்செல்வப் பெருக்கோடு இத்தீய இயல்பு களும் வளர்வதை அவன் கண்டான். புல்லர்களது கையில் பொருள் குவிந்தால் மாந்தற்கு இன்னலே நேருமென்பதை ஓர்ந்த கம்பன், அந்த அபாயத்தை இராவணேசுவரனது பாவப் பண்டாரமான இலங்கை வாயிலாகப் புலப்படுத் தினான். இரக்கமென்ற பொருளுக்கு இடமில்லாத இவ் வரக்க அரசியலின் அழிவை இராவண வதம் குறிக்கின்றது. ‘‘அறம் வெல்லும், பாவம் தோற்கும்’’ என்பதே கம்பன் காவியத்தின் பாவிகம்.*

இராமகாதை சித்திரிக்கும் கோன்மை நிலைகள் மூன்று என்போம். ஒன்று: தேவரையும் மூவரையும் அஞ்சி வாழச்

---

*பாவிகம்: தொடக்க முதல் முடிவுரை வனப்புடைய தாக அமையும் காவியப் பண்பு.

செய்த அரக்கர்கோமானின் ஏகாதிபத்திய அரசியல். இன்னொன்று: 'காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்' ஆன காகுத்தன், வெஞ்சுடரோன் மைந்தனும் சுக்ரீவனுக்கு விரித்துரைத்ததாகக் கிட்கிந்தைக் காண்டத்தில் அமைந்த அரசியற்படலம். மற்றொன்று: அன்பு எனும் பண்பும் அறிவு எனும் திறமும் பெற்று, அறம் இயற்றிப் போகம் துய்க்கும் மாந்தர்கள் வாழும் கோசலத்தின் கோன்மைப் பெருமை. இனி இம் மூன்றையும் முறையாக ஆராய்வோம்.

2. இராவணன் அமைத்த ஏகாதிபத்தியம்

இலங்கை என்பது நம் கண் எதிரே காட்சி தரும் நாடு அன்று; அது கடலிடைக்கிடந்த மலேயின் முடியில், விசுவ கருமன் அமைத்த நகரம் என்பது வான்மீகத்தின் கற்பனே.

பொன்னின் மால்வரை மேல்மணி
பொழிந்தன பொருவ,
உன்னி நான்முகத்து ஒருவன் நின்று
ஊழ்முறை உரைக்கப்
பன்னி, நாள்பல பணிஉழந்து,
அரிதினின் படைத்தான்,
சொன்ன வானவர் தச்சனும்,
இந்நகர் துதிப்பான் [1] (5,2,28)

என்பான் கம்பனும், பொன்மயமான மேருமலேமீது இரத்தினங்களேச் சொரிந்ததுபோல் இலங்காபுரி ஒளிர்கிறது. வானவர் சிற்பியான விசுவகருமன், பிரமதேவனது மேற்பார்வையில் பலநாள் பாடுபட்டு இந்நகரை இத்துணேச் சிறப்பாகச் சமைத்தான் என்று கவிஞன் கூறுகிருன்.

குபேரனுக்காகக் கட்டப்பெற்ற இலங்கையை இராவணன் அபகரித்துக்கொண்டான். ஆம்; அரக்கர் பேரரசின் தலேநகரே ஆக்கிரமிப்புக் கொள்கையின் சின்னமாக விளங்குகிறது.

---

1. பொன்னின் மால்வரை-மேருமலே. பொருவ-ஒப்ப. உன்னி-நினேத்து நான்முகத்து ஒருவன்-பிரமன். பன்னி-ஆராய்ந்து. பணிஉழந்து-வருந்தி உழைத்து.

முதனூலின் சுந்தர காண்டத்தில், 2 முதல் 13 முடிய உள்ள 12 சருக்கங்களில், 505 சுலோகங்களில், அனுமன் இலங்கை நகர் தேடிய செய்தி பேசப்படுகிறது. கடத்தற் கரிய அகழியும் மதிலும் காவற் படையும் உடைய இலங்கை யின் சோலை வளமும், மாளிகை எழிலும், செல்வ மிகுதியும் நன்கு சித்திரிக்கப்பெறுகின்றன. இரவு நேரத்தில் நகரைச் சுற்றிய அனுமனுக்கு, அரக்கரும் அரக்கியரும் மதுவுண்டும் மதங்கொண்டும் மயங்கியும் முயங்கியும் களைத்து உறங்கியும் காட்சி தருகின்றனர். ஆதிகாவியம் தீட்டிய இச்சித்திரத்தை அடித்தளமாகக் கொண்டு இலங்கையின் அரண், படை, குடி பொருள் ஆகியவற்றைக் கற்பனை வளத்தோடும், கருத்துச் செறிவோடும் விளங்க வைக்கும் அற்புதமான கவிதா மாளிகையைக் கம்பன் படைத்துவிடுகிறான்.

1. அரணும் படையும்

ஆழியையே அகழியாகக் கொண்ட இலங்கையின் புறமதில், வானவர் உலகின் மேல்வெளியையும் கடந்து உயர்ந்து நிற்கிறது. இம்மதிலின் ஒளி கண்டு, பகலவனும் கண்கூசுவான். இதனை ஏறிக் கடந்து உட்புக முடியாது என்றே அவன் ஒதுங்கிச் செல்கிறான். இம் மதிலின் பரப் பினைக் கண்டு அண்டமே வருந்துகிறது. எண்ணற்ற பகைவர் வந்து அமர் நிகழ்த்தினாலும் இதனை அடைவது அரிது என்பான் அனுமன். "கிளர்வெள்ளத்து ஊழிதிரி நாளும் உலையா மதில்" என்று கூறிக் கம்பன் இதன் திண்மை யினைப் புலப்படுத்துவான். யுக முடிவில் பொங்கி எழும் கடற் பெருக்கில் உலகமெல்லாம் நிலைகுலையும் என்பர். அப்போதும் அசையாது இம்மதில் என்பது கவிஞன் கூற்று. இவ்வாறு,

உயர்வு, அகலம், திண்மை அருமைஇந் நான்கின்
அமைவு அரண் என்றுஉரைக்கும் நூல் (743)

என்று குறள் கூறும் இலக்கணத்தைத் தழுவி இலங்கையின் மதிலை வர்ணிக்கிறான் கம்பன்.

இம் மதிலின் வாயிலைக் கண்ட அனுமன், மேருவை நிறுத்தி வெளி செய்தனரோ என்று வியக்கின்றான். அமராவதி புகுவதற்கு அமைந்த ஏணியோ இது என்று அயர்கின்றான். மேலேழு உலகங்களும் தாழாமல் தாங்குவதற்கு நடுவில் அமைந்த தூண்போலும் என்று திகைக்கின்றான். எல்லா உலகத்தினரும் ஒன்றாய் வந்தாலும் ஒருசேரப் புகுவதற்கு இடமுண்டு என்று உணர்கின்றான். இவ்வாயிலை முந்நூறு வெள்ளம் வீரர் (வெள்ளம்: பெருந்தொகையைக் குறிக்கும் ஓர் எண்) காத்து நிற்பதைக் கண்ட அனுமன்,

எவ் அமரர், எவ் அவுணர், ஏவர் உளர், என்னே!
கவ்வைமுது வாயிலின் நெடுங்கடைகடப்பார்?
தெவ்வர் இவர்! சேமம் இது! சேவகனும் யாமும் [1]
வெவ் அமர் தொடங்கிடின் எனாய்விளையும்? என்றான்.

(5, 2, 72)

எந்தத் தேவராலும் எந்த அவுணராலும் இந்த வாயிலைக் கடக்க முடியாது என்று அனுமன் உணர்கின்றான். பகைவரும் அவர்தம் அரணும் இத்தகையது என்றால், போரின் விளைவு யாதாமோ என்று துணுக்கமடைகின்றான் [2]

---

1. கவ்வை-ஆரவாரம். நெடுங்கடை-பெருவழி. தெவ்வர்-பகைவர். சேமம்-அரண். சேவகன்-இராமன்.

2. முதனூல் அனுமனும் இவ்வாறே கலக்கம் அடைவான். எதிரிகளை இன்சொல்லால் தன்வயமாக்குதலுக்கு இடமில்லையென்றும், தானம் கொடுத்துக் கோடலுக்கு வாய்ப்பு இல்லையென்றும், பிரித்தலுக்கும் சந்தர்ப்பம் இல்லையென்றும், போரைப்பற்றி எண்ணவும் முடியாதென்றும் அவன் கூறுவான். சாம தான பேத தண்டம் என்ற நான்கு உபாயங்களையும் இவ்விதம் எண்ணிப் பார்ப்பான். தானத்தின் பெயரால் இலஞ்சம் கொடுப்பதும், வஞ்சனையாகப் பிரித்தாள முயல்வதும் 'அறத்தின் மூர்த்தி' யான இராமனுக்கு ஒவ்வா; "மெய்ம்மையின் வேலி"யான அனுமனது சிந்தனைக்கும் பொருந்தா ; எனவே, கம்பன் இவற்றைக் கொள்ளாது தள்ளிவிடுகிறான்.

இக் காவற்படையினைக் கருதும்போது, கருங்கடலைக் கடப்பதும் எளிதெனத் தோன்றுகிறது. எனவே,

> கருங்கடல் கடப்பது அரிதுஅன்று; நகர்காவற்
> பெருங்கடல் கடப்பது அரிது (5,2,73)

என்று எண்ணுகின்றான்.

இலங்கை அகநகர், இடைநகர், புறநகர் என்ற மூன்று பிரிவுகளை உடையது. அகநகரையும் இடைநகரையும் கூடத் தனித்தனி அரணும் அகழியும் காத்து நின்றன. ஆக, இலங்காபுரி மும்மதில்களையும் மூவகழிகளையும் காப்பாகக் கொண்டு விளங்கியது.

இராவணனது படைஞர் பலகோடியர். அவர்கள் வரபலம் பெற்ற வீரர்; மாயத்தில் வல்ல ஆயத்தார்; உடல் வலுவாலுயர்ந்த அடல்வீரர். இவர்களைக் கண்ட அனுமன்,

> விற்படை பெரிதுஎன் கேனோ?
> வேற்படை மிகும்என் கேனோ?
> மற்படை உடைத்துஎன் கேனோ?
> வாட்படை வலிதுஎன் கேனோ?
> கற்பணம், தண்டு, பிண்டி
> பாலம்என்று இனைய காந்தும்
> நற்படை பெரிது என் கேனோ?—[1]
> நாயகற்கு உரைக்கும் நாளில் (5,2,41)

என்று அயர்கின்றான்.

2. பொருளும் குடிகளும்

எட்டுத் திக்கோடும் உலகனைத்தும் சமரில் வென்ற தசமுகனது தலைநகரில் பொருள் குவிந்து கிடந்ததென்

---

1. கற்பணம்-கப்பணம்: நெருஞ்சிமுள்போல் இரும்பில் செய்த படைக்கலம். பிண்டிபாலம்-எறிபடை. காந்தும்-ஒளிரும்.

பதில் வியப்பில்லை. பொன்னால் இழைத்ததோ, மணியால் பதித்ததோ, மின்னலால், அமைந்ததோ, வெயிலால் சமைந்ததோ, என்கொண்டு இயன்றது என்று அறிய முடியா வண்ணம் பேரொளி வீசிய மாடங்களில் அரக்கர்கள் வாழ்ந்தனர். இம்மாடங்கள் மேகங்களைக் கடந்து மதி மண்டலத்தைத் தொட்டன. இந்நகரில் மரமெலாம் கற்பகம், மனையெலாம் கனகம். அரக்கர் அரக்கியர் வெறுத்து வீசிய அணிகளால் வீதிகள் தூர்ந்தன. முதற் பார்வையில், விண்ணுலகத்தின் மறுபதிப்பாகவே பவள மலையில் நின்ற அனுமனுக்கு இலங்கை காட்சி அளித்தது.

விண்ணிடை உலகம் என்னும்
மெல்லியல் மேனி நோக்கக்
கண்ணடி வைத்தது அன்ன[1]
இலங்கையைத் தெரியக் கண்டான் (5, 1, 91)

ஆனால் இக்கருத்தின் பிழையை விரைவில் உணர்கிறான்.

மரகதத்தினும், மற்றுள மணியினும், வனைந்த
குரகதத்தடந் தேர்இனம் அவைபயில் கொட்டில்
இரவி வெள்கநின்று இமைக்கின்ற இயற்கைய என்றால்
நரகம் ஒக்குமால் நல்நெடுந் துறக்கம், இந்நகர்க்கு[2]
(5, 2, 14)

குதிரை பூட்டிய தேர்கள்கூட மரகதத்தாலும் மற்றுள்ள மணியாலும் அமைந்துள்ளன. அவற்றின் கொட்டில்களோ சூரியன் வெள்க ஒளிர்கின்றன. எனவே, இலங்கையுடன் ஒப்புநோக்கினால் சுவர்க்கமும் நரகமென்றே மதிக்கப் பெறும் என்கிறான் அனுமன்.

---

1. விண்ணிடை உலகம்-வானுலகம். மெல்லியல்-பெண். கண்ணடி-கண்ணாடி.

2. வனைந்த-செய்த. குரகதம்-குதிரை. வெள்க-வெட்கப் படும்படி. இமைக்கின்ற- ஒளிவிடுகின்ற.

இந்நகரில் வாழ்ந்த அரக்கர் யாவரும் பகலும் இரவும் இன்பத்தில் திளைத்தனர்.

> *பளிக்கு மாளிகைத் தலம்தொறும், இடம்தொறும் [பசுந்தேன்*
> *துளிக்கும் கற்பகத் தண்நறுஞ் சோலைகள் தோறும்,*
> *அளிக்கும் தேறல்உண்டு, ஆடுநர் பாடுநர் ஆகிக்*[1]
> *களிக்கின்றார்அலால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்*
> (5, 2, 30)

என்று இருள் சூழ்வதற்குமுன் அரக்கர் இருந்த நிலையினைக் குறித்துப் பேசுவான் அனுமன். மேலும்,

> *தேறல் மாந்தினர்; தேன்இசை மாந்தினர்; செவ்வாய்*
> *ஊறல் மாந்தினர்; இன்உரை மாந்தினர்; ஊடல்*
> *கூறல் மாந்தினர்; அனையவர்த் தொழுது, அவர் கோபத்து*
> *ஆறல் மாந்தினர்—அரக்கியர்க்கு உயிர்அன்ன அரக்கர்*
> (5, 2, 31)

என்று தான் பகலில் கண்ட காட்சியைப் படம்பிடித்துத் தருகிறான் மாருதி. அரக்கியர் வழங்கிய மதுவையும், இன்னிசையையும், இதழ் ஊறலையும் அரக்கர் விரும்பிப் பருகினர். மகளிர் பிணங்கிப் பேசிய சுடுசொற்களையும் பிரியத்தோடு மாந்தினர். ஊடிய மாதரைத் தொழுது, அவர்கள் கோபம் ஆறுவதைக் கண்டும் இன்புற்றனர்.[2]

அரக்கியர் என்றால் கூகைக்கண்களும், கோரைப்பற்களும், கடுத்த குரலும், காணக் கண் கைக்கும் வடிவும்

---

1. பளிக்கு-பளிங்கு. பசுந்தேன்-புதியதேன். அளிக்கும்-(பணியாளர்) அளிக்கும். தேறல்-மது. கவல்கின்றார்-கவலைப் படுகின்றவர். ஒருவரை-ஒருவரையும்.

2. அனுமன் இலங்கையினுள் இரவிலே புகுந்தான் என்று தான் முதனூலைத் தழுவிக் கதையை நடத்துகிறான் கம்பன். ஆனால், பவளமலையில் நின்றவாறே இலங்கை அரக்கரும் அரக்கியரும் பகற்பொழுதைக் கழித்த விதரணையை அனுமன் கண்டான் என்று கம்பன் புதிதாகக் கற்பனை செய்கிறான். இதன்மூலம், போகநுகர்ச்சி ஒன்றே அரக்கரது கருமமாயிருந்தது என்பதை விளங்க வைக்கிறான்.

உடையவர் என்று நாம் எண்ணுவோம். ஆனால் இலங்கை அரக்கியரை மானுட மங்கையருக்கு நிகரான அழகியராகவே கம்பன் வர்ணிப்பான். அவர்கள் 'தளிர்க்கையர்', 'வெள்ளமும் நாண்உற விரிந்த கண்ணினர்' (வெள்ளம்-கடல்), 'தள்ளுறு மருங்கினர்' (மருங்கு-இடை), 'தாமரை முழுமுகத்து இரு கயல்விழி' உடையர் என்று முன்பே சூர்ப்பணகைப் படலத்தில் கூறினன். இங்கும் (அனுமன் ஊர்தேடு படலத்திலும்) அவர்களை,

குழலும் வீணையும், யாழும், என்று
இனையன குழைய,
மழலை மென்மொழி கிளிக்கு இருந்து
அளிக்கின்ற மகளிர்[1] (5,2,6)

என்று வர்ணிப்பான். விளரிப் பண்போல் இனிமையாகப் பேசுவோர் (விளரிச் சொல்லியர்) என்றும் மொழிவான். இவர்களது கண்களைக் குவளைக்கும் வேலுக்கும் ஒப்பிடுவான். செவ்வாய்க்குச் செவ்வாம்பலை உவமை காட்டுவான். இசையிலும் கூத்திலும் வல்லவர் என்றும், சிற்றின்பக் கலையில் தேர்ந்தவர் என்றும் செப்புவான். கூந்தல் ஒன்றே அவர்கட்குக் கரியதாக இல்லாமல் சிவப்பாக அமைந்தது என்பான்.

இத்தகைய மகளிரோடு பகலும் இரவும் போகம் நுகர்தல் ஒன்றையே அரக்கர் அனைவரும் கருமமாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு வேறு தொழில் யாதும் கிடையாது.

இலங்கையில் அரக்கர் அல்லாதவரும் இருந்தனர். அவர்கள் அடிமைகளாக உழைத்தனர்.

---

1 குழைய-தோல்வியுற.

அரமடந்தையர் சிலதியர், அரக்கியர்க்கு; அமரர்
உரம்அடங்கிவந்து உழையராய் உழல்குவர்[1] (5,2,9)

என்பான் கம்பன்.

அமரரோடு அவுணரும் இயக்கரும் வித்தியாதரரும் நாகரும் கூடத் திருநகரில் வாழ்ந்த நிருதருக்குக் குற்றேவல் புரிந்தனர். புதுமனை புகும் அரக்கியர்க்கு நாககன்னிகைகள் பல்லாண்டிசைப்பதையும், கின்னரர் கீதம் பாடுவதையும் அனுமன் கண்டான். பூஞ்சேக்கைகளில் பொருந்திய அரக்கர் அரக்கியர் முன்னிலையில் கந்தருவ மாதர் நடனம் ஆடுவதை அவன் பார்த்தான். இல்உறை தெய்வங்களுக்கு (வீட்டில் எழுந்தருளியவை) நிருதமாதர் பூப்பலி இடும் போது, அரம்பையர் கரங்களால் தாளம் கொட்டி மங்கல கீதம் பாடுவதை நோக்கினன். மயில் அனைய நிருத மங்கையரை ஆகாயகங்கை நீரில் அமர மாதர் குளிப்பாட்டுவதையும் அவன் கண்டான்.

இந்த ஏவலர் வினைவலரில், பகலில் வேலை செய்வோரும் உண்டு; இரவில் வேலை செய்வோரும் உண்டு. தேவமாதரும் வித்தியாதர வனிதையரும் நாககன்னிகைகளும் இயக்கியரும் அரக்கர் கருதிய பணிகளைக் குறிப்பால் உணர்ந்து சிறப்பாகச் செய்துவிட்டு, உரிய காலத்தில் முறை மாறியவுடன் உறைவிடம் சென்றனர்.

பொன்னகர் மடந்தையர், விஞ்சைப் பூவையர்,
பன்னக வனிதையர், இயக்கர் பாவையர்,
முன்னின பணிமுறை மாறி முந்துவார்,
மின்இனம் மிடைந்தென, விசும்பின் மீச்செல்வார்.[2]
(5,2,49)

---

1 அரமடந்தையர்-தேவ மாதர். சிலதியர்-குற்றேவல் செய்வோர். அடங்கி-ஒடுங்கி. உழையர்-ஏவலர்.

2 விஞ்சையர்-வித்தியாதரர். பன்னக வனிதையர்-நாக கன்னிகைகள். முன்னின-(அரக்கர்) கருதிய. மின் இனம்-மின்னற் கூட்டம். மிடைந்தென-செறிந்தாற்போல்.

இரவில் கருமம் புரியும் பணியாட்கள் இருள் சூழ்ந்தவுடன் விரைந்து வந்தனர்.

தேவரும், அவுணரும்,
செங்கண் நாகரும்,
மேவரும் இயக்கரும்,
விஞ்சை வேந்தரும்,
யாவரும், விசும்புஇருள்
இரிய ஈண்டினர்,
தாஅரும் பணிமுறை[1]
தழுவும் தன்மையார். (5,2,50)

சித்திரப்பத்தியில் வந்த தேவர், ''காலம் தாழ்ந்தோம், ஏதம் விளையும்'' என்று பதறி ஆடையும் அணியும் நிலைகுலைய, ஓடுவாராயினர் என்பான் கம்பன். (ஏதம்-துன்பம்)

ஆக, இலங்காபுரியில் செருக்கிநின்ற அரக்கரும் உண்டு. சென்று சேவித்த தேவர் முதலானோரும் உண்டு. அமரரும் பிறரும் உரம் அடங்கிச் சிரம் தாழ்த்திக் கரம் குவித்துச் சேவகம் புரிந்தனர். அந்த அடிமைகளுக்கு எஜமானராக நிருதர்கள் விளங்கினர்.

இலங்கையில் செல்வம் நிறைய இருந்தது என்பது உண்மை. ஆனால் அது அரக்கர்கள் உழைத்துத் தொகுத்த செல்வம் அன்று. பிறரிடம் கவர்ந்துகொண்ட செல்வமே. 'பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள'' என்றார்.

1 மேவரும்-விரும்பத்தக்க(அழகுஉடைய). இரிய-நீங்க. ஈண்டினர்-திரண்டனர். தாஅரும்-தவறாத.

இராவணன் அமரர் முதலானோரை வென்றவன் என்றும், பல வேற்றின மாதர்கள் இலங்கையில் சேவகம் செய்தனர் என்றும் முதனூல் கூறுவது உண்மை. ஆனால் தேவர், இயக்கர், நாகர் முதலான பல இனங்களைச் சேர்ந்த எண்ணற்ற ஆண்களையும் பெண்களையும் அடிமைப்படுத்தி ஏவலராகக் கொண்டு ஏற்றம் கண்ட பேரரசுச் சிறப்பைக் கம்பனது இலங்கையிலேயே காண்கிறோம்.

வள்ளுவர் (பூரியார்-கீழோர்). அதன் உண்மைக்கு இலங்கை சான்று ஆகும். எனவேதான், சுவேலமலையின் உச்சியில் நின்று இலங்கையின் செல்வச் சிறப்பைக் கண்டு வியந்த இராமன், அங்குள்ள நீலமணிக் குன்றுகளைப் பாவக்குவியல் களுக்கு ஒப்பிட்டான்.

ஈவது தெரியா உள்ளத்து
இராக்கதர் ஈட்டி வைத்த
பாவப்பண் டாரம் அன்ன,
செய்குன்றம் பலவும் பாராய். (6,9,21)

இலங்கையே ஒரு பாவப் பண்டாரம் தான்.

இப் பாவக்கோட்டையின் புறமதில் வழியே அறம் புக முடியாதென்பதில் வியப்பில்லை. எனவே கதிருக்கும், சுழல் காற்றுக்கும், கூற்றுவன் கொடுமைக்கும் தடுப்பாக இருந்த மதில், அறத்துக்கும் தடையாகத் திகழ்ந்ததென்பான், பவள மலையிலிருந்து நெடிது நோக்கிய அனுமன் :

கறங்கு கால்புகா; கதிரவன் ஒளிபுகா; மறலி
மறம்பு காது; இனி வானவர் புகார்என் கைவம்பே!
திறம்பு காலத்துள், யாவையும் சிதையினும் சிதையா[1]
அறம்பு காதுஇந்த அணிமதில் கிடக்கைநின்று
அகத்தின்! (5,2,23)

ஆனால் எந்த விதிக்கும் விலக்கு உண்டு. பல வழியாய் கவர்பட்டு ஓடவல்ல வெள்ளமும் விலைமகளிர் உள்ளமும் விலங்கும் பறவையும் ஒரு வழியாய் ஓடின என்று இயம்பி, நன்னெறியில் சென்றவரல்லது புன்னெறியில் போந்தவர் எவருமில்லை என்று கம்பனால் குறிக்கப்பெற்ற கோசலத்தில் தானும்,

---

1 கறங்கு கால்-சுழன்று வீசும் காற்றுக்கள். மறலி-யமன் மறம்-கொடுமை. வம்பே-வீணே (வாணவர் அனுமதியின்றி புகார் என்பது சொல்லாமல் விளங்கும்). திறம்பு காலத்துள்-உலகம் நிலைகெடும் யுகமுடிவில்;

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்ன அருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

கரவும் விரகும் அறியாத் தூயளாயினும், அறிவின் ஊற்றம் இன்மையால், அயோத்திக்கு அவலம் சூழும் தீயளாய்க் கைகேயி மாறினாள். கொடுமனக் கூனியின் தோற்றமும் கைகேயியின் மனமாற்றமும் அறம் திறம்பாக் கோசலத்துக்கு விதிவிலக்கான நிகழ்ச்சிகள் தாம். ஆனால் இவை விதியை மெய்யாக்கும் விலக்குகளே. அதுபோலவே, அறம் புகா இலங்கையிலும் விதிவிலக்கான சிலர் அறம் பேணினர். கொழுநனைத் தொழுது வாழும் கற்புக்கரசியாக மண்டோதரி விளங்கினாள்: மாயாப் பழியும் மீளா நரகும் வந்துற்றாலும், நீதியால் வந்த நெடுந் தருமநெறி தவறேனென்று உறுதிகொண்டு செயற்பட்டு இறவாப் புகழ் எய்திய வீடணன் தோன்றினான். தந்தையைப் போலவே அறவழியில் ஒழுகிய திரிசடை வாழ்ந்தாள். அறவழி பயிலும் திறம் இல்லெனினும், அறம் எதுவென்பதை ஓர்ந்து, காமம் பேணும் ஈனத்தை வெறுத்த கும்பகருணனும், மாலியவானும் வாழ்ந்தனர். சாமானிய அரக்கரிலும் சிலர் உத்தமராயும் யோகியராயும் இருந்தனர் என்று ஊகிக்கலாம். நகரெங்கும் சீதையைத் தேடிச் சென்ற அனுமன், எங்கும் நிருதரது போகத்தையும், அல்லாதவரது சோகத்தையுமே கண்டான் என்பதை முன்னர் கூறினோம். ஆனால் காரிருளில் தோன்றிய மின்னல்போல் இடைநகரில் ஓர் இடத்தில் உத்தம நிருதர் சிலரையும் அவன் கண்டான்:

நித்தம் நியமத் தொழிலராய், நிறையும் ஞானத்து
உத்தமர் உறங்கினர்கள்; யோகியர் துயின்றார். (5,2,165)

இவ்வாறு அறம் தழுவி வாழ்ந்தவர் சிலரே. அறம் கொன்று கொடுமை இழைத்தவரே பலர். அதனால் அறம் புகா இலங்கை என்றது முற்றிலும் பொருத்தமே.

இரக்கம்என்று ஒருபொருள் இலாத நெஞ்சினர்,
அரக்கர்என்று உளர்சிலர், அறத்தின் நீங்கினார் (4,3,12

என்று இவ்வரக்கர்களால் அலைப்புண்ட தண்டக முனிவர் இராமனிடம் உரைத்தது உண்மையே.

3. கொற்றவன் கொலு

தசமுகன் கொலுவீற்றிருக்கும் பரிசே அவனது ஏகாதிபத்தியச் செருக்கையும் கொடுமையையும் விளங்க வைக்கிறது. அடாதன செய்ய முயன்று அங்கபங்கமான சூர்ப்பணகை இலங்கைக்கு வரும்போது இராவணன் ஓலக்கம் கொடுத்த காட்சியை இருபத்தி இரண்டு செய்யுட்களில் வருணிக்கிறான் கம்பன்.[1] இராவண கொலுவின் சித்திரம், யாவரையும் வருத்தும் கண்டகனுக்கு எதிராகக் கனன்று எழச் செய்வதாயில்லை என்பது மெய். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்று அறியாத கம்பன், அழிவின் நுழைவாயிலில் நிற்பதையும் ஓராது ஆர்ப்பாட்டம் செய்யும் அரக்கனிடமும் பரிவு கொள்கிறான். தகாதன செய்தவனே என்றாலும், இனியாவது திருந்தினால் நலமாகுமே என்று எண்ணத்தக்க வகையில், காட்சியை அமைக்கிறான். இராவணன் அத்தாணிக் காட்சி கேலிக்கூத்தாகச் சிறுமை உறவில்லை; போற்றுவதற்கு உரியதாகப்

1. சுந்தர புருஷன், காந்தி முகத்தன், விசால மார்பன், நீண்ட கையினன் என்றும், செந்தழல் விழியினன், வாய் திறந்த யமன்போன்ற பயங்கரத் தோற்றத்தான் என்றும் தசமுகனது உருவினை விவரித்து விட்டு, அறம் கொன்று, வேள்வி அழித்து, சோலை குளங்களைப் பாழாக்கி, மக்கட்குத் துன்பம் விளைவித்து உலகத்தை அழவைக்கும் கொடியன் என்று அவனது குணங்களைக் கூறிவிட்டு, அவன் புஷ்பக விமானத்தில் பொன்னாலான மேடையில் மந்திரிமார்களுடன் அமர்ந்திருந்தபோது சூர்ப்பணகை வந்தாள் என்று வான்மீகம் கூறும். கம்பன் கண்ட களம் இது. ஆனால் அவன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அகண்ட பேரரசின் சக்கரவர்த்தி ஒருவனது ஓலக்கப்பரிசைச் செவ்வையாகப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறான்.

பொலிவு பெறவுமில்லே. அதிநாடக யுத்தியை ஆண்டு, அரக்கனது இறுமாப்பையும் கொடுமையையும் எடுத்துக் காட்டுகிருன் கம்பன்.

விசுவகருமன் வனேந்த மணிமண்டபத்தில் இராவணன் எழுந்தருளியிருக்கிருன். திசைக் களிறுகளின் மருப்பை ஒடிக்கும் திறம் படைத்த அவனது தடந்தோட்கள் உதய பர்வதம்போல் ஒளிர்கின்றன. புலித்தோல் புனேந்த நெற்றிக் கண்ணனும், பொன்னுடை அணிந்த திருமார்பனும், மலரில் தோன்றிய நான்முகனும் அவனே நலியும் வலத்தார் அல்லர். சிற்றின்ப லோலன் என்ருலும், உத்தம இலக்கணம் பொருந்தப்பெற்ற மடந்தைமார் ஊடியபோதும் வணங்காத மகுடபதி அவன். அவனது வயிரக்குன்றம் அனேய புயங்களே நோக்கினுல், ஆதிசேடன் படம் எடுத்து ஆடுவதுபோல் தோன்றும். புயங்களில் கிடந்த இரத்தினங்கள், படங்களின் மணிகளேப்போல் ஒளிரும். எண்ணற்ற மகுடபதிகள் அடி பரவித் தொழுவதால் அவனது சேவடிக் கழல் தேய்கிறது. அம்மணிக்கழல் தேய்வுறத் தேய்வுற நவநவமான ஒளியை நல்குகின்றது.

மூவகை உலகின் மன்னர்களும் திறையாகச் செலுத்திய பொன்னும், வாழ்த்துக் கூறிய தேவர் சொரிந்த பூவும் அரசவை எங்கும் குன்று குன்ருகக் குவிந்துள்ளன. அவை யில் கூடிய அரசர்களோ, அச்சமும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்டவராய் ஒடுங்கிக் கிடக்கிருர்கள்.

இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர், கரதலம் சுமந்த உச்சியர்,
மின்அவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்[1]
துன்னினர், முறைமுறை துறையில் சுற்றவே (3,7,8)

---

1. உன்னலர்–அறியாதவர். கரதலம் சுமந்த உச்சியர்–தலேமீது கரம் கூப்பியவராய். துன்னினர்-நெருங்கினர். முறை முறை-வரிசை வரிசையாக. துறையில்-அவரவர்க்கு வகுத்தஇடத்தில். சுற்றவே-சூழவே.

என்பான் கம்பன். இராவணேசுவரனது பார்வைக்கு எந் நேரத்திலும் இலக்கு ஆகலாமென்று அஞ்சிய வித்தியாதர வேந்தர்கள், வருமுன் காப்போராக, எப்போதும் சிரம்மேல் கரம்கூப்பிக் காட்சி தருகின்றனர்.

சிங்க ஏறுவை நிகர்த்த சித்தர்குல மன்னர்களோ, மன்னுதி மன்னன் பணிப்பெண்களிடம் ஏதாவது உரைத் தாலும் தமக்குத்தான் ஆணை வருகிறதென்று கைகூப்பித் தலை தாழ்த்தி மனமடங்கி நிற்பர்.

மங்கையர் திறத்துஒரு மாற்றம் கூறினும்,
தங்களைஆம் எனத் தாழும் சென்னியர்,
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்,
சிங்கஏறு எனத்திறல் சித்தர் சேறவே[1] (3,7,9)

அரக்கன் அமைச்சரை அண்மையில் அழைத்து இன் மொழி பகர்வான். அதனைக் கண்டு, அவன் உரைப்பதெல் லாம் தம்மை ஒறுப்பதற்கே என்று நடுங்கிய கின்னரவேந்தர் ஒடுங்கி வணங்குவர்.

அன்னவன் அமைச்சரை நோக்கி, ஆண்டுஒரு
நல்மொழி பகரினும் நடுங்கும் சிந்தையர்,
'என்னைகொல் பணி?' என இறைஞ்சுகின்றனர்,
கின்னரர், பெரும்பயம் கிடந்த நெஞ்சினர். (3,7,10)

அவையில் இசை வழங்குவார் இருவர்: ஒருவர் கந்தரு வரான தும்புரு கொற்றவன் திக்கு யானைகளை வென்ற பெருமையையும், வெள்ளிமலையைப் பெயர்த்த சாதனையை யும், புரந்தரனைப் போரில் அடக்கிய கீர்த்தியையும் அவர்

1. சென்னி-தலை. ஆக்கை-உடல். சிங்க ஏறு-ஆண் சிங்கம். முன் செய்யுளில் விஞ்சை வேந்தர் என்றதால் அந்த இனம் கருதி இங்குச் சித்தர் என்பதற்குச் சித்தர் வேந்தர் என்று பொருள் கொள்வர்.

பாடுகிருர். மற்றெருவரான நாரதரோ நெறிமுறை திறம்பாது யாழ் நரம்பை வருடி இசை கூட்டிச் சாமகானம் என்ற இனிய தேனை இராவணனுக்கு வழங்குகிருர்.

மானையும் மயிலையும் நிகர்த்த மாதரின் துகில் நனைந்து உடல் தெரிந்தால் காவலன் கடிவானென்று அஞ்சிய வருணன், கூசிக் கூசித் தேன் கலந்த நீர்த் திவலையை வீசுகிருன். அவையில் சிதறிய தாதும் தேனும் மணியும் முத்தும் கூட்டும் தொழிலை வாயுதேவன் மேற்கொண்டிருக்கிருன். பெருமதிப்புக்குரிய வியாழனும் வெள்ளியும் இந்திரன் முதலானேர்க்கு இருக்கை அளிக்கும் பணியினை ஆற்றுகின்றனர். கூற்றுவனே "சேலையால் செறிய வாய்புதைத்த செங்கையனுய்" நாழிகை கூறும் தொழிலைப் புரிகின்ருன். அக்கினிதேவன் விளக்கு வரிசையை ஏற்றிவைக்கிருன். அமரர் செல்வங்களான கற்பகத்தருவும் காமதேனுவும் சங்கநிதி பதுமநிதி முதலாய நவநிதிகளும் தேவ மணிகளும் கொற்றவன் அருள்புரியும் சமயம் அறிந்து பணியாற்றுகின்றன. கங்கை முதலிய கடவுட் கன்னியர் செங்கையால் அரிசியும் மலரும் தூவி மங்கல வாழ்த்து உரைக்கின்றனர். கரிய பெரிய கண்களை உடைய மாதர் பலரிடையே பொருந்திய மன்னவன்; ஊர்வசி முதலிய அரம்பையரது அருநடம் நோக்குகிருன்.

பெருந்தன்மை அறியாத பேரரசனது கொலு இது. அச்சம் பெருக்கி அதிகாரம் செலுத்தும் ஆணவம் இங்கு கொடிகட்டிப் பறக்கிறது. காலன் வருணன் போன்ற கடவுளரையும், வியாழன் வெள்ளி என்ற குருமார்களையும், கின்னரர் சித்தர் முதலியோரின் வேந்தர்களையும் இராவணனது ஆணவம் இப்பாடுபடுத்திய தென்ருல், மற்றவரைப்பற்றி, அதிலும் சிறப்பாக மானிடரைப்பற்றி, இயம்புவதற்கு என்ன இருக்கிறது? அந்தக் கொச்சைப் பிறவிகளை ஒரு பொருட்டாக மதியாத பேரரசன் அவன்.

அரசவையிலும் மங்கையர் இன்பத்தை மறவாத மன்னன் இராவணன். காமம் வெகுளி முதலிய பகைகளை வென்று தவம் புரிந்து வலிமை பெற்ற அரக்கன், காமத்துக்கே அடிமையாகிவிட்டான்.

இதனை இரக்கம் தோன்ற எடுத்துரைப்பான் கம்பன்:

இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும், தன்
அருந்தவம் உடைமையின், அளவுஇல் ஆற்றலின்
பொருந்திய இராவணன், புருவக் கார்முகக்[1]
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே. (3,7,23)

அருந்தவ ஆற்றலால் மூவுலகையும் வென்றவன், மாதர் தம் கண்ணின் வெள்ளத்திடையே இருந்தனன் என்று கூறுகிறுன் கவிஞன். அம் மாதர்கள் வில்லனைய புருவத்தின் அழகால் அவனை வசப்படுத்துவர். கூறிய அம்பினை ஒத்த பார்வையால் அவனைத் துளைப்பர். இராவணனது காம வெறியை எடுத்துரைக்கும் இக்குறிப்பு, சூர்ப்பணகை சூழ்ச்சியின் வெற்றிக்கு முன்னறிவிப்பாக விளங்குகிறது.

4. அரசனுக்கு ஏற்ற அமைச்சர்

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். (443)

என்ருர் வள்ளுவர். அந்த அரிய செயலை இராவணன் இயற்ருனயினன். தட்டிக் கேட்பதற்கு ஆளில்லாத அவனது ஆட்சி முறையினையும், அத்தனியாட்சியின் கொடுமையையும் மாரீசன் வதைப் படலத்திலேயே காண்கிருேம்.

குருதி வழிந்தோடும் கொங்கையும், அறுந்த செவியும், முறிந்த மூக்கும், திறந்த வாயுமாக வருகிருள் சூர்ப்பணகை. முடை வீசும் முழை அனைய வாயால் (முழை-குகை) யுகக் கடல் ஒலி காட்டி வரும் அரக்கியைப் பொருக்கென

---

1 கார்முகம்-வில்.

நோக்கிய அரக்கர் இடியெனக் கதறி விழிக்கின்றனர்' இராவணன் தங்கை என்ருல், அன்னேயே என்று அடி பரவுதல் அல்லால், துன்பமே செய்வாரும் உளரோ? இந்திரன் அடிமையாகிவிட்டான்; சிவன் மலையிலும், மால் கடலிலும் கரந்து வாழ்கின்றனர். இந்நிலையில், இவளே வருத்தியவர் யாவர்? தன்னேயே அரிந்தாள் போலும் என்றனர் சிலர். கற்புத் தவறியதால் கரனே குலைத்தானே என்றனர் சிலர். அஞ்சி வாழும் அமரர், தமக்குப் பின் பிரளயமே நிகழட்டுமென்று துணிந்து செய்ததோ என்றனர் சிலர். இது முனிவர்தம் கோபத்தின் முடிவோ என்றனர் சிலர். கணவரைத் தழுவிய மங்கையர், அழுகுரல் கேட்ட வுடன், கரங்களே நெகிழவிட்டுக் கண்ணழியக் கலுழ்வர். ஊஞ்சல் ஆகிய வனிதையர் வீதிக்கு ஓடுவர். உறங்கிய மடந்தையர் விழித்துப் புலம்புவர்.

குன்றின் அடியில் கொண்டல் (மேகம்) படிந்ததென்னத் தமையன் தாளில் தங்கை விழுகிருள். இதனைக் கண்டு மூவுலகும் இருள்கிறது. தமையன் பாதம் பூமியில் பாவவே ஆதிசேடன் நடுங்குகிருன்; திசைக்களிறுகள் ஓடி மறைகின்றன. இராவணனுக்குச் சீற்றத்தால் பூரித்த தோட்களேயும் பொங்கிய விழிகளேயும் நெறித்த புருவங்களேயும் கண்டு, புவனங்களே நிலைகுலைந்து சுழல்கின்றன, வானவரும் ஏனையோரும் தமக்கு இறுதி வந்துற்றதென்று பதறுவாராயினர்.

இராவணன் இழிவுறப்போவதைப் படிப்போர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியவைப்பதற்காகவே, இவ்வாறு வல்லியல் நாடகக்[1] காட்சியாகப் பீடிகை அமைக்கிருன் கவிஞன். இலங்கையில் விலங்கும் அடையாத் துன்பம் இராவணன் தங்கைக்கு நேர்ந்துவிட்டது. எனவே, இது பேரிழப்பு என்று அனைவரும் கருதியதில் வியப்பில்லை.

---

1 வல்லியல் நாடகம்-அதிநாடகம்; ஆங்கிலத்தில் Melodrama என்பர்.

இராவணனுக்கு நேர்ந்த முதல் இழவு அல்ல இது. பல்லாண்டுகளுக்கு முன்பே, இவனது பாட்டியான தாடகையை-பெண்ணுருக்கொண்ட பாவத்தை-இராமன் பருந்துக்கு உணவாக்கினன். அரக்கனது வெற்றிப் பதாகை அறுந்து விழுந்ததற்கு இணையான உற்பாதம் அது. மேலும் மருந்தினும் இனிய மாமன்மாரான சுபாகுவும் மாரீசனும் கோசிக முனிவரின் வேள்வியைக் குலைக்க முயன்றபோது, சுபாகு இராமனது வாளிக்கு இரையானன். மாரீசனே தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓடிவந்து முனிவர் வேடத்தில் வாழ்கின்றன். மமதையால் தடித்த சக்கரவர்த்திக்கு இச்சிறுமைகள் உறைக்கவில்லை. இப்போது யாழும் குழலும் மிழற்றுவதல்லால், முழவும் முரசும் ஒலிப்பதல்லால், வேறு ஒன்றையும் கேளாத; இலங்கையில் அழு குரல் கேட்கிறது. தன் உயிரினுமினிய தங்கையே வனப்புக்குரிய உறுப்பு இழந்து தாளில் கிடக்கிருள். இராவணன் சினந்து சீறுகிறன்.

'யாவர் செயல்?' என்று வினவுகிறன் கோமகன். ஊனுடைய மானிடர் செயல் என்று விடை தருகிருள் சூர்ப்பணகை. பாட்டிக்கு நேர்ந்த கேட்டை மறந்த தமையன் இதை நம்பினனல்லன். "பொய்தவிர்; பயத்தை ஒழி; புக்க புகல்'' என்றன். அரக்கர் குலத்தை வேரோடு கோற வந்தவரென்று இராம இலக்குவரை வர்ணிக்கிருள் சூர்ப்பணகை. அவரது தசையைத் தழுவ விழையும் நசையின் விளக்கமாக அமைகிறது அவள் பேச்சு. ஆனல் கொச்சை மானிடரிடம் ஏற்பட்ட அச்சத்தால் அவள் இவ்விதம் பேசுவதாக எண்ணிய அரக்கன், தான் இருக்கத் தங்கைக்கு இத்துன்பம் நேர்ந்ததேயென்று தன்னிரக்கம் கொள்கிறன். பின்னர், வன்துணை இல்லா மானுடர் இருவரைத் தம்பியரும் தானையரும் கொல்லவில்லையா என்று வினவுகிறன். இதனைக் கேட்ட பாசாங்குக்காரி வயிற்றை எற்றிப் பார்மிசை விழுகிருள். பிறகு பேசுகிருள்

'சொல்' என்றுஎன் வாயில் கேட்டார்;
தொடர்ந்துஎழு சேனை யோடும்
'கல்' என்ற ஒலியில் சென்ருர்,
கரன்முதல் காளை வீரர்;
எல்ஒன்று கமலச் செங்கண்
இராமன் என்று இசைத்த ஏந்தல்
வில்ஒன்றில், கடிகை மூன்றில்,[1]
ஏறினர் விண்ணில் என்ருள். (3, 7, 64)

இதனைக் கேட்ட புவனபதியின் சீற்றம் துயரால் பொங்கியது "அவர் உன் உறுப்பைக் கொய்ய, நீ இழைத்த குற்றம் யாது?" என்று உசாவுகிருன். அழகிற் சிறந்த ஒருத்தியால் நேர்ந்ததென்று செப்பி, சீதை வனப்பின் செவ்வியை விதந்து ஓதுகிருள் சூர்ப்பணகை. 'அன்னவளை உன்னிடம் சேர்க்க முயன்றபோது, உறுப்பினை இழந்தேன்' என்று பேசுகிருள்.

சீதையின் சௌந்தரியத்தைப்பற்றிச் செவி வழியே கேட்டவனுக்குக் கோபமும் வீரமும் மானக் கொதிப்பும் அறவே நீங்கின. காமமும் தாபமும் அவனை ஆட்கொண்டன.

போகமே நுகர்ந்து வாழ்ந்த இலங்கையில் சோகத்தின் குரல் கேட்டவுடன், அரக்கன் வெகுளியால் அழிவே நேருமென்று யாவரும் அஞ்சினர். அதனை முன்பே புலப்படுத்திஞன் கம்பன். ஆஞல் தங்கை இழிவுற்றதோடு, தம்பியரும் படைஞரும் பட்டனர் என்று அறிந்த பின்பும்" இராவணனது கோபம் பெட்டிப் பாம்பாக ஒடுங்கியது. அவனது

---

1 சொல்- (உன்னை அங்கபங்கம் செய்தவர் யாரென்று) சொல். என் வாயில்—நான் சொல்ல. கல்லென்ற ஒலி-கல் என்ற ஆரவாரம். எல்-ஒளி (இங்குச் சூரியன் ஒளி). இராமனது கண்ணழகில் ஈடுபட்ட நங்கை அதனைக் கதிரொளியால் மலர்ந்த தாமரைக்கு ஒப்பிடுகிருள். ஏந்தல்—பெருமையிற் சிறந்தோன். கடிகை-நாழி.

காமவெறிக்கு, அதனுல் அவன் உற்ற இழிவுக்கு, இது ஓர் அளவுகோல். கம்பன் கூறுவான்.

கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்து நின்ருன்
உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்; வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினுல் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான்; கேட்ட[1]
மங்கையை மறந்தி லாதான். (3,7,83)

1 அரன்-சிவன். வரன்-மேன்மை. மங்கை-சீதை.

முதனூலில் அகம்பன் என்பான் முதலில் வந்து கரன் முதலிய காளையர் மடிந்த செய்தியைக் கூறுவான்; சீதையை வவ்வவேண்டுமென்றும் யோசனை கூறுவான். இராவணனும் மாரீசனிடம் சென்று, சீதையை அபகரிப்பதற்கு உதவ வேண்டுமென்பான். மாரீசன் இராமனது வலிமையைப் பற்றிப் பேசி அச்சுறுத்தி இராவணனைத் திருப்பி அனுப்பி விடுவான். பிறகு சூர்ப்பணகை இலங்கைக்கு வந்து கரனுதியர் வதத்தைப்பற்றி விரித்துரைத்து அழகிற் சிறந்த சிதையைப் போர் வழியிலோ வஞ்சனை வழியிலோ அடைவாயாக என்பாள். அதன் மேல் இராவணன் மீண்டும் மாரீசனிடம் சென்று அவனைப் பொன்மானுக அனுப்புவான்.

நாடக நயம் உணர்ந்த கம்பன், அகம்பனைக் களத்துக்குக் கொண்டுவரவில்லை. சூர்ப்பணகையே கரன் வதம் பற்றியும் சீதையைப் பற்றியும் பேசுகிருள். மாரீசனிடம் இராவணன் இருமுறை போகத் தேவையில்லை. ஒரு முறையே செல்கிருன்.

முதனூலில் மந்திரிகள் முன்னிலையில், இராவணனைக் காமவெறியன் என்றும், சிற்றின்பத்திலேயே திளைத்துக் கொண்டிருப்பதால் அரசனுக்குரிய கடமையை மறந்துவிட்டான் என்றும் சூர்ப்பணகை தூற்றுகிருள். தங்கையே ஆயினும் இராக்கத சக்கரவர்த்திக்குமுன் இவ்வாறு பேசுவது ஒவ்வாதென்று அதனை நீக்கிவிடுகிருன் கம்பன். கம்பனது காட்சியின் நாடக நயம் பெரிது.

அரசவையில் அரியணைமீது அமர்ந்த தலைவன், அரசுக் குற்ற இழிவையும் மறந்து காமவெறியனாகக் காட்சி தருவதைக் கடிந்து கூறும் அமைச்சர் இலங்கையில் இலர். தலைமகன் வெகுண்டபோதும், தம்முயிர்க்கு உறுதி எண்ணாது கடமை உணர்த்தும் அமைச்சருக்கு, இராவணன் ஆட்சியில் இடமில்லை. காவலன் கருணைகூர்ந்து, கருத்துரை பகர வேண்டுமென்று கட்டளையிட்டால், அவன் மனம் உவப்பனவற்றையே மொழியும் மந்திரிகள் தாம் இலங்கையில் உளர். எனவே, சபை பேச்சுமூச்சற்றுக் கிடந்தது.

தனிமையை விரும்பிய தலைவன் எழுந்தான்; அவையோர் ஆசிகூறி வெளியேறினர்.

எழுந்தனன் இருக்கைநின்று; ஆண்டு
    ஏழ்உல கத்து ளோரும்
மொழிந்தனர் ஆசி; ஓசை
    முழங்கின, சங்கம் எங்கும்;
பொழிந்தன பூவின் மாரி;
    போயினர் புறத்தோர் எல்லாம்:
அழிந்துஒழி சிந்தை யோடும்
    ஆடகக் கோயில் புக்கான்.[1] (3, 7, 88)

மூண்டு எழுந்த காமத்தால் ஆக்கையும் ஆவியும் வெந்துபோவதைத் தவிர்க்க வழி அறியாது இராவணன் தடுமாறுகின்றான். தங்கையைத் தருவித்துப் பேசுகின்றான். இராமனுக்கு எதிராக இவனை ஏவுதலிலேயே குறியாக நின்ற சூழ்ச்சிக்காரி, சீதையைக் கவர்ந்து வா என்று யோசனை சொல்கிறாள். அதன் பின் அமைச்சரைக் கொணர்க என்று அரக்கன் காவலரை ஏவுகிறான். ஏவலர் சென்று கூவுகின்

---

1 இருக்கை நின்று-அரியணையிலிருந்து. ஆண்டு-அப்போது. புறத்தோர்-அரசன் பக்கத்தில் இருந்தவர். ஆடகம்-பொன். கோயில்—மாளிகை.

றனர். தேரிலும் புரவியிலும் சிவிகையிலும் யானையிலும் மந்திரிகள் வந்து கூடுகின்றனர்.

'தெளிவுஇல் நெஞ்சன்' ஆன இராவணன் தன்னை அடைந்த அமைச்சருடன் விவாதித்தான் என்றும், அதன் பின் வான ஊர்தி ஒன்றில் சென்று மாரீசன் இருக்கையை அடைந்தான் என்றும் கம்பன் கூறுவான். யாது செய்வது என்று புரியாது தவித்த அரக்கனுக்குச் சூர்ப்பணகையின் யோசனையே சிறந்தது என்று கூறி, மாரீசனைக் கொண்டு மாயம் செய்யும் யுக்தியைக் கற்றுக்கொடுத்தனர் மந்திரிகள் என்பதைக் கம்பன் உய்த்துணரவைக்கிறான். துரியோதன னுக்கு ஏற்ற சகுனிபோல், இராவணனுக்கு இணக்கமான அமைச்சர் அமைந்திருந்தனர் என்பது தேற்றம்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்று கருதும் புல்லன், பிறன் மனைவியைப் பெண்டாள விழைகின்றான். அதற்கு இந்த அமைச்சர்கள் ஒத்து ஊதுகிறார்கள். வீரம் பேசும் நிருதன் இராம இலக்குவரைப் போரில் வெல்ல வேண்டு மென்றுகூட அவர்கள் சொல்லவில்லை. கரன் முதலானோ ரைக் கொன்று குவித்த நரருடன் சமர்செய்து மீளமுடியா தென்று அஞ்சிய அமைச்சர், மாயத்தால் சீதையைக் கவர் வதற்கு வழிசொல்லிக் கொடுக்கிறார்கள். ''பேய் அரசு செய் தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்'' என்று பாஞ்சாலி பகர்ந்தது மெய்யாயிற்று.

5. இராவண மாரீசர் வாதம்

மாற்றாருக்கு எதிராக வஞ்சனையும் வன்முறையும் இயற்றுவோர் விரைவில் உற்றாருக்கு எதிராகவும் அதே தீய முறைகளைத் தழுவுவர் என்பது பெரும்பாலும் உண்மை. இராவண மாரீசர் வாதத்தில் இவ்வுண்மை விளங்குகிறது.

தனியனாய் வந்த மருமகனைக் கண்டு மருண்ட மாரீசன், 'வந்த கருத்து என்?' என்று வினவுகிறான். உடனே அரக்கர் வேந்தன் மானிடர் இருவரால் தங்கைக்கு உற்ற துன்பத்தையும், கரன் முதலானோர்க்கு நேர்ந்த அழிவையும், இவற்றால் குலத்துக்கு உண்டான இழிவையும் எடுத்துரைக்கிறான்.

இருகை சுமந்தாய்! இனிநின் இருந்தாய்!
[இகல்வேல்உன்
மருகர் உலந்தார்! ஒருவன் மலைந்தான், வரிவில்லால்[1]
(3, 8, 5)

என்று பேசி மாமனுக்கு மனக் கொதிப்பு உண்டாக்க முயல்கிறான்.

தரம் குறைந்த நரரை நிகரெனக்கொண்டு பொருதுவது தனக்கு இழுக்கென்று அவன் கூறுகிறான். அந்த மனிதருடன் வாழும் மங்கையைக் கவர்வதே பழிதீர்க்கும் வழி என்கிறான். இப்பணியில் கைகொடுக்கும்படி மாமனை வேண்டுகிறான்.

இலங்கை வேந்தன் தன் மாமனையும் வஞ்சிக்க முயல்வதே இப்பேச்சில் புலனாகின்றது. சீதையின் வனப்பைப் பற்றிக் கேட்ட நொடியிலேயே கரனையும் தங்கை இழிவையும் மறந்தவன், மானம் காக்கத் துடிப்பதாக நடிக்கிறான். கொச்சை மனிசருடன் போரிடுவது இழுக்கென்று கூறும் போதே, மானிட மடந்தையை வவ்வ வேண்டுமென்கிறான். இது எந்த வீர இலக்கணத்தின் பாற்பட்டது?

தரம் குறைந்தவனை எதிர்த்துப் போரிடமாட்டான் என்றதும், பழிதீர்க்க விரும்பினான் என்றதும் பொய். இராமனுடன் அமர் நிகழ்த்த அஞ்சினான் என்பதும், தையலைக் கவர்ந்து பெண்டாளத் துடித்தான்என்பதுமேமெய்.

---

1 இகல்-வலிமை. உலந்தார்-அழிந்தார். ஒருவன்-தனியனாக நின்ற இராமன். மலைந்தான்-போரிட்டான். வரிவில்-கட்டமைந்த வில்.

மருகன் பேச்சைக் கேட்ட மாரீசன் 'சிச்சி' என்ருன். செவியைப் பொத்தினுன். அதன்பின் அச்சம் அகற்றிப் பேசலுற்ருன்.

இராவணன் செயற்கரிய தவம் புரிந்து, கிடைத்தற் கரிய செல்வமும் பதவியும் பெற்ருன் என்பதை மாமன் நினைவூட்டுகிருன். அறவழியில் அடைந்ததைப் புறவழியில் இழக்காதேயென்று எச்சரிக்கிருன். தீயவழியில் சென்றவன் எவனும் உய்யவில்லை என்று எடுத்துரைக்கிருன்:

நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார், நடைஅல்லா
வாரம் கொண்டார், மற்றுஒருவன் தன் மனைவாழும்
தாரம் கொண்டார், என்றஇவர் தம்மைத் தருமம்தான்
ஈரும் கண்டாய்; கண்டகர் உய்ந்தார் எவர்? ஐயா![1]
(3, 8, 11)

நண்பரின் நாட்டைக் கவர்ந்து நம்பிக்கைத் துரோகம் செய்வோரும் நீதி திறம்பிக் குடிகளிடம் வரி தண்டுவோரும், பிறன்மனைவியைக் கவர்வோரும் அறத்தின் திறனுல் அழிவது உறுதி என்று அச்சுறுத்துகின்ருன் மாரீசன்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு (204)

என்ற குறளின் விரிவுரையே இது.

செந்திருவை ஒத்த உரிமை மகளிர் பலர் இருக்க, அயலான் மனைவியிடம் ஆசைகொள்வது அறிவீனம் என்று நயமாகவும் இயம்புகிருன் மாரீசன். வீரவிராதனை அம்

1 நாரம்-அன்பு. நடை-நீதிநெறி. வாரம்-வரி. ஈரும்-அறுத்து அழிக்கும். கண்டகம் முள்; எனவே கண்டகர்-முள்போன்ற கொடியோர். இச்சை வழி ஒழுகுவோனும் கெட்ட வழியில் செல்வோனும் ஈனகுலத்தாரோடு ஆலோசனை செய்பவனும் கெட்டவர்களுடன் கூடியிருப்பவனும் தனக்கும் தன் சுற்றத்துக்கும் அரசுக்கும் கேடு சூழ்கிருன் என்று முதனூல் மாரீசன் பேசுவதைக் கம்பன் தன் புலமை எனும் உலையில் உருக்கி இந்த அரசநீதிச் செய்யுளில் புத்துரு அளித்திருக்கும் மேன்மையை ஓர்ந்து தெளிக.

பொன்ருல் உம்பர் உலகு ஏற்றியும், கரனுதியரைத் தனு வொன்ருல் தொலேத்தும், தன் தனியாண்மையை நாட்டியவன் இராமன். சீதையைக் கவர்ந்து அந்த வில்லியுடன் இகலினுல் குலமும் கொற்றமும் ஒருங்கே மாயும் என்று எச்சரிக்கிருன் மாரீசன். தன் தாய்க்கும் தம்பிக்கும் கூற்றுவனுய் வந்த இராமனேயும் அவன் அயல் நிற்கும் இலக்குவனேயும் எண்ணி எண்ணி ஆண்மை இழந்து தளர்வுற்றதாகவும் செப்புகிருன்.

நன்மையே ஆகுக, தீமையே ஆகுக, இன்பமே எய்துக, துன்பமே வருத்துக; நல்லறம் வழுவாமல் வாழ்வதே மக்கட் பண்பு என்று உரைக்கவோ அவ்வுரையின் உரத்தை வாழ்ந்து காட்டவோ திறம்பெருதவன் மாரீசன். எனவே, அறம் திறம்பினுல் துன்பம் நேரும் என்று அச்சுறுத்தும் குன்றிய வட்டத்தில் அவன் வாதம் செய்கிருன். துன்பம் நேராதென்ருல் அறவழியிலிருந்து வழுவலாமென்று எண்ணுவதற்கு இடம் தரும் வாதம் இது. எனவே, தன் செயலின் தன்மையை விவாதிக்கப் புகாது, விளேவொன்றும் வேருக நேராது என்று கூறுவதுடன் அமைகிருன் இராவணன். வெள்ளிமலேயைப் பெயர்த்தவன், எள்ளற்குரிய மனிதனுல் மாய்வான் என்பது மதியீனம் என்று அவன் உரைக்கிருன். இந்தப் பேச்சு மாற்ருன் வலியைக் குறைத்து மதிப்பிடும் பேதைமையின் விளேவு அல்ல. தன் வலிக்குறைவை மறைக்க முயலும் வித்தகமே இது. மீண்டும், மாரீசன் இராமனது வலிமை மிகுதியை விரித்துரைக்கவே, மருகன் சினம் கொள்கிருன். அன்னேயைக் கொன்றவனுக்கு அஞ்சி வாழும் கோழை என்று மாமனே ஏசுகின்ருன்.

ஏவல் செயகிற்றி, எனதுஆணே வழி எண்ணிக்
காவல்செய் அமைச்சர் கடன்நீ கடவதுண்டோ?[1]

(3, 8, 29)

என்றும் கூறுகிருன் இலங்கை வேந்தன். அரசன் ஆணேயைத் தேர்ந்து தெளிந்து அதனே நிறைவேற்றுவதே

---

1 எண்ணி-ஆலோசித்து, தேர்ந்துதெளிந்து. கடன்-கடமை. கடவது-கடப்பது.

அமைச்சர் கடன் என்றும், மந்திரியாகிய மாரீசன் அதனைக் கடக்கலாகாதென்றும் கூறுகிறான். இங்குப் புத்தம் புதிய அமைச்சு இயல் உருவாகின்றது. மந்திரி என்பான் மன்னன் திருவுள்ளம் அறிந்து அவன் இட்ட ஆணையை நிறைவேற்ற வேண்டுமாம். அரசன் கருதுவதின் குறையை அல்லது குற்றத்தை எடுத்துரைக்கும் உரிமை அமைச்சருக்கு இல்லையாம்.

மேலும் அரக்கன் கூறுவான்:

மறுத்தனை எனப்பெறினும், நின்னைவடி வாளால்
ஒறுத்து,மனம் உற்றது முடிப்பென்;ஒழி கில்லேன்;
வெறுப்பன கிளத்தலுறும் இத்தொழிலை விட்டு,என்
குறிப்பின்வழி நிற்றி, உயிர் கொண்டுஉழலின் என்றான்[1]
(3, 8, 30)

கொடுங்கோலன் பேச்சு இதனினும் சிறப்பாக அமைய முடியாது. அரசனுக்கு வெறுப்பானவற்றைக் கூறாது, அவனது குறிப்பின் வழி நடந்தால் அமைச்சன் பிழைக்கலாம். நலம் தீது கருதி நாயகனை வெட்டிப் பேசினால் உயிர் கொண்டு திரியமுடியாது என்கிறான் இராவணன்.[2]

---

1 கிளத்தல்-பேசுதல்.

2 இராவணன் ஆட்சியில் அமைச்சுக்கு நேர்ந்த அவலத்தை வான்மீகி முனிவரும் இதே வகையில் சித்திரிக்கிறார். "இந்த விஷயத்தில் நன்மை தீமையைச் சொல் என்றாவது, உபாய அபாயங்களைச் சொல் என்றாவது கேட்டால் நீ சொல்ல வேண்டியதே. நான் அவ்வாறு உன்னிடம் கேட்கவில்லை. அரசனது நன்மையை நாடும் மதியூகியான மந்திரி, மன்னவன் கேட்டபோது ஆலோசனை செய்து அவனுக்குப் பிரியமானதையும் இதமானதையும் நன்மையுள்ளதையும் சொல்லவேண்டும்" என்று முதனூல் இராவணன் மாரீசனிடம் கூறுவான். மேலும் தன்சொற் கேளாவிட்டால் செறுப்பேன் என்றும் அவன் அச்சுறுத்துவான்.

மாயமான் நாடகம் ஆடினால் அரசில் பாதியைத் தருவேன் என்று முதனூல் அரக்கன் நயமாகவும் மொழிவான். அது சக்கரவர்த்தியின் இறுமாப்புக்கு ஒவ்வாது என்று அதனை மட்டும் கம்பன் விடுத்தான்.

மாரீசன், மன்னவன் முனிந்தபோதும் மரணத்தைத் திரணமாக மதித்துத் தருமமே கழறும் தகவுடையோன் அல்லன். எனவே, அவன் மருமகன் ஆணைக்குப் பணி கின்ருன்:

உன்வயின் உறுதி நோக்கி
உண்மையின் உணர்த்தி னேன்;மற்று,
என்வயின் இறுதி நோக்கி,
அச்சத்தால் இசைத்தேன் அல்லேன்;
நன்மையும் தின்மை அன்றே,
நாசம்வந்து உற்ற போது?
புன்மையின் நின்ற நீராய்[1]
செய்வது புகல்தி என்ருன். (3, 8, 32)

மருகன் உறுதி கருதியே உண்மையை உணர்த்தினன் என்பது மெய்யாகலாம். ஆனல் தனக்கு இறுதி நேரும் என்ற அச்சத்தால் இசைத்தேன் அல்லேன் என்பது பொய். இவன் அறம் பேசியதெல்லாம், அறத்தை விரும்பியதால் அன்று. தன்னைக் காக்கவே அது செய்தனன். மருகனுக்கு உறுதி தேடியதும் தன்னுயிர்க்கு இறுதி வாராது தடுப்பதற் காகத்தான்.

மாயமானகச் சென்றது கிடக்க; காகுத்தன் தொடுத்த வாளியால் உயிர் பிரியும்போதும், நாயகன் குரலில் இலக்குவனையும் சீதையையும் விளித்து அவர்களைத் தவிக்கச்செய் ததே — இலக்குவனைப் பிரித்துச் சீதையை அரக்கன் வவ்வு வதற்கு வாய்ப்பு அளித்ததே — அவனுக்கு அறநோக்குச் சிறிதும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தும்.[2]

---

1. *தின்மை-தீமை. நீராய்-தன்மையாய்.*

2. எனவேதான், மேற்காட்டிய செய்யுளில் வான்மீகத் தையே தழுவும் கம்பன், "நான் இராமனல் கொல்லப்பட்டு கிருதார்த்தனவேன்" என்று முதனூல் மாரீசன் கூறுவது அவனது வஞ்சனைக்கு முரண்படுமென்று விடுத்தான்.

'செய்வது புகல்தி' என்று பகர்ந்த மாமனைத் தழுவிய இராவணன், மாயையால் சீதையைக் கவர்ந்து வரவேண்டு மென்று கூறவே, மாரீசன் துணுக்கமடைகிறான். தேவியை வவ்வ முயன்று ஆவியை இழக்க அவனுக்கு விருப்பமில்லை. தையலைக் கவர்தல் இழிவு என்றும், இராவணன் இராமனைப் போரில் வென்று சீதையை அடைதலே வீரம் என்றும் உரைக்கிறான். இராமனை இகலினால் அழிவாய் என்று சற்று முன் எச்சரித்தவனே, இராமனை வென்ற வீரத்தின் பரிசாகச் சீதையைப் பெறுமாறு இப்போது கூறுகிறான். மருகனை மாய்த்துத் தன்னைக் காப்பதே இந்த வஞ்சனையின் நோக்கம். ஆம்; மாரீசன் கும்பகருணனைப்போல் குலத்தையும் கொற்றவனையும் நேசித்தவன் அல்லன்; வீடணனைப்போல் தருமத்தில் ஊன்றி நின்றவனுமல்லன். அவன் தன்னுயிர்க் காப்பையே தலையாய கொள்கையாகத் தழுவியவன்.

இராமன் சரத்தால் தன் மகுடங்கள் மண்ணில் புரள்வதற்கு மாமன் வழி சொல்வதை ஓர்ந்தான் இராவணன். இவனும் வஞ்சகமாகவே பதில் உரைக்கிறான். வாள் ஒன்றாலேயே இராம இலக்குவரை வதைப்பானும். ஆனால்

ஏனையர் இறக்கின், தானும்
தமியளாய் இறக்கும் அன்றே
மான்அவள்? ஆத லாலே,
மாயையின் வலித்தும் என்றான். (3, 8, 37)

இராம இலக்குவர் இறந்தால், தனிமையில் வாழ விரும்பாத தையலும் இறப்பாள் என்று கருதியே போரை வெறுக்கிறானும்! மான் அனைய மங்கையை மாயையால் பற்றுவதே பொருத்தமாம். தரக்குறைவான நரரோடு சமர் செய்தல் தனக்கு இழுக்கு என்று முன்னர் மொழிந்த காரணத்தை மறந்த இராக்கதன், சீதை மரிப்பாளென்ற அச்சத்தால் புயவலி காட்டும் போரை வெறுத்தேன் என்று புதிய பொய் னைபுகின்றான். சூடேறிய கெடுபிடியான சூழலில், எத்

தகைய சதுரனும் முன்பின் முரணின்றிப் பொய்யுரைக்க முடியாது போலும்![1]

ஆக, காமமும் தாபமும் வெகுளியும் வஞ்சகமும் பொய்யும் பொல்லாங்கும் அரக்க அரசியலில் மேவிய

---

1. ஆதி காவியக் கதையைச் சட்டகமாகக்கொண்டு, உயிர்த்தளிர்ப்புடன் கூடிய நாடகக் காட்சியாக இராவண-மாரீசர் வாதத்தைக் கம்பன் அமைத்துவிட்டான். முதனூலில், அடிதின்ற அற்பனைப் போல் இராவணன் இராமனை வைவான். அதனைக் கம்பன் நீக்கினான். மாமனும் தம்பியரும் தன்னை ஆதரித்தால், எத்தகைய பகைவரையும் இலட்சியம் செய்யேன் என்று அரக்கன் அங்குக் கூறியதை அகற்றி, தனக்கு நரர் ஒரு பொருட்டல்லவென்றும், 'ஒப்பு இலர் என்ற போர்செயல் ஒல்லேன்' என்றும் இங்குப் பேசச் செய்தான். ராகு சந்திரனைப் பற்றுவதுபோல், தான் சீதையைக் கவர்வேன் என்று சொல்லித் தன்னைத்தானே ராகுவுடன் ஒப்பிடுவது இராவணனுக்குத் தக்கதன்று என்று அதனையும் விடுத்தான் கம்பன். இல்லாளைப் பிரிந்த இராமன் போருக்கு வாரானென்றும், வந்தாலும் பிரிவுத் துயரால் மறுகும் அவனை எளிதில் வதைப்பேனென்றும் முதனூல் இராவணன் தன் வலிமைக் குறைவை அப்பட்டமாகப் புலப்படுத்துவது, அவனது வஞ்சனைக்கும் செருக்குக்கும் ஒத்ததல்லவென்று அதனையும் கொள்ளவில்லை கம்பன். தான் இராமனிடம் பட்டதையெல்லாம் முதனூலில் மாமன் விரித்துரைப்பதையும் நாடகப் பாங்குக்குப் பங்கம் விளைவிப்பதென்று நீக்கினான் கம்பன்.

மாமனும் மருகனும் ஒருவனை ஒருவன் வஞ்சிக்க முயலும் உரையாடலைத்தானே அமைத்தான் கம்பன். அது, முனிவர் கையில் திருத்தமுறாத மாரீசன் என்ற பாத்திரத்தை உயிர்ப் பாத்திரமாக உருவாக்கியது. இராவணனின் வஞ்சக இயல்பை மற்றொரு கோணத்தில் புலப்படுத்துவதாயிற்று.

ஏற்றத்தை மாரீசன் வதைப் படலம்[1] புலப்படுத்து கின்றது.

அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு[2] (384)

என்றார் வள்ளுவர். ஆனால் அறம், மறம் (வீரம்), மானம் ஆகியவை நீக்கி, அறம் அல்லனவான காமம் வெகுளியைத் தழுவியதாக இராவணன் ஆட்சி விளங்கக் காண்கிறோம்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு[3] (389)

என்பது குறள்.

அமைச்சரோ அல்லாதவரோ செவிக்கு வெறுப்பான சொற்களைப் பேசினாலும், குற்றம் பாராட்டாமல் பொறுப் பானது குடை நிழலில் குடிகள் விரும்பித் தங்குவர் என்பது அதன் பொருள்.

ஆனால் அமைச்சருக்கே அப் பேச்சுரிமை வழங்கான் இலங்கை வேந்தன். அதனால்தான் மாரீசன் செவி கைப்பப் பேசியதைப் பொறுக்காது அவனைச் செறுப்பேன் என்று அச் சுறுத்தினான்.

---

1. இராவணன் அத்தாணிக் காட்சி, சூர்ப்பணகை வனப் புக்குரிய உறுப்புக்களை இழந்து வந்து, தமையன் சீதைபால் காமுறும்வண்ணம் உரையேற்றுதல், வேந்தன் காம வெறியன் ஆதல், இராவண-மாரீச வாதம், பொன்மானாய்ச் சென்ற மாரீசன் இராமன் விடுத்த பகழியால் இறத்தல் ஆகிய நிகழ்ச்சிகளைப் பேசுவது, மாரீசவதைப் படலம். கம்பர் கழகப் பதிப்பில் இதன் முதற்பகுதி சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலம் எனத் தனியே அமைகிறது.

இராவண வதமே இராமகாதையின் பொருள். அதற்குக் காரணமான சீதையின் சிறை வைப்பைச் சாத்தியமாக்கிய நிகழ்ச்சிகள் விவரிக்கப் பெறுவதால், இப்படலம் முக்கிய மானது.

2. மறம் : ஈண்டு, வீரம்

3. கவிகை - குடை.

6. இடிக்குநர் இல்லை; முடிக்குநரே உண்டு

மனத்துக்கு இனியன பேசுவோரையே இராவணன் தழுவினன் என்பது யுத்தகாண்டத்தில் மந்திரப்படலத்தில் செவ்வையாகப் புலனாகும். அனுமனால் எரியுண்ட இலங்கை மயனால் புதுப்பிக்கப்பெற்ற பின்னர், இராவணன் குழுவினர் கூடிப் பேசியதை இப்படலம் விவரிக்கிறது. இதைச் சற்று விரிவாக ஆராய்வோம்.

பொன்னும் மணியும் பேரொளி வீசும் ஆயிரக்கால் மண்டபத்தில், அரியணைமீது அரக்கர் வேந்தன் கொலு வீற்றிருக்கிறான்.

வரம்பெறு சுற்றமும் மந்தி ரத்தொழில்
நிரம்பிய முதியரும், சேனை நீள்கடல்
தரம்பெறு தலைவரும், தழுவத் தோன்றினான்
அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினான்.[1] (6, 2, 6)

வரம்பெற்ற உறவினரும், அமைச்சு இயலில் நிறைந்த ஞானம் எய்திய மூத்தோரும், தலைசிறந்த தானைத் தலைவரும் வேந்தனைச் சூழ்ந்தனரென்று கூறி, அக்குழுவின் உயர்வை உரிய அடைமொழிகளால் புலப்படுத்துகிறான் கவிஞன்.

தன் கொடுமையை விரும்பாத தேவர், முனிவர் முதலியோரை அவையிலிருந்து நீக்கிவிட்டு இரகசிய விவாதத்தைத் தொடங்குகிறான் இராவணன். ஆட்சியின் மாட்சியெல்லாம் குரங்கின் செயலால் தாழ்ச்சியுற்றதே என்று மனம் நொந்து பேசுகிறான் மன்னன்.

சுட்டது குரங்கு; எரி சூறை ஆடிடக்
கெட்டது கொடிநகர்; கிளையும் நண்பரும்
பட்டனர்; பரிபவம் பரந்தது எங்கணும்;
இட்டஇவ் அரியணை இருந்தது, என்னுடல்! (6,2,12)

---

1 சுற்றம்-உறவினர். மந்திரம்-ஆலோசனை. முதியர்-மூத்தோர். தரம்-மேன்மை அரம்பையர்-தேவமாதர். கவரி-சாமரை. ஆடும்-(சாமரைக் காற்றினால்) அசையும். தார்-மாலை.

குரங்கு இட்ட தீயால் கோநகர் அழிந்தது; உறவினரும் நண்பரும் அழிந்தனர்; அவமானப்பட்ட சேதி திக்கெட்டும் பரவியது. இவ்வாறு சிறுமையடைந்த பிறகும் சிம்மாசனத்தில் கிடக்கிறேன் என்று மனம்மறுகி உரைக்கிருன் அரக்கன்.

குறும்பு செய்த குரங்கு இறந்தது என்ற சேதி கேட்கும் பேற்றினைக்கூடப் பெருமல் இழிவுற்றுவிட்டோமென்று கலங்கும் மன்னன், 'யாது செய்வது?' என்று அவையோரை வினவுகின்ருன்.

"போரே வழி" என்று விடைதருகிருன் சேனுதிபதி. சீதையை வஞ்சனையால் அன்றிப் போரால் அடைய வேண்டுமென்று புகன்ற யோசனையைப் புறக்கணித்ததாக அரசனைக் கடிகின்ருன் அவன். ஓடிப்போன குரங்கைத் தேடித் தொடர்ந்து நரரையும் வானரரையும் வேர்அற நாசமாக்குவோம் என்றும் பேசுகிருன்.

அவனைத் தொடர்ந்த மகோதரன், வெள்ளிமலையைப் பெயர்த்த வேந்தன் சுள்ளியில் வாழும் குரங்கை மதித்துப் பேசுவது தகாது என்கிருன். "என்னையே ஏவுக. குரங்கைக் கொன்று, நரர் உயிரை உண்டு, மீண்டு வருவேன்" என்று ஆர்ப்பாட்டம் செய்கிருன்.

"உன்னை வணங்காதவரையெல்லாம் வணங்கச் செய்த நான் இருக்க, மனிதரையும் வானரரையும் மாய்த்து வருக என்று பணிக்காது, அமைச்சரைக் கூட்டி ஆலோசனை நடத்துகிறீர்களே!" என்று கூறுகிருன் அடுத்துப் பேசிய வச்சிரதந்தன்.

இவனை வழிமொழிந்த துன்முகனே தின்பண்டத்தைக் கண்டு அஞ்சும் தீரராகிவிட்டோமாவென்று எள்ளி நகையாடுகிருன்.

கண்ணிய மந்திரம் கருதும் காவல!—
மண் இயல் மனிதரும், குரங்கும், மற்றவும்,
உண்ணிய அமைந்தன; உணவுக்கு உட்குமேல்,
திண்ணிய அரக்கரில் தீரர் யாவரே?[1] (1, 2, 34)

உண்ணிய-உண்பதற்கு. உட்குமேல்-பின்வாங்கினுல்.

இவனைத் தடுத்துப் பேசிய மாபெரும்பக்கன், குரங்கு இட்ட தீயின் கோர வெம்மையால் நிருதர்களது வீர வெம்மையும் வெந்ததா என்று தீப்பொறி பறக்க வினவுகின்றான்.

வந்துஒரு குரங்குஇடு தீயின் வன்மையால்
வெந்ததோ, இலங்கையோடு அரக்கர் வெம்மையும்?
(6, 2, 39)

இங்கேயிருந்து வாயால் பேசாது அங்கே போய்க் கரத்தால் கருமம் புரியவேண்டுமென்கிறான்.

'யாது செய்வது?' என்று அரசன் உசாவியதே அச்சத்தின் வெளியீடு என்கிறான் பிசாசன். இந்த மானக்கேட்டுக்கு உட்படும் ஊனம் வேண்டாமென்கிறான். எங்காவது ஏகி ஒழிவோம் என்று வெறுப்போடு விளம்புகிறான்.

வேறு சிலர் இதே தொனியில் பேசிய பிறகு, புகைநிறக் கண்ணன் பேசுகிறான். சிவனை நோக்கிச் சமருக்குச் செல்வதே சிரிப்புக்கு இடமாகுமென்று செப்புகிறான். நரனை நோக்கி நாடு கடந்து செல்வது அதனிலும் கேவலமானதால், பகைவர் தாமாக வரும்போது தாக்குவதே நலம் என்பான் அவன். புற்றில் உறையும் பாம்பைப்போல் புழுங்கும் வேறு பலரும் இவனை ஆதரிக்கின்றனர். எதிரிகள் வந்தபின் பொருதுவோம் என்று பேசிய இராக்கதரை விலக்கியே கும்பகருணன் பேசுவான்.

கும்பகருணனுக்குமுன் பேசியோர் அனைவரும் ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டவராகவே காட்சி தருகின்றனர். கரன் முதல் காளையர் பல கோடியர், கடிகை மூன்றில் இராமனது வாளிகளுக்கு இரையாகி இறந்ததையும், அனுமனது ஆற்றலால் கொற்றவனது கோநகரிலேயே அக்க குமாரன் முதலானோர் பலர் மாய்ந்ததையும் கணக்கில் எடுக்காது கழறுவாராகவே இவர்கள் உள்ளனர். தேடிப்போய்த் தாக்குவோம் என்பவர் வீண் ஆரவாரம் செய்யும் வீருப்பின்

வடிவினராகவே உள்ளனர். நரரையும் வானரரையும் கண்டு அஞ்சும் அரக்கரோ தம் கோழைத் தன்மையை மறைப்பதற்காக எதிரிகள் இங்கு வந்தபின் தாக்குவோம் என்று குரல் கொடுக்கின்றனர்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் (471)

என்று உரைத்தார் வள்ளுவர். இந்தத் தகுதி அரசனுக்குமில்லை; அவனுக்கு யோசனை கூறவந்த மந்திரத் தலைவருக்கும் இல்லை.

இவர்கள் அரசனைக் கடிந்தும் குறை கூறியும் பேசுவது உண்மை. ஆனால் இந்த விமரிசனத்தின் கருத்து யாது? நரர் வானரரை ஒரு பொருட்டாக மதிப்பது பிழையென்றும், அவர்களை முன்பே அழித்திருக்கவேண்டுமென்றும், அவை கூட்டிப் பேசுவதே காலம் கடத்தும் குற்றமாகுமென்றும் மொழிவதே விமரிசனமாக உள்ளது. இத்தகைய 'கண்டனங்கள்' மன்னனை மகிழ்விக்குமல்லவா?

கும்பகருணன்தான் நறுக்குத் தெறித்தாற்போல் உண்மையை உள்ளபடி உரைக்கிறான். விரோதிகள் நகருக்கு வந்தபின் தாக்குவோமென்றவரை 'நம்பியர் இருக்க' என்று (நம்பியர்-ஆடவரில் சிறந்தோர்.) கேலியாகக் கூறிவிட்டு அண்ணனுக்கு அறிவுரை பகர்கிறான்.

அயனை முதலாகக்கொண்ட உயர்குடியில் பிறந்தும், ஆயிரம் மறைக்கு உரை அறிந்தும், நெருப்பினை நயக்கும் செயல் புரிந்தாய் என்று குற்றப் பத்திரத்தைப் படிக்கத் தொடங்குகிறான் கும்பகருணன்.

"அநியாயமாக இலங்காபுரியை எரி உண்டதென்றும், அரசியல் அழிந்ததென்றும், மனம் மறுகுகிறாயே, பிறன் மனைவியை விரும்பிச் சிறை செய்தல் நியாயமா?" என்று சுடுசரமன்ன வினவைத் தொடுக்கிறான் அவன். "பாவியர்

உறும் பழி இதிற் பழியும் உண்டோ?" என்றே கேட்டு விடுகிருன்.

"நன்னகர் அழிந்ததென்று நாணுகிருய்! உன்னுயிரனைய மனைவியரைத் துறந்துவிட்டுப் பிறன் மனைவியின் பாதத்தில் விழுந்து விழுந்து எழுவதுதான் புகழோ?" என்றும் இடித்துரைக்கிருன்.

என்றுஒருவன் இல்உறை தவத்தியை இரங்காய்
வன்தொழிலன் ஆய்மறை துறந்துசிறை வைத்தாய்,
அன்றுஒழிவ தாயின அரக்கர்புகழ்; ஐய!
புன்தொழிலி ஞர்இசை பொறுத்தல்புல மைத்தோ?[1]
(6,2,51)

என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக உரைக்கிருன். மேலும் அண்ணனைக் குத்திக்காட்டிக் கேலி செய்கிருன்:

ஆசில்பர தாரம்அவை அம்சிறை அடைப்பேம்;
மாசில்புகழ் காதலுறு வேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடைபேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்றுநம கொற்றம்.[2]

காமம் பேணுவோர் மானம் பேசுவதும் நரரைக் கூசுவோர் வீரம் பேசுவதும் ஈனம் என்று விளம்பி அரக்கர்க்குற்ற இழிவைத் தோலுரித்துக் காட்டுகிருன்.

"சிட்டர் செயல் செய்திலை; குலச்சிறுமை செய்தாய்" என்று திட்டமாக உடைத்துப் பேசிவிட்டு, பகைவரைத்

---

1 உறை-வாழும். தவத்தி-தவம் செய்யும் பெண் (இங்குச் சீதை). வன்தொழிலன்-கொடிய தொழிலன். பொறுத்தல்-தாங்குதல். புலமை-அறிவு.

2 ஆசுஇல்-மாசுஇல்-குற்றம் இல்லாத. பரதாரம்-பிறன் மனைவி. வளமைகூர-வளமை கொழிக்க. மானம்-கவுரவம். கொற்றம்-வீரம்.

தேடிச்சென்று தாக்குவோமென்கிருன். ஏன்? இனிச் சீதையை விடுதலை செய்தால், சமருக்கு அஞ்சும் பதர் என்ற அவச்சொல்லுக்கு ஆளாவோமென்று அவன் கூறுவான். அதனினும் போரில் தோற்பதே மேல் என்று உரைப்பான். எதிரிக்குத் துணைவலி சேர்வதற்கு வாய்ப்பு அளிக்காமல், உடனே கடல் கடந்துசென்று சமர் புரிவோம் என்பான்.

சுடுசொல் பொறுக்காத இராவணன் கும்பகருணன் பேச்சுக்குத் தடைவிதிக்கவில்லை. இதன் காரணம் என்ன? குடம்போல் குடைந்த காதும் நீலமலைபோல் நெடிய வடிவும் உடைய அவன் வரத்தால் உரம்பெற்ற தம்பியாவான் என்பது ஒன்று. இராமனிடம் வீடணன் விளம்பியதுபோல், அவன்

ஊன் உயர்ந்த உரத்தினன்,
மேல் நிமிர்ந்த மிடுக்கினன்;
தான் உயர்ந்த தவத்தினன்,
வான் உயர்ந்த வரத்தினன்.[1] (6,15,120)

இவனது வீரமும் உரமும் எழுத்தில் அடங்கா. இவன் பின்னாளில் கறங்குபோல் சுழன்று வானரரைக் கலக்குவான். வாளேந்திய கரம் வெட்டுண்டு வீழ்ந்தபோது, அற்ற கையை அருத கையால் எடுத்துக் குரங்குகளைச் செறுப்பான். இரு கையும் இழந்த பின்பும் வானரக் கடலைக் கால்களால் துகைத்து உழக்கி அழிப்பான். வலக்கால் இற்று விழுந்த பின்னர், ஒற்றைக்காலால் குந்திப்பாய்ந்து பல்லால் கடித்துப் பகைவரை அழிப்பான் இரு கால்களையும் இழந்த பின்னரும் மலைகளைப் பல்லால் கடித்துப் பெயர்த்து மூச்சுக் காற்ருல்

---

1 மேல் நிமிர்ந்த-உடல் வலுவைக்காட்டிலும் அதிக மான. மிடுக்கு-வலிமை; இங்கு நெஞ்சுரம். வான் உயர்ந்த-வானம் போலுயர்ந்த.

ஊதி மாற்ருர் படைகளை மாய்ப்பான். இராமனே மலர்க் கரம் விதிர்ப்புறச் செய்வான் இத்தூயவீரன்.

தமையன் இவனது திறமறிந்தவன். மேலும் குலாபி மானம் என்ற குறுகிய வட்டத்தில் சுழன்ற கும்பகருணன் மனம், அறத்தை அந்தச் சிறுநோக்குக்கு உட்படுத்திவிடு கிறது. அதனல் தமையனைத் தகவோடு இடித்துக் கூறிய பின்னர், சீதையை விடாது போர்மேல் செல்வோமென் கிருன். கருமமே கண்ணுன இராவணன், இந்த நடைமுறை ஒற்றுமையையும் கருதியே, தம்பி வீசிய கடுஞ்சொற் கணைக ளைப் பொறுக்கிருன். பின்னவன் பேசிய அறவுரைக்கெல்லாம் யாதொரு பதிலும் பகராது, ''நாமே சென்று வலியப் போர் தொடுப்போம்'' என்ற முடிவினை மட்டும் கருதி, ''நன்று உரை செய்தாய், குமர, நான் இது நினைந்தேன்'' என்பான் இராவணன்.

கொடிப் படைகளெல்லாம் இன்றே எழுதல் நன்று என்று வேந்தன் இசைத்தவுடன் அதற்கு மாறுகூற ஏறென எழுகிருன் இந்திரசித்து. இவன் வீரர் என்பார்கட்கு எல் லாம் முன்நிற்கும் ''வீரர்வீரன்''. மேலும், மாயம் இயற்றுவ தில் சூரன், எனினும் அனுமனுடன் மலைந்தபோது, ஏறும் தேரும் எதிர் நிற்கும் உரனும் இழந்து தவித்தான். நான் முகனது படைக்கலத்தைத் தொடுத்தே, அதனை அவமதிக்க விரும்பாத அனுமனைக் கட்டியவன். ஆனுல் அந்த அனுபவத் தின் படிப்பினையை உணராத பாலன் அவன், எனவே, தானையோடு தந்தையே போர்மேல் செல்வது அற்ப மனிதரை மிகைப்படுத்தும் செயலென்று செப்புகிருன். மூவுலகத்தாரும் மும்மூர்த்திகளும் எதிர்வந்து நின்ருலும் வெற்றிபெறும் ஆற்றல் தனக்கு இருப்பதாக உரைக்கிருன். மனிதரையும் வானரரையும் எச்சமில்லாமல் ஒழித்துவர விடை தருகவென்று துடிக்கிருன்.

அப்போது வீடணன் எழுந்து பிள்ளைமை விளம்பிய பேதையென்று மேகநாதனைக் கடிந்துவிட்டுத் தெள்ளிய

பொருளைத் தமையனுக்கு நவில்கிருன். ''சோநகரையும் கொற்றத்தையும் சுட்டது குரங்கன்று, சீதையின் கற்பே'' என்று உண்மையை உணர்த்துகிருன் அந்த மேதை. அரக்கனது வலிமைக் குறைவையும் மானிடரின் வலி மிகுதியையும் அவரது துணைவலிச் சிறப்பையும் விளக்கமாகப் புலப்படுத்துகிருன். மேலும்

இசையும் செல்வமும் உயர்குலத்து
இயற்கையும் எஞ்ச,
வசையும் கீழ்மையும் மீக்கொளக்
கிளையொடும் மடியாது,
அசைவுஇல் கற்பின் அவ் அணங்கைவிட்டு
அருளுதி; அதன்மேல்
விசையம் இல்எனச் சொல்லினன்—
அறிஞரின் மிக்கான்.[1] (6, 2, 99

கும்பகருணன் குத்தலாகவும் கிண்டலாகவும் உண்மையை விண்டுரைத்த போதிலும், சீதையை விடாது போர் மேல் செல்வதை ஆதரித்தான். எனவே அவன் பேசியதைப் பொறுத்தான் இராவணன். வீடணன் பணிவு பூண்டு, இன்சொற்களால் நயம்படப் பேசினுலும் சீதையை விடுக என்ருன். எனவே, இராவணன் இவனுக்கு மாறு கூறத் துணிந்தான். கைகொட்டியும் மெய் குலுங்க நகைத்தும், ''பிச்சர் சொல்லுவ சொல்லினை'' என்று பகர்ந்தும் வீடணன் பேச்சைத் துச்சப்படுத்த முயல்கிருன். இராம இலக்குவரின் ஆற்றலுக்கு அஞ்சியே வஞ்சனையால் வஞ்சியை வவ்வியவன், கொச்சை மானுடர் யாதும் செய்ய முடியாது

1. இசை-புகழ். இயற்கை-இயல்பு. கீழ்மை-தாழ்வு. மீக்கொளல்-மிகுதல். விசையம்-விசயம்; வெற்றி.

என்கிருன். மீண்டும் வீடணன் இராமனது மேன்மையைக் கூறுகிருன். ஆனுல் இராவணனே,

'வெஞ்சினம் தருபோரில் எம்முடன் எழவேண்டா;
இஞ்சிமா நகர்இடம் உடைத்து;ஈண்டு இனிதுஇருத்தி;
அஞ்சல்! அஞ்சல்!' என்று அருகு இருந்தவர் முகம் நோக்கி
நஞ்சின் வெய்யவன் கைஎறிந்து உருமென நக்கான்[1]
(6, 2, 117)

இதன் பிறகு வீடணன் இராவணனுக்கு எச்சரிக்கையாகவும் படிப்பினையாகவும் இரணியன் கதையைக் கூறுகிருன். அதைக் கேட்ட இராவணன் "முட்டிய தீஎன முடுகிப் பொங்கினுன்." அமருக்கு அஞ்சினுன் என்றும், மனிதரைத் தஞ்சமாகக் கொண்டான் என்றும், வஞ்சக நெஞ்சினன் என்றும் தம்பியை ஏசுகின்ருன். "தம்பி என்பதால் கொல்லாது விடுத்தேன். ஓடி ஒழி. இனி என் கண்முன்னுல் நின்ருல் மாய்ந்து போவாய்" என்று இறுதி எச்சரிக்கை விடுக்கிருன். அதனைக் கேட்டு வானிடைச் சென்ற வீடணன், அங்கிருந்தும் அறிவுரை பகர்கிருன். அதுவும் செவிடன் காதில் ஊதிய சங்கு ஆகவே, இஞ்சிமாநகரைக் கடந்து செல்கிருன்.

ஆக, மந்திர மன்றத்தில் மன்னனை இடித்துக் கூறியவர் இருவரே. அவரில் ஒருவனும் 'யாது செய்வது?' என்ற வினவுக்கு விடைகாண்பதில் அரசனுடன் ஒத்துப்போய் விடுகிருன். வீடணன் ஒருவனே முன்பின் முரணில்லாமல் அறவழி காட்டுகிருன். ஆனுல், தனி மரம் தோப்பாகாது.

---

1 இஞ்சி-மதில். நஞ்சின் வெய்யவன் - விஷத்தைக் காட்டிலும் கொடியவன். உரும்-இடி.

மேலும், தனியனுய் நின்ற அந்த அறவழிச் செல்வனும் நாடு கடத்தப்படுகிருன்[1].

முன்பு மாரீசனைக் கோறுவேன் என்றதும், இங்கு வீடணனை 'விழிஎதிர் நிற்றியேல் விளிதி' என்றதும் மாறுபட்ட அமைச்சரை மாய்ப்பதே இராவண அரசியல் என்பதைத் தெளிவாக்கும்.

பிரிவு என்ற துயரின் பெண் வடிவாகத் திகழ்ந்த சீதை, தனக்குத்தானே இறுதி சூழும் இராவணனிடமும் பரிவு காட்டுவாள். யாவர்க்கும் நலமே நாடும் அந்த நல்லறச் செல்வி, "மதிகெட்டுத் தீய வழியில் செல்கிருயே! இங்கு நல்வழி காட்டும் ஞானிகள் இல்லையா? நற்குண சீலர்களைக் கொள்ளாது தள்ளிவிட்டாயா? வரவிருக்கும் கேட்டை முன்னரே எடுத்துக்காட்டி எச்சரிக்கும் பெரியோர்களது யோசனையை ஏற்க மறுத்தாயா? வஞ்சனை பயிலும் நீ, அரக்கருக்கு இறுதிக்காலம் வந்துற்றதால் இவ்வாறு நடக்கிருய் போலும்!" என்று முதனூலில் கடிவாள் இக்கூற்றை உட்கொண்டும்,

---

1. வான்மீகத்தில், யுத்த காண்டத்தில் 6 முதல் 16 முடிய உள்ள 11 சருக்கங்களில் இராவணன் மந்திராலோசனை விவரிக்கப் பெறுகிறது. கம்பன் முதனூல் விவாதத்திற்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிருன். ஆனல் அங்கு இராவணன் இருமுறை மந்திரிகளைக் கூட்டி விவாதம் நடத்துகிருன். வீடணன் இரு கூட்டங்களில் பேசுவதுடன், தனியாகவும் தமையனிடம் பேசுகிருன். இவ்வாறெல்லாம் கூறியது கூறலுக்கும் படிப்போர் சுவை குன்றலுக்கும் இடம் தராதவாறு, கம்பன் காட்சியை அமைக்கிருன். மந்திரிகளின் கூட்டம் ஒருமுறையே நிகழ்கிறது என்பதும், அதன் விவாதத்தின் இறுதியில் வீடணன் வெளியேற்றப்படுகிருன் என்பதும் கம்பன் நடத்தும் கதை. வீடணன் கூற்ருக இரணியவதைப் படலத்தை அமைத்தது கம்பனே. அதன் கவிதை நயமும் வீறும் பீடும் பெரிது. கிளைக் கதையே ஆயினும், தமையன் தம்பியை நாடு கடத்தும் முக்கியச் செயலுக்குக் காரணமாக அமைவதால், காவியச் சிறப்பத்துக்குக் குறைநேரவில்லை.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்[1] (448)

என்ற குறளைத் தழுவியும் கம்பனது சீதை கூறுவாள்:

கடிக்கும்வல் அரவம் கேட்கும்
மந்திரம்; களிக்கின் றோயை,
'அடுக்கும்,ஈது அடாது' என்று ஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளார்
எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது
முடிவுஅன்றி முடிவது உண்டோ?[2]

7. தவம் அவமானது

தவத்தின் திறத்தால் உற்ற மேன்மை தன்னலத்தால் அவமாவதைப் புலப்படுத்துவது இலங்கை.

மனித வாடையில்லாத வனம்சென்று உண்டி சுருக்கியும் உடலை வருத்தியும் வெப்பத்தில் காய்ந்தும் மழையில் நனைந்தும் குளிரில் நடுங்கியும் புயலில் மொத்துண்டும் துன்புறுவது ஒன்றே தவம் என்பது பொருந்தாது. அகங்கார மமகாரங்களைத் துறந்து, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்'

---

1. ஏமரா-காப்பு இல்லாத

2. அரவு: பாம்பு (கடித்துக் கொல்லும் கொடிய பாம்பும் மந்திரத்துக்குக் கட்டுப்படும். ஆனால் இராவணனே, இடித்துக் கூறும் அமைச்சருக்குக் கட்டுப்படாதவன் என்பது கருத்து) களிக்கின்றோயை-இறுமாந்து நிற்கும் உன்னை. ஆன்ற-மேன்மையான. இடிக்குநர்-இடித்துரைக்கும் அமைச்சர்: முடிவது-கைகூடுவது. முடிவு-அழிவு. பிற்பகுதியின் கொண்டு கூட்டு (உரைமுறை); (நீ) எண்ணியது எண்ணி உன்னை முடிக்குநர் உள்ளார் என்றபோது, முடிவது முடிவு அன்றி (வேறு) உண்டோ?

என்ற செம்மை நிலையை மருவி, மனிதகுல நலம் நாடித் துன்புறுவதும் தவமே. துன்பச்சூழலில் தத்தளிக்கும் மாந்தரின் கண்ணீரைத் துடைக்கும் கருணை தவசியின் சிறப்பியல்பு. அக்கருணையால் உந்தப்பட்டுத் தியாகம் செய்வது தவமாகும். தவசி என்பான் தனக்கென வாழாப் பிறர்க்குரியாள னுவான். இணைபிரியாத ஆணும் பெண்ணு மாய் இருந்த கிரௌஞ்ச பட்சிகள் உல்லாசமாகக் கூடிக் குதூகலித்தபோது, வன்னெஞ்ச வேடன் ஒருவனது அம்பால் அடிபட்டு வீழ்ந்து, இரத்தம்பெருக மண்ணில்புரளும் ஆண் பறவையையும், அதனைக் கண்டு பதறிப் புலம்பிய பெண் பறவையையும் நோக்கிய வான்மீகி முனிவர், அவற்றின்பால் கருணைகொண்டு துயர் உற்றதே இராமாயண காவியத்துக்குத் தோற்றுவாய் என்று ஆதிகாவியம் கூறுவதில், தவசியின் இரக்க இயல்பை அறியலாம்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு[1] (261)

என்றார் வள்ளுவர். தமக்கு உற்ற துன்பத்தைப் பொறுத் தலும், பிற உயிர்க்கு இடுக்கண் செய்யாமையுமே தவம் என்று மணக்குடவர் கூறிய உரை கம்பனுக்கு ஏற்புடைத்தே. ஆனால் தவசி பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருப்பதுடன் தொண்டு புரியவும் வேண்டும்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றுஎவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான் (30)

என்று நீத்தார் பெருமை ஓதும் அதிகாரத்தில் வள்ளுவர் மொழிந்ததால், எல்லா உயிர்களிடமும் அன்பு உடையரே

---

1. உறுகண்-துன்பம்.

நிறைமொழி மாந்தர் என்பது பெறப்படும். இந்தப் பெரியார்கள் வெகுளிக்கு இடம் தருவரா?

குணம்என்னும் குன்றுஏறி நின்ருர் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது (29)

என்ற குறளின் பொருள் என்ன?

நற்குணசீலர்களின் கோபம் கணநேரமே தங்கும் என்ருலும், அதனல் வரும் தீமையிலிருந்து வெகுளப்பட்டவர் காத்துக்கொள்ள முடியாது என்று பொருள் கண்டார் பரிமேலழகர். இந்திரபதவி அடைந்த நகுஷன், முனிவரை அவமதித்தபோது, கோபம் கொண்ட அகத்தியர் அவனைச் சபிக்கவே, அவன் பெரும்பாம்பு ஆனன். இதனைச் சுட்டிக் காட்டி முனிவரது வெகுளியைப் பொறுத்தல் அரிது என்று மணக்குடவரும் கூறினர். ஆனல் குணசீலருக்கு வெகுளி தோன்றக்கூடாது என்பது கம்பன் கருத்து. எனவே, குணமென்னும் குன்று ஏறி நின்ருர் கணமேயும் வெகுளியைப் பேணுதல் அரிது (காத்தல்-பேணுதல். அரிது-இல்லை என்ற பொருள்படும்.) என்று பொருள் கொண்டான் கம்பன்[1]

ஆகவே, தன்னுயிர்க்கு உறுவன பொறுத்தும், பிறர்பால் அருள் கொண்டும், வெகுளி நீக்கியும் வாழும் சான்ருேனே தவசி ஆவான் என்பது கம்பனது முடிவு. எனவே, பயன் கருதித் தவம் புரிவதை அவன் ஆதரிக்கவில்லை.

தவத்தால் விரும்பியதை விரும்பியவாறு அடைவோரை வள்ளுவர் கண்டிருக்கிருர். இதனைத் தழுவத்தக்க நெறியாக அன்று, நிகழ்வதை நவிலும் முறையிலே அவர் எடுத்துக் காட்டுவார்:

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். (265)

---

1. நிறைமொழி மாந்தரும் கோபம் கொள்வர் என்பதே வள்ளுவர் கருதியது. பெரியாரைப் பிழையாமை அதிகாரம் இதனை மெய்ப்பிக்கும். எனவே, கம்பன் வள்ளுவரைத் திருத்துகிருன் என்று கோடலே பொருத்தமாகும்.

கைம்மாறு கருதி நோன்பிருப்பதை இது ஆதரிப்பதாக உரையாசிரியர் கொண்டது பிழையே. யான், எனது என்னும் செருக்கைத் துறந்தவன் (346) உள் நோக்கத்தோடு தவம் செய்யான். தண்ணளி பொழிந்து வாழ்வோனே தவசி என்பதே குறள் நெறி, இதனை ஆரணிய காண்டத்தின் அகத்தியப் படலத்தில், தண்டகவன முனிவர் அரக்கரை ஒறுக்காததற்குக் காரணம் காட்டும் வகையில் எடுத்துரைக் கிருன் கம்பன்:

வேண்டின வேண்டினர்க்கு அளிக்கும் மெய்த்தவம்
பூண்டுளர் ஆயினும், பொறையின் ஆற்றலால்,
மூண்டுஎழு வெகுளியை முதலின் நீக்கினர்;[1]
ஆண்டுஉறை அரக்கரால் அலைப்புண் டார்அரோ! (3,3,8)

மெய்த்தவத்துக்கு உரிய இந்த இலக்கணத்தை ஓர்ந்தால், அரக்கரது தவத்தின் சிறுமையைத் தேர்ந்து தெளிய முடியும்.

தவம் செய்து வரம்பெற்ற இராவணன், தன் பேராற்றலால் மூவுலகையும் அடக்கி ஆண்டான். வானவர் முதலாக மானுடர் ஈருக அனைவரையும் அடிமைகளாகக்கொண்டு, வரைநெறியில்லாத போகம் நுகர்வதைத் தவத்தின் பரிசாகக் கருதினன். யுத்த காண்ட மாயாசனகப் படலத்தில் 'அறம் தரும் செல்வம் அன்னீர்' என்று அவன் சீதையை விளிப்பதிலிருந்து பிறன் மனைவியைப் பெண்டாளும் பயனும் தவத்தால் கைகூடுமென்று அவன் கருதியதை ஓர்ந்து கொள்ளலாம்.

---

1. பொறை-பொறுமை. மூண்டு- கிளம்பி. ஆண்டு-அங்கு (தண்டக வனத்தில்).

இலங்கையின் செல்வத்தையும் அங்கு அமரர் குற்றேவல் புரிவதையும் கண்ட அனுமன், 'தவம் செய்த தவம் ஆல்' (ஆல்: அசை) என்று உரைப்பது உண்மை. இலங்கையின் ஏற்றம் இதுவாயின்,

தாவுஇல் மாதவம் அல்லது
பிறிதுஒன்று தகுமோ?[1] (5, 2, 10)

என்று அவன் வியந்ததும் மெய். ஆனால் இது நெஞ்சாரக் கூறியதல்ல; வஞ்சப் புகழ்ச்சியே ஆகும். தேவரையும் பிறரையும் ஏவலராகவும் விணைவலராகவும் கொண்டு போகம் நுகர்தற்கு இயல்வதால், தவத்தைக் காட்டிலும் தகுதியான செயல் யாதொன்றுமில்லை என்று எண்ணுவது புன்மையே ஆகும். தன்னலம் துறந்தோரில் தலைசிறந்தவனான அனுமன் இப்புன்மைக்கு இடம் கொடான். அறவிலை வாணிகமாகத் தவத்தைக் கருதும் கீழ்மை இராவணனுக்கே உரியது. அது அனுமனுக்கோ கம்பனுக்கோ உடன்பாடு அன்று.

தவத்தால் திருவுற்றவர் தருமம் தவறிக் கருமம் புரிந்தால், அழிவது உறுதி என்பதே இராவண வதத்தின் படிப்பினை. இதனை முன்கூட்டியே அசோக வனத்திலிருந்த சீதை அரக்கனிடம் எடுத்துரைப்பாள்:

இப்பெரும் செல்வம் நின்கண்
ஈந்தபே ரீசன், யாண்டும்
அப்பெரும் செல்வம் துய்ப்பான்,
நின்றுமா தவத்தின் அன்றே?
ஒப்புஅரும் திருவும் நீங்கி,
உறவொடும் உலக்க உன்னித்
தப்புதி அறத்தை, ஏழாய்!
தருமத்தைக் காமி யாயோ?[2] (5, 3, 131)

---

1. தாவுஇல்-குற்றமில்லாத. தகுமோ-செய்யத்தக்கதோ?
2. உறவு-சுற்றம். உலக்க-அழிய. உன்னி-எண்ணி.

"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரின் நெறியான மாதவத்தின் வழியில் நின்று துய்ப்பதற்காகச் சிவன் அளித்த பெருஞ் செல்வம் இது. அறம் திறம்பினுல் இந்த ஒப்பற்ற செல்வமும் உன் சுற்றமும் மாய்ந்துவிடும். இதனை உணராத எளியனாக இருக்கிருயே! திருவும் புகழும் தந்த தருமத்தின் தன்மையை எண்ணி அதனை விரும்பமாட்டாயா?" என்று கேட்கிருள் சீதை. எனவே, இலங்கை, தவத்தினுல் உண்டாகும் மேன்மைக்கு உதாரணமல்ல; தன்னலத்தால், தவத்தின் ஆற்றல் அழிவதற்கு உதாரணமாகும்.

8. தசையின் நசையால் வசையுற்றது

இலங்கையில், அரக்கரும் அரக்கியரும் நுகர்ந்த போகத்தைக் கம்பன் நடுநிலை நழுவாது வர்ணித்திருக்கிருன். அதுகொண்டு, கலையோடு இசைந்த இன்ப வாழ்வுக்கு முன் மாதிரியாகவும் ஆதர்சமாகவும் இலங்கையைச் சித்திரித்திருக்கிருன் என்று கருதுவது பேதைமையாகும்.

நாகநீள் நகரொடு நாகநாடு அதனொடு
*போகம், நீள் புகழ்மன்னும் புகார் நகர்** (1,21,22)

என்று சிலப்பதிகாரத்தில் புகார் நகரைக் குறிப்பிடுகிருர் இளங்கோவடிகள். அதனுல், காவற் கணிகையரும் ஆடற் கூத்தியரும் பூவிலை மடந்தையரும் பட்டினப்பாக்கத்தில் குவிந்து மன்மதனது பெருஞ் சேனையாக அமைந்து, திரு விழாக் காலத்தில் தெருவில் வரும் நம்பியரோடு இகலி வென்று அவரது மார்பிலும் தோளிலும் வரிக்கோலத்தைப் பதித்து அனுப்பியதையெல்லாம் இலட்சிய வாழ்வாகக் காட்டுகிருர் என்று பொருள் கொள்ளலாமா? கூடாது. பரத்தைமையால் புழுத்துப்போன சமுதாயத்தையே புகாரிலும் பிறகு மதுரையிலும் படம் பிடித்துக் காட்டுகிருர் இளங்கோ அடிகள். கற்புக்கடம் பூண்ட கண்ணகி இட்ட

* நாகநீள் நகர்-சுவர்க்கம். நாகநாடு-நாகலோகம். இது சுவர்க்கத்திலும் போகத்தில் சிறந்தது என்பது சமணர் கொள்கை.

தீயால் மதுரை எரிந்ததென்று மொழிந்து, அடக்கமோ அளவோ இல்லாது போகத்தில் ஈடுபட்டுச் செல்லரித்த சமுதாயம் அழியுமென்பதை அறிவுறுத்துகிருர் ஆசிரியர்* அதேபோல், போகவெறிக்கு இரையான சமுதாயம் அழியு மென்பதை இலங்கை வாயிலாகக் கம்பன் புலப்படுத்து கிருன்.

இன்பம் தேவைதான்; வயது ஆணும் பெண்ணும் கணவன் மனைவியராகப் பிணைந்து இல்லற நெறியில் துய்க்கும் இன்பம் வாழ்வின் தலையாய பேறுதான். மானிட வாழ்வை நிறைவு செய்வது இல்லறமே. வம்சம் விளங்கச் செய்வதும் அதுவே. ஆனல், பிணங்கியும் இணங்கி முயங்கி யும் சதிபதிகள் நுகரும் போகம் இல்லறத்தின் ஒரு பகுதியே. அப்போகமே முழு வாழ்வாக முடியாது. புலன் நுகர்ச்சியே முழுமுதற் கொள்கையாய் அமையும்போது, தூய காதல் தேய்கிறது. தீய காமம் வளர்கிறது.

இலங்கை அரக்கரது இன்பம், அல்லாதவரது துன் பத்தை ஆதாரமாகக் கொண்டது. அமரரும் இயக்கரும் நாகரும் பிறரும் அடிமைகளாகத் தொண்டு புரிகின்றனர். பிறர் உழைத்துப் படைக்கும் செல்வம் அரக்கரது வாழ்வுக்கு ஊட்டமாகிறது. அரக்கர்கள் யாதொரு தொழிலும் புரியாது, சோம்பேறிகளாகவே வாழ்கின்றனர். ஆணும் பெண்ணும் ஆடிப்பாடிக் குடித்துக் கும்மாளங் கொட்டி ஊடிக் கூடும் பணியொன்றே புரிகின்றனர்.

இரண்டாவது, இலங்கையின் போக நுகர்ச்சியில் அளவும் இல்லை. அடக்கமும் இல்லை. பகலும் இரவும் சிற்றின்ப வழிபாடே நடைபெறுகிறது. நறவு உண்ட வெறியோடு காமக்களிகொண்ட தசைப்பிண்டம் பகிரங்க மாகக் கோர நர்த்தனமாடுவதைச் சுந்தர காண்டத்தின் ஊர்தேடு படலத்தில் காணலாம். இதன் வெளியீடே

*இதன் விரிவான ஆய்வை 'இளங்கோவின் பாத்திரப் படைப்பு' என்னும் நூலில் காண்க.

இராவணனது காமவெறி. கன்னியோ பிறன் பன்னியோ (பன்னி-பத்தினி) எங்காவது ஓர் அழகி இருப்பதாகக் கேள்வியுற்ருல், அவளை வஞ்சகமாக வவ்வியாவது புணர வேண்டுமென்ற வேட்கையே இலங்கை 'நாகரிகத்தின்' வெளியீடு. ஒரு கட்டழகனைக் கண்டவுடன், அவனிடம் காமம் கொண்டு, நாணமிழந்து, அவனை வலியப் புணர விரும்பிப் பல்லாற்ருனும் முயலும் சூர்ப்பணகையும் இந்த நாகரிகத்தின் இழிவுக்கு ஒரு சான்று எனலாம்.

பிறர் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் நாகரிகம், அறவுணர்ச்சியும் நல்லொழுக்கமும் புலனெடுக்கமும் இல்லா தொழிந்த நாகரிகம், தசையின் நசையால் வசையுற்ற நாகரிகம் நாசமுறும் என்பதைக் கம்பனது இலங்கை நமக்குக் கற்றுத் தருகிறது.

பாவ வழிப்பட்ட இலங்கை அரசியலின் பான்மையினை ஆராய்ந்து அறிந்தோம். நட்பு என்னும் பேறு இராக்கத அரசியல் அடையப் பெருத ஒன்று எனவே, அதனை விடுத்து அரணும் படையும் குடியும் கூழும் அரசனும் அமைச்சும் இலங்கையில் அமைந்த தன்மையினைப் பயின்று தெளிந் தோம். இலங்கைக்கும் தவத்துக்கும் உள்ள தொடர்பையும் இலங்கை போக நுகர்ச்சியின் தரத்தையும் தத்தம் வரையில் அவற்றுக்குள்ள முக்கியத்துவம் கருதித் தனித்தனியே ஆராய்ந்தோம். தவத்தால் சிறந்ததென்றும் இன்பத்தால் உயர்ந்ததென்றும் இலங்கையின் ஆட்சிக்கு மாட்சி கற்பிப்பது பேதைமை என்பதும் ஓர்ந்தோம்.

செங்கோன்மையின் சிறப்பு இயல்புகளை எடுத்துரைக் கும் நூலோர், கொடுங்கோன்மையின் கூறுகளையும் வகுத்துக் காட்டுவர். நன்று தீது என்று இயல் தெரிந்து நல்லறிவு பெறுவதற்கு அது இன்றியமையாதது ஆகும். கம்பனும் முன்ஞேர் நெறியைப் பின்பற்றியே கோசலத்தில் அறவழி அரசியலையும், இலங்கையில் பாவ வழி அரசியலையும் அமைத் துக் காட்டினன்.

ஆதிகாவியம் வகுத்த அடித்தளம்தான்; அது பயன் படுத்திய சாதனங்கள்தாம். ஆனுல் புத்தம் புதிய பெரு மாளிகையைக் காலத்தால் பிற்பட்ட கம்பன் படைத்துவிட் டான். பரந்த விரிந்த பேரரசின் பீடும் கேடும் கம்பனது காட்சியில் புலனுகின்றன.

பல நாடுகளைக் கவர்ந்து கவளீகரித்த பேரரசு தோன்ருத காலத்தில் வாழ்ந்த வள்ளுவர், கண் எதிரில் காட்சி தந்த உலகுக்கு அரசியல் வகுத்தபோது, உள்நாட்டில் கொடுமை இழைக்கும் வேந்தைக் கடிந்தே கொடுங்கோண்மை அதிகாரம் இயற்றினர். இது இயல்பே. காலத்தாலும் சூழலாலும் மாறுபட்ட நிலையில் தோன்றிய கம்பன் எட்டுத் திக்கோடும் உலகனைத்தும் வென்று ஆண்ட ஏகாதிபத்தியக் கொடுங்கோன்மையை இலங்கை வாயிலாகப் புலப்படுத்து கின்ருன்.

3. இராமன் ஓதிய அரசநீதி

அறவழிப் பிழையா ஆட்சிக்கலைக்குக் கம்பன் வகுக்கும் இலக்கணத்தைக் கற்றுத் தெளிவதற்கு முன்னுல் அறம் என்பதைக் குறித்துச் சில கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கோள்களையும் எண்ணில் அடங்கா விண்மீன்களையும் கொண்ட இப் பிரபஞ்சத்தின் கோடானு கோடி நிகழ்ச்சி களில் ஒரு முறை நிலவுகிறதென்று தொல்லோர் கருதினர். இதுவே ரித என்று வேத நூல்களிலும், பால் என்றும் ஊழ் என்றும் சங்க நூல்களிலும் குறிப்பிடப்படும். ஊழ், பால், உண்மை, இயற்கை, முறை, தெய்வம் ஆகிய சொற்களால் வள்ளுவர் இதனையே குறித்தார்.

சர்வ வியாபியாக உள்ள இறைமையின் வீறுதான் பிரபஞ்சத்துக் கருமங்களின் கிரமத்துக்குக் காரணம் என்பது முன்னோர் கருத்து.

முறை தவறிய செயல்களும் பிரபஞ்சத்தில் நிகழ் கின்றன. நிலம் நடுங்குகிறது. எரிமலை தீ கக்குகிறது, புயல் வீசுகிறது. வானம் மோசம் செய்கிறது. அல்லது அடை மழை பெய்து ஊரெல்லாம் வெள்ளக்காடாய் ஆக்குகிறது. இவையெல்லாம் பிரபஞ்சத்தின் முறையில் எங்கோ ஓரிடத் தில் ஏற்படும் கோளாறின் விளைவே என்பது முன்னோர் கொண்ட முடிவு.

பிரபஞ்சம் என்பதன் அங்கமே மனித சமுதாயம். அது முறைமையின் இறைமைக்கு உகந்த வாழ்வை நடத்த வேண்டும்; அதுவே அறவாழ்வு.

1. முதலறமும் சார்பறமும்

அறம் என்ற சர்வ வியாபியான இறைமையாற்றல், அன்பில்லாத வன்னெஞ்சருக்கும் அவர்தம் தீவினைகளுக்கும் தீரா விரோதி என்பார் வள்ளுவர்.

என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம் (77)

என்ற குறள், எலும்பு இல்லாத உயிரினத்தை வெப்பம் உருவழியக் காய்வதுபோல், அகத்தில் அன்பு இல்லாதவனை அறம் எரிக்கும் என்று கூறுகிறது.

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு (204)

என்ற குறள், பிறன்கேடு சூழ்வானை அறம் ஒறுக்கும் என்று உரைக்கிறது.

அன்பு என்ற பண்பின் பயனே அறம் என்பதை,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்ற குறளிலிருந்து தேர்ந்து தெளியலாம்.

பிற உயிர்கள்பால் செந்தண்மை கொண்டு ஒழுகுவதால் அந்தணர் அறவோர் ஆவார் (30) என்று வள்ளுவர் மொழிவதிலிருந்தும் அன்பே அறத்துக்குத் தோற்றுவாய் என்பதை உணரலாம்.

அன்பு இல்லாது அறம் இல்லை. ஆனால் அறம் திறம்பிப் புறநெறியில் செல்வதும் அன்புடையார்க்கு இயலும்.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை (76)

என்பது குறள். 'அன்பானது அறம் செய்வோர்க்கே சார் பாம் என்பர் அறியாதார்; அவ்வன்பு மறம் செய்வார்க்கும் துணையாம்' என்று மணக்குடவர் இக்குறளுக்குக் கண்ட உரை நேரிதே. மொழிப்பற்று பிறமொழியைப் பகையாகவும் நாட்டுப்பற்று பிறதேச விரோதமாகவும் மாறும்போது, அன்பு மறத்திற்கே துணை புரிகிறதென்பதுதேற்றம். பரதனைப் போலவும் இலக்குவனைப் போலவும் உடன்பிறப்புப்பாசத்தின் மூர்த்தியாகத் திகழ்ந்தான் கும்பகருணன். ஆனால் பரதனும் இலக்குவனும் அறம் வளர்த்த இராமனுக்குப் பின் பிறந்தா ராதலால், அன்புக்கும் அறத்துக்கும் இடையே முரண் ஏற் படவில்லை. கும்பகருணனே அறம் கொன்ற இராவணனுக்குத் தம்பியாகப் பிறந்தான். தமையன் பாவ வழியில் செல்வதை ஓர்ந்தான் எனினும், அவனிடமுள்ள அன்பு மிகுதியின் காரணமாக, இராமனுக்கு எதிராக நின்று போர் செய்தான். இங்கு அன்பு மறத்துக்குத் துணையாவதைக் காண்கிறோம்.

அன்புக்கும் அறத்துக்குமுள்ள தொடர்பினைக் கண் டோம். அவற்றுக்கும் அறிவுக்கும் உள்ள உறவையும் கண்டு கொள்ளவேண்டும். மனிதரைத் தொழிற்படுத்தும் ஆற்றல் கள் இரண்டு. மனத்தின் இயற்கையான தூண்டல் ஆகிய உணர்ச்சி என்பது ஒன்று. கல்வி கேள்வி அனுபவம் முதலிய வற்றால் இயற்கையான அறிதிறன் பண்பட்டு மனத்துக்கு அமைகின்ற ஊற்றம் என்பது இன்னொன்று. அன்பு என்ற நல்லுணர்வு இல்லாதவரிடமும் அறிவின் ஆற்றல் இருக்க லாம். இவரைக் கருதியே,

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் (997)

என்றார் வள்ளுவர்.

மரமாவது ஏதாவதொரு பயன் தரக்கூடும். ஆனுல், அஃகி அகன்ற அறிவுக்கு உரியார் அன்பில்லாத கன்னெஞ்சராயிருந்தால், அந்த அறிவு அவரைப் பிறன்கேடு சூழ்வதற்கே இட்டுச் செல்லும். கொடுமனக் கூனியும் சகுனியும் இதனை மெய்ப்பிப்பர்.

இயல்பாக நல்லுணர்ச்சி வாய்க்கப் பெற்றவராயினும், அறிவின் ஆற்றல் பெருதபோது, வாழ்வின் மேடுபள்ளங்களில் தடுமாறுவர். அன்னவர் நல்லாரைச் சேர்ந்து வாழ்ந்தால், நன்னெறியில் செல்வர். அவப்பேருக, அவருக்குச் சிற்றின்பம் அமைந்துவிட்டால், அறம் திறம்பிக் கெடுவர். இப்படித்தான் தூயளான கைகேயி தீயவளாக மாறினுள். அவள் 'தெய்வக் கற்பினுள்' என்றும், 'தூயசிந்தை' உடையவள் என்றும் கம்பன் கூறுவான். இராமன் முடிசூடப் போகிருன் என்று கூனி கூறியவுடன், அத்தூயவளின் அகத்தில் அன்பு எனும் கடல் ஆர்த்தெழுந்தது என்றும், அவளது நிறைமதி முகம் புத்தொளி வீசியது என்றும், மிகுந்த உவகையோடு உயர்ந்த மாலையைக் கூனிக்கு நல்கினுள் என்றும் கம்பன் கூறுவான். அறிவின் திறம் பெருததால், இத்தகைய கைகேயி கேடு சூழும் தன்மையளானுள். கணவன் விண்ணகம் செல்லவும், காகுத்தன் கானகம்செல்லவும், பரதன் பதினுன்கு ஆண்டு நந்திக் கிராமத்தில் கண்ணழியக் கலுழவும் காரணமானுள்.

கோடி கூனிகளால் கோசலையைக் கெடுத்திருக்க முடியாது. "இராமனைப் பயந்த எதற்கு இடர் உண்டோ?" என்று பேதையான கைகேயி பகர்ந்ததுபோல, "பரதனைப் பெற்ற எனக்குத் துன்பம் உண்டோ?" என்று அவள் கூறினுளில்லை. பரதன் கைகேயி மகன் என்பதையும், இராமனே தன் மகன் என்பதையும் உணர்ந்தவள் அவள். இந்த வேற்றுமை பொருட்படுத்த வேண்டியது ஒன்று அல்ல என்பதை அறிவால் ஓர்ந்து அதை மாற்றியவள். எனவே,

மறுஇல் அன்பினில்
வேற்றுமை மாற்றினுள் (2, 4, 4)

என்பான் கம்பன். குகனேயும் தன் மகனுகக் கருதும் திராணியை அளித்தது இந்த நல்லறிவே.[1]

இராமன் வேறு, பரதன் வேறு என்ற வேற்றுமையைப் புரியாதவளாகவே கைகேயி இருந்தாள்.

மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலே அறிவும் ஒத்தவால்
வேற்றுமை உற்றிலள்.[2] (2, 2, 59)

என்பான் கம்பன். கூனி தோன்றி, இராமன் வேறு, பரதன் வேறு என்பதைக் காட்டினுள்; அதன் அடிப்படையில் அவளேக் கேடு சூழும் வழியில் உந்தித் தள்ளினுள்.

வேற்றுமை மாற்றிய கோசலேயை யாராலும் அசைக்க முடியவில்லே. வேற்றுமை அறியாத பேதையைக் கூனி கெடுத்துவிட்டாள்.

எனவே, தக்க இன்ன, தகாதன இன்ன என்பதைத் தேர்ந்துகொள்ளும் அறிவுடன், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற அன்புநெறியில் மாசற்ற மனத்தினராக நல் வினே ஆற்றுதலே அறமாகும். இந்தப் பின்புலத்திலேயே

---

1 *'இன் துணேவன் இராகவனுக்கு இலக்குவற்கும்*
இளேயவற்கும் எனக்கும் மூத்தான்"

என்று பரதன் குகனே அறிமுகம் செய்தபோது, கோசலே இராம இலக்குவர் காடு சென்றதும் நலமாயிற்று என்று இயம்பிவிட்டு,

"நீவிர்
ஐவிரும் ஒருவீராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர் என்ருள்."

(அகல் இடம்-பரந்த உலகம். அளித்தீர்-காப்பீராக.)

2. மங்கை-கைகேயி.

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்;
அகுல நீர பிற (34)

என்ற குறளின் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதுவரை கூறியது முதலறம் எனலாம். இது காலம், தேசம், சூழல் ஆகியவற்றால் கட்டுப்படாதது. இது தேர் ஓடிய காலத்துக்கும் பொருந்தியது; 'கார்' ஓடும் காலத்துக்கும் உகந்தது. ஆசியாவுக்கும் ஏற்றது; இதர கண்டங்களுக்கும் தகுந்தது. இன்பத்தோடும் இசைவது; துன்பத்திலும் தகைவது. கருமத்துக்கு உரிய கருவி என்று இதைக் கைக்கொள்வதில்லை; மானிட இயல்பாகவே கைவரத் தக்கது இது. தன்னால் வரும் பயன் தானேயாகித் திகழ்வது.

இந்த முதலறத்திலிருந்து கிளைத்தும் வேறுபட்டும் செல்வதே சார்பு அறம் ஆகும். எக்காலத்துக்கும் ஒத்து இயலும் தத்துவ உண்மையான முதலறத்தைச் சமுதாய வாழ்வு என்ற உலகியல் உண்மையோடு பொருந்தச் செய்து பல்வேறு நிலையிலுள்ள மக்களுக்கு நடைமுறை விதிகளை வகுப்பதே சார்பறம் எனலாம். சமுதாய வாழ்வு மாறுவதால், சார்பறமும் மாறும் என்பது கண்கூடு.

சார்பறம் பலவகைத்து. இல்லறம், துறவறம் என்பன ஒரு வகையின. அந்தணர் அறம், அரசர் அறம், வேளாளர் அறம், வணிகர் அறம் என்பன வேறு வகையின. இக்காலத்தில் எழுத்தாளர், வைத்தியர், ஆசிரியர் முதலிய பல்வகை வினைஞர் தத்தம் தொழிலுக்கு ஏற்ற நடத்தை விதிகளை உருவாக்கியிருப்பதையும் சார்பறம் எனலாம்.

இன்று சமுதாயத்துக்கு நன்மையாக உள்ள சார்பறமே நாளைக்குத் தீமையாக மாறலாம். தனி உடைமை ஏற்பாட்டுக்கு மாற்றுக் காணமுடியாத காலத்தில், செல்வர்கள் வறியவர்க்கு வழங்கி இசைகொள்ள வேண்டுமென்ற அறத்தினைப் போதிப்பது தக்கதே. காலம் மாறிச் சமதர்ம

சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதற்கு பக்குவமான நிலைமை எய்திய பிறகு, சமதர்மப் பாதைக்கு மாற்ருகக் கொடை நெறியைப் போற்றுவது பிழையாகும்; வன்பழியுமாகும். அன்று ஈட்டம் விரும்பி இசை வேண்டாப் பேய்ப் பிறப்பினரைச் சாடி, ஈகையின் உயர்வை வள்ளுவர் வற்புறுத்தியது செம்மை சான்ற செயலே. இன்று தனி உடைமை முறைக்கு இறுதி சூழ்ந்து சமதர்மச் சமுதாயம் சமைப்பதற்கு ஏற்ற நிலைமை மலர்ந்துள்ள போது, பொருளாதாரத்தில் ஆதிக்கம் வகிக்கும் சிலரைக் கருணை உள்ளத்தினராக மாற்றுவதே செய்யத்தக்க கருமம் என்பது நாட்டுக்குத் தீமையே சூழ்வதாகும்.

வம்ச பரம்பரையான தொழில் பிரிவினையின் அடிப்படையில், பல்வகைச் சாதி ஏற்பாடு வளர்ந்தது. அந்தக் காலத்தில், சமுதாயம் கட்டுக்கோப்புக் குலையாமல் முறையாகச் செயல்படுவதற்கு அது உதவியது. நாளாவட்டத்தில் சாதி முறை என்ற சார்பறமே சமுதாய வாழ்வு ஒரே நிலையில் தேங்குவதற்கும் ஒரு காரணமாயிற்று. அத் தேக்கமே அன்னியர் நம் நாட்டைக் கவர்வதற்கு வாய்ப்பு அளித்தது. இன்று வம்ச பரம்பரைத் தொழில் பிரிவினை, காலத்துக்கு ஒவ்வாததாகி மாய்கிறது; புதிய முறையில் தொழில் பிரிவினை உருவாகிறது; எவரும் எத்தொழிலையும் பயின்று மேற்கொள்வதற்குச் சம சந்தர்ப்பம் அளிக்க முயற்சி எடுக்கப் பெறுகிறது. தனி வாழ்வில் (கொண்டு கொடுத்தல், அதன் மூலம் உறவுமுறை அமைதல்) சாதிமுறைக்குப் பெரும் செல்வாக்கு இருந்தபோதிலும், பொதுவாழ்வில் சாதி முறைக்கு இடமில்லை. இன்னமும் சாதி எண்ணங்கள் பொது வாழ்வில் செயல்படுகின்றன. ஆனல் அவற்ருல் தீமை உண்டாகிறது.

சார்பறத்தின் நிலையாமையைக் கண்டோம். அதன் மற்ருேர் இயல்பையும் குறித்துக்கொள்ள வேண்டும். தனி

உடைமைச் சமுதாயத்தில், முதலறத்திலிருந்து முரணிய செயல்களுக்குச் சார்பறம் இடம் தருவதே நாம் இங்குக் கருதுவது. ''அன்பு உடையார் என்பும் உரிய பிறர்க்கு'' என்று தியாகத்தைப் போற்றும் முதலறம். ஆனல் தனி உடைமையாளர் தமக்கென்று பொருள் பெருக்குவதைச் சார்பறம் ஏற்றுக்கொண்டது. மானம் நோக்கின் கவரிமான் அனைய தன்மையராக யாவரும் வாழவேண்டுமென்று முதலறம் கூறும். சிலர் ஈகையால் புகழையும் வேறு சிலர் இரத்தலால் இழிவையும் அடைவதைச் சார்பறம் வேண்டா வெறுப்பாக ஒத்துக்கொண்டது. நாணயமான தொழில் களிடையே உயர்வும் இல்லை. தாழ்வும் இல்லை என்று முதலறம் இயம்பியது. ஆனல் செல்வத்தாலும் அதிகாரத் தாலும் சாதியாலும் மலிந்த ஏற்றத் தாழ்வுகளை மறுக்காது, அவற்றை முறைப்படுத்திக் கட்டுப்படுத்தும் முயற்சியையே சார்பறம் மேற்கொண்டது. இதனைக் கண்டு ஒரு நந்தனரையும் ஒரு திருப்பாணாழ்வாரையும் படைத்து ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சரிநிகர் என்று சாற்றி அமைதி கண்டது முதலறம்.

தனிஉடைமையே தன்னலத்தின் வேர். யான் எனது என்னும் செருக்கைத் துறவிகளோடு பிறரும் நீக்கவேண்டு மெனில், பயன் கருதாது பணியாற்றும் திறம் அனைவருக்கும் அமைய வேண்டுமெனில், பொதுமை நெறியில் பொருள் இயல் அமையவேண்டும். பொதுமை வழியில் பொருளைப் படைத்துத் துய்க்கும் சமுதாயத்தில் முதலறத்துக்கும் சார்பறத்துக்கும் இடையேயுள்ள பிணக்கம் நீங்கும். இரண்டும் இணக்கமாக அமையும். எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தித் துய்க்கும் நிலையில், முதலறமும் சார் பறமும் ஒன்றி ஒருமை நிலையினை எய்திவிடும். இதனைத் தன் மேதாவிலாசத்தாலும், அன்பின் திறத்தாலும் வளமார்ந்த மனோபாவனையாலும் தெள்ளிதின் உணர்ந்த கம்பன் இதன்

விளக்கமாகக் கோசல வாழ்வைப் படைத்திருப்பதை அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

2. அரசநீதி சார்பறமே

முதலறத்தையும் சார்பறத்தையும் இனம் கண்டு கொண்ட தெளிவோடு, தொல்லோர் வகுத்த அரசியலின் இயல்புகளைத் தேர்ந்து தெளியவேண்டும்.

அரசியலின் முதலாய நோக்கமும் முடிவாய பயனும் அறம் காத்தலே என்று பெரியோர் துணிந்தனர். பகை நீக்கிக் குற்றம்கடிந்து அச்சம் தவிர்த்துப் பொருள் பெருக்கிக் குடிகளை ஓம்புவதற்கே தண்டம் தோன்றியது என்பார் பீஷ்மர். அத் தண்டம் தருமத்தின் வடிவே என்பார் மனு.

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல் (543)

என்றார் வள்ளுவரும். இந்தச் செங்கோல், வானம் பொழியும் மழையினைப் போலவே மக்களுக்கு இன்றியமையாத் தேவை என்றும் அவர் உரைத்தார்.

பெரிய மீன் சிறிய மீனை விழுங்குதல்போல, வலியார் எளியாரை வதைக்கும் மச்ச நியாயத்தால் மனிதகுலம் கெடுவதைத் தவிர்த்து, எளியவனையும் வலியவனுக்குவது தண்டமே என்றார் கௌடிலியர்.

தண்டத்துக்குக் காவலனாகிய அரசன், கல்வி கேள்விகளால் சிறந்து, அறிவால் உயர்ந்து, குடிகளை ஆளும் திறன் பெறவேண்டுமென்றும் அவர்கள் மொழிந்தனர்.

அரசன் இன்சொல்லனாயும், காட்சிக்கு எளியனாயும், வெறுப்பான விமர்சனங்களையும் பொறுப்பானாயும், இடித்துரைக்கும் பெரியாரின் துணையினையே தலையாய வலிமை

யாகக் கருதுவோனுயும் விளங்கவேண்டுமென்றும் அவர்கள் இயம்பினர்.

தன் மனத்தை வெல்லுவதே அரசனது முதலாவது கடமை என்பார் பீஷ்மர். காமம், வெகுளி, உலோபம், நன்மையின் நீங்கிய மானம், மதம் என்ற செல்வக் களிப்பால் ஏற்படும் செருக்கு, அளவுகடந்த உவகை ஆகியவற்றைப் பகை வர்க்கமென்று குறித்து, இவற்றை நீக்கிப் பொறி அடக்கவேண்டுமென்று கௌடிலியர் கூறினுர். இந்த அறு வகைக் குற்றங்களையும் மன்னன் கடியவேண்டுமென்று வள்ளுவரும் கூறினுர். (431, 432)

தன் உடலை யாகமேடைத் தூணுகவும் தன்னுயிரை அத் தூணில் கட்டிய பசுவாகவும் கருதிக் குடிநலனுக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து ஆள்வோனே நல்வேந்தன் என்று பீஷ்மர் கூறினுர். குடிகளைத் தழுவிக் கோல் ஓச்சும் மன்னவனைக் கடவுள் என்றே மக்கள் கருதுவர் என்ருர் வள்ளுவர். (388)

"கொடுந்தண்டம் மக்களை நடுக்கமுறுத்தும்; குறைந்த தண்டம் அவமதிக்கப்படும்; தகுதியான தண்டம் நன்கு மதிக்கப்படும்" என்ருர் சாணக்கியர்[1]

கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்[2] (567)

என்று வள்ளுவர் கொடுந்தண்டத்தை எதிர்த்து எச்சரித்தார். முறை தவறும் அரசன் குடியும் கூழும் ஒருங்கு

---

1 மௌரியர் காலத்தில் வாழ்ந்து அர்த்தசாத்திரம் என்ற பொருள் நூலை அருளிய கௌடிலியருக்கே சாணக்கியர் விஷ்ணுகுப்தர் என்ற பெயர்களும் உண்டு.

2. கை-ஒழுக்கம். அதாவது இங்கு நீதி. கை இகந்த நீதி கடந்த. அடுமுரண்-பகைவரை வெல்லும் வலிமை.

இழப்பான் என்றும் அறிவுறுத்தினர். குற்றம் புரிந்தாரிடத்தில் தாட்சணியம் காட்டும் குறைந்த தண்டமும் கூடாது. என்றுர் (541). குற்றம் கடிதல் வடு அன்று, வேந்தன் தொழில் என்றும், கொலேயிற் கொடியாரை ஒறுத்தல் களை எடுத்துப் பயிர் காக்கும் உழவன் தொழிலே ஒக்கும் என்றும் விளம்பித் தகுதியான தண்டத்தின் தேவையை வள்ளுவர் விளக்கினர்.

எனவே அரசத் தொழில் அறமே உடைத்து என்று எண்ணுதல் தக்கதே. ஆனல் செங்கோல் செலுத்தும் வேந்தனும் அறம் திறம்பும் கருமங்கள் சில இயற்ற நேர்கின்றது. நஞ்சாலும் நெருப்பாலும் சூனியத்தாலும் பகைவரை வருத்தி அழித்தலும் குற்றமில்லே என்று முன்னேர் கூறினர். இது ஒன்றை வள்ளுவர் கூறவில்லேயெனினும் வேறு பல வஞ்சனைகளுக்கு அவரும் உடன்படுகிருர்.

மைந்தன் முதல் மாற்ருன் வரையில் யாவரையும் ஒற்ருடுவது, எவரையும் நம்பாது அனைவரையும் அஞ்சும் கொள்கையால் விளைவதாகும். ஆனல் ஒற்றர் இல்லாது கொற்றவன் இல்லே என்று பீஷ்மர் கூறுவார். சாணக்கியருக்கும் இது உடன்பாடே.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்[1]
வல்அறிதல் வேந்தன் தொழில் (582)

என்பார் வள்ளுவரும். ஒற்ருடாத மன்னனுக்கு வெற்றி இல்லே என்றும் அவர் எச்சரிப்பார்.

ஒற்றரைப் பலவகைப்படுத்துவார் சாணக்கியர். பெண்களையும் அமைச்சர் இல்லங்களுக்கு அனுப்பி ஒற்ருடுவதற்கு அவர் ஏற்பாடு செய்வார். வள்ளுவர் அதனைக் கூருவிடினும், ஒற்றரை முற்றத் துறந்த முனிவர் வேடத்திலும் அனுப்புவதில் சாணக்கியருடன் உடன்படுவார்.

---

1 எஞ்ஞான்றும் - ஒவ்வொரு நாளும். வல் அறிதல்- விரைந்து அறிதல்.

மேலும்,

ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்

என்று உரைத்து, ஒரே காரியத்துக்கு இரு வேறு ஒற்றரைத் தனித்தனியே அனுப்பச் சொல்லுவார் வள்ளுவர். மூன்று வெவ்வேறு ஒற்றர் தனித்தனியே ஒற்றித் தந்த செய்தி ஒன்றாயிருந்தால் அதை உண்மை எனக் கொள்ளலாமென்று சாணக்கியரும் வள்ளுவரும் மொழிவர் (குறள் 589). இங்கு அவநம்பிக்கையில் பிறந்த தந்திரத்தின் எல்லையைக் காண் கிறோம்.

பகைநாட்டின் நல்லவர்களையும் தீயவர்களையும் தரம் அறிந்து தகுந்த முறையில் வஞ்சித்து வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சாணக்கியர் அறிவுறுத்துவார். பொருத் தல் (சந்தி), பிரித்தல் (விக்கிரகம்) என்ற கலைகளில் வல்ல வனே அமைச்சன் என்று முன்னோர் கூறியதை வள்ளுவரும் ஏற்றுக் கொள்வார்.

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு (633)

என்பது குறள். பகைவரின் துணைவரை அவரிடமிருந்து பிரிக்கவும், அவ்வாறு பிரிந்தவரைத் தம் துணைவராகப் பேணிக்கொள்ளவும், முன்பே தம்மிடமிருந்து விலகியவரைக் கூட்டிக் கொள்ளவும் வல்லவனே அமைச்சன் ஆவான் என்பது இதன் பொருள். அன்னிய அரசுகளது வலியைச் சந்தி விக்கிரகத்தால் சிதைக்க வேண்டுமென்பது வஞ்சனையே அல்லால் வேறு ஒன்றில்லை.

அறன் அல்லன சில செய்து அறம் காக்கும் இந்த அவலத்தை வெறுத்தே, "வேண்டேன் மகுடம்" என்று கைவிதிர்த்தார் யுதிட்டிரர். இத்தகைய செயல்கள் இழிந் தவை அல்ல என்று பீஷ்மரும் வாதித்தாரல்லர். தனித்

தனியே நோக்கின் இவை ஒவ்வொன்றும் தாழ்மையே, தாளாண்மையல்ல, ஆனால் தனக்கென வாழாது பிறர்க்குரியாளனாகப் பணிபுரியும் அறவேந்தன், குடிநலம் கருதி இக் கருமங்களை இயற்றும்போது, அறம் மீறிய குற்றம் அவனைச் சேராது என்று பீஷ்மர் அமைதி கூறினார்.

இது எவ்வாறு? மனிதர் யாவரும் நன்னெறியில் செல்வோராயின், சமுதாய வாழ்வில் சிக்கல் தோன்றாது. அப்போது, தண்டத்துக்கே தேவை இல்லாது போய்விடும். ஆனால், பொருள் நசையும் மண்ணாசையும் பொறாமையும் செருக்கும் மனிதர் பலரை ஆட்டிப் படைக்கும் சூழலில், குற்றம் கடிந்து பகை நீக்கி நாடு காக்கும் பணி சிக்கலானதாகிறது. இது அறவழி, இது புறவழி என்று எளிதில் தீர்மானிக்க இயலாத சிக்கலும் நேர்கிறது. பகைவர் வஞ்சனையால் கேடு சூழும்போது, அவரது வலிமையை அறியவும் சிதைக்கவும் ஒற்றாடலையும் சந்தி விக்கிரகம் முதலான சூழ்ச்சிகளையும் அரசன் கைக்கொள்ள வேண்டும். இவை இழி செயல்களென்று தள்ளிவிட்டால், பகைவரைத் தொலைப்பது அரிதாகிறது. எனவே, அறம் அல்லன செய்தாவது நாடு காப்பதா, அறம் வழுவாதிருந்து நாட்டை இழப்பதா என்ற வகையில் பிரச்னை உருவாகிறது. நாடு காத்தலே அரசனது தலையாய கடமை என்பதால், குறியின் செம்மையைக் கருதிக் குறுநெறியினைத் தழுவ அவன் முன்வரவேண்டும். நெறியின் செம்மையைக் காப்பேனென்று செப்பிக் குறிக்குக் குழி பறிக்கக் கூடாது. இவ்வாறே, முன்னோர் 'விரகின்றி வேந்தில்லை' என்ற சூத்திரத்துக்கு அமைதி கூறினர். கிணறு தோண்டுவோன் அதில் ஊறும் நீரைக்கொண்டு தன்மீது படிந்த சேற்றைக் கழுவுதல் போல, செங்கோன்மையால் ஈட்டும் புண்ணியத்தைக் கொண்டு வஞ்சனையால் வரும் பாவத்தைக் கழுவலாமென்றும் தடைக்கு விடை கூறுவோர் உளர்.

குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ளும் கொள்கை உடைய வள்ளுவருக்கும் இது ஏற்புடைத்தே.

எனினும், அவநம்பிக்கையும் ஐயமும் வஞ்சனையும் கொடுமையும் பெருக்கிச் சமுதாயத்தின் சூழலை நச்சு மயமாக்கும் தீமையாகவே இச் சார்பறம் செயல்படுமென்று கம்பன் அஞ்சினன். உற்ற மனைவியையும் பெற்ற மைந்தனை யும் அயிர்க்கும் அளவுக்குச் சிறுமை உறும் சமுதாயத்தில், அன்புக்கும் நட்புக்கும் இடமில்லாது போய்விடும். தோழ மைக்குப் பதிலாக வஞ்சனையே எங்கும் பரவிப் படரும். உதட்டில் வெல்லமும் உள்ளத்தில் கள்ளமுமாக உள்ளவரே வாழ்வதற்கு வழி ஏற்படும். வஞ்சகத்தில் விஞ்சியவரே முன்னுக்கு வருவர்; நாடாளும் பெற்றிக்கு உரியராவர். கொடுந்தண்டம் அமைந்து, நல்லோரும் சான்றோரும் அரக்கரால் அலைப்புண்ட முனிவரைப்போல், இடருற்றுத் தவிப்பர். எனவே, தின்மையால் நன்மை நாடும் புன்மை யைக் கம்பன் வெறுத்தான்.

3. இராமன் புகன்றது

ஆயினும், வாலி வதைக்குப்பின் திருமுடி புனைந்த சுக்கிரீவனுக்கு இராமன் அரசநீதி ஓதும் வகையில், கிட்கிந்தை காண்டத்தில் சார்பறம் இடம் பெற்றிருக்கிறது. பின்பற்றுவதற்குரிய வழிமுறையாகக் கம்பன் இதனை இங்குக் காட்டவில்லை. நாடகநயம் உணர்ந்த கவிஞன், தலைவனது சொல்லாலும் செயலாலும் அவன்தன் மனநிலை யைப் புலப்படுத்த விழைகின்றான்; எனவே முதலறத்தின் மூர்த்தியான இராமன் சீதையைப் பிரிந்ததால், சார்பறம் பேசும் அளவுக்கு மனங்கலங்கியிருக்கிறான் என்பதை நமக்கு உணர்த்துகிறான். இராமனது நிலைகுலைவுக்கு ஓர் அளவு கோலாகவே சார்பறப் பேச்சு அமைந்திருப்பதை நாம் இனிக் காண்போம்.

மௌலி சூடிய சுக்கிரீவனை மார்புறத் தழுவிய இராமன் மொழிவான்:

வாய்மைசால் அறிவின் வாய்ந்த
மந்திர மாந்த ரோடும்,
தீமைதீர் ஒழுக்கின் வந்த
திறத்தொழில் மறவ ரோடும்,
தூய்மைசால் புணர்ச்சி பேணித்
துகள் அறு தொழிலை ஆகிச்
சேய்மையோடு அணிமை யின்றி,
தேவரின் தெரிய நிற்றி[1] (4, 8, 8)

"அறிவிற் சிறந்த சத்தியசீலர்களையும், வலிமையிற் சிறந்து ஒழுக்கம் ஓம்பும் வீரரையும் தூய நண்பரையும் சுற்றமாகக்கொண்டு, அவர்கள் அணுகாதும் அகலாதும் (தீக்காய்வார்போல்) பழகச் செய்து, வடுவில்லா வேந்தன் தொழிலை இயற்றித் தேவன் எனத் திகழ்வாயாக" என்று இராமன் கூறுகிறான். இது தக்கதே.

செய்வன செய்தல், யாண்டும்
தீயன சிந்தி யாமை,
வைவன வந்த போதும்
வசை இல இனிய கூறல்
மெய்யன வழங்கல், யாவும்
மேவின வெஃகல் இன்மை,
உய்வன; ஆக்கித் தம்மோடு
உயர்வன; உவந்து செய்வாய்[2] (4, 8, 11)

---

1. புணர்ச்சி-நட்பு. துகள் அறு-குற்றமற்ற. சேய்மை யோடு அணிமை இன்றி-(அவர்கள்) மிகவும் நெருங்காமலும் விலகாமலும் பழகச் செய்து.

2. வைவன வந்தபோதும்-(பிறர்) வசைபேசினர் என்ற சேதி வந்தபோதும். மேவின-பொருந்தின (பொருட்கள்). வெஃகல் இன்மை-விரும்பாமை.

என்பான் இராமன். தூயன சிந்தித்து நல்லன செய்தல், கடுஞ்சொல் பொறுத்து இன்சொல் பேசல், வாய்மை தவரு திருத்தல், பிறர் பொருள் வெஃகாமை ஆகிய உறுதிப் பொருள்களைக் கடைப்பிடித்துக் குடிகளை உயர்த்துவதின் மூலம் தானும் உயர்வதையே மனத்துக்கினிய கருமமாகக் கொள்வாய் என்று இராமன் புகன்றதும் நன்றே.

நமக்கு நாயகன் மட்டுமன்று; "நன்மை நனி பயந்து எடுத்து நல்கும் தாய்"[1] என்று குடிகள் புகழும் வகையில் அவர்களைப் பேணிக் காக்கவேண்டுமென்றும், தீயன வந்த போது, அறவரம்பு மீருவண்ணம் தீமையோரைச் சுட வேண்டுமென்றும் இராமன் மேற்கொண்டு உரைப்பதும் ஏற்புடைத்தே:

பூவின்மேல் புனிதற் கேனும்
அறத்தினது இறுதி, வாழ்நாட்கு இறுதி;
அஃது அறிதி, அன்ப![2] (4, 8, 15)

என்று அவன் எடுத்துக்கூறுவதும் அவனுக்குப் பெருமை தருவதே.

கூனியால் தனக்கு உற்றகேட்டைக் காட்டி, "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்ற நெறியை அவன் உணர்த்துவதும் சீர்மை உடைத்தே.

ஆனால் இவ்விதம் அறம் பகர்வதுடன் அமையாது விரகும் வேந்தனுக்குத் தேவை என்று அவன் விளம்பிவிடு கிறன்.

'புகைஉடைத்து என்னின், உண்டு
பொங்கு அனல் அங்கு' என்று உன்னும்[3]

---

1. பயந்து-பெற்று. நல்கும்-காக்கும்.
2. பூவின்மேல் புனிதன்-நான்முகன்.
3. உன்னும்-ஊகித்து உணரும்.

மிகைஉடைத்து உலகம்; நூலோர்
*வினையமும் வேண்டற் பாற்றே** (4, 8, 9)

என்று தேர்ந்த சொற்களைச் செருகித் திறம்படப் பேசுகிறுன் இராமன்.

இவ்வுலகத்தோர், கண்ணுல் கண்டதே உண்மை என்ற ஒற்றைச்சாண் வட்டத்தில் இயங்குவார் அல்லர். கண்டதைக் கொண்டு, காட்சிக்குப் புலனுகாத உண்மையையும் ஊகிக்கும் அறிவு பெற்றவர். பார்வைக்குப் புகை தெரிந்தால், அந்த இடத்தில் எரியும் கனல் உண்டு என்பதை அவர்கள் உய்த்துணர்வார்கள். இந்த மிகுதியான விவேகத்தை உலக மாந்தர் அடையப் பெற்றிருப்பதால், அரச நீதிநூல்களில் கூறப்பட்டிருக்கும் வினையமும் தேவை என்கிறுன் இராமன். அரசின் நிலையும் அரசனது சிந்தனையும் அவன் செய்யவிருப்பதும் மக்களும் மாற்றரசரும் அனுமானித்து அறிவதற்கு இடமில்லாத வகையில், வேந்தன் கரவாக ஒழுகவேண்டும் மென்பதே இது. தொல்லோரின் தண்டநீதி நூல்களைக் கொண்டு, கொற்றவன் வஞ்சனையை நியாயப்படுத்துகிறுன் இராமன்.

வினையம் என்ற சொல்லுக்கு வஞ்சகம் என்று பொருள் கொள்ளாது, விநயம் அல்லது பணிவு என்று பொருள் கொண்டு, காகுத்தன் கூற்றின் வெம்மையைத் தணிக்க முயல்வார் உளர். ஆனுல் பணிவு என்று பொருள் கொண்டால், உலகத்தாரின் அனுமான அறிவாற்றலைப் பற்றிய குறிப்புப் பொருள் இல்லாது போகிறது. மேலும், அரச நீதிநூலோர் உரைக்கும் வஞ்சனையே அல்லாது, முதலற நூலோர் மொழியும் பணிவினை இங்குக் கருதினுன் அல்லன் என்பதை இராமனே இப்பாட்டின் பின்னிரண்டு அடிகளில் தெளிவுபடுத்தி விடுகிறுன்.

---

* மிகை-மிகுந்த அறிவு. நூலோர்-அரசநீதி நூல்களை இயற்றியோர். வினையம்-வஞ்சகம்.

பகையுடைச் சிந்தை யார்க்கும், பயன்உறு பண்பின் தீரா
நகையுடை முகத்தை ஆகி, இன்உரை நல்கு, நாவால்

என்றுரைத்த பின், இராமன் விரகினை விளம்பவில்லை என்ப தெல்லாம் வம்பே. பகைவரது தராதரம் அறிந்து, அவரவர் தகுதிக்கேற்ற செயல்களைச் சோர்வின்றிச் செய்யும்போதே, அவர்களிடம் நகைமுகம் காட்டித் தேனொழுகப் பேச வேண்டுமென்கிறான் இராமன். ''இன்உரை நல்கு, நாவால்'' என்று இயம்பி, விரோதியிடம் இனிக்கப் பேசுவதெல்லாம் உள்ளத்தில் ஊறும் அன்பால் விளைவதல்ல என்பதை ஐயத்துக்கு இடமில்லாமல் காட்டிவிடுகிறான். கறுவுள்ள மனத்தனாகிப் பகைவரை ஒற்றுடவும், பிரித்தல் பொருத்த லால் அவர்தம் வலியைச் சிதைத்துத் தன் வலியைப்பெருக்க வும், பொருதலுக்கான வினைகளைச் செய்யவும் மறைவில் முனைந்தபோதே, புறத்தே சிரித்தும் இனியன பேசியும் நடிக்க வேண்டுமென்பது இராமன் கூற்று. இது வழிவழி வந்த நூலோர் வினையமே ஆகும். வள்ளுவரும்,

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல்[1] (830)

என்றார்.

தம் பகைவர் தமக்கு நண்பராய் ஒழுகும் காலம் வந் தால், அவரோடு முகத்தால் நட்புச் செய்து அகநட்பை விலக்கவேண்டுமென்று இங்கு வள்ளுவர் போதிக்கிறார்.

4. இராமன் செயல் வேறு

பகைவரிடம் நண்பராக நடித்து அவர்தம் நாசம் சூழ வேண்டுமென்ற இப் புன்மையைக் கம்பன் ஒப்பமாட்டான். இங்கு இதனைக் கழறும் இராமனுக்கே இது உடன்பாடு

1. ஒரீஇ-விலக்கி.

அன்று. கரவு என்பதை அறியாத கோசலத்தின் தவப் புதல்வன் அவன். பகைவனுக்குப் பின்னவனான வீடணன் தன்னை நாடி வந்தபோது, அவனைத் தோழனாக வரித்தவன் இராமன். வீடணன் வஞ்சக நெஞ்சனாக வருகிறான் என்றே சுக்கிரீவன் முதலானோர் அஞ்சினர். அவனை ஏற்பதால் ஆபத்து வருமென்று அவர்கள் எச்சரித்தனர். ஆனால் தஞ்சம் புகுந்தவனை நஞ்சமென விலக்குவது அறம் திறம்புவதாகும் என்று கருதினான் இராமன். வீடணனிடம் முகத்தால் நட்புக்காட்டி மனத்தில் வைரம் பாராட்டும் சிறுமைக்கும் அவன் ஆளாகவில்லை. 'வந்தவனால் நன்மையே ஆகுக, தின்மையே ஆகுக, சரணம் என்றவனை ஏற்றே தீருவேன்' என்றான் அந்த உத்தமன்.

வெற்றியே பெறுக, தோற்க;
வீக, வீயாது வாழ்க;
பற்றுதல் இன்றி உண்டோ?
அடைக்கலம் பகர்கின்றானை (6, 4, 105)

என்று தன் துணைவருக்கு எடுத்துரைத்த ஏந்தல் இராமன்.

''பழகியவன் ஆகுக, புதியவன் ஆகுக! என் தாய் தந்தையரையும் தமையனையுமே கொன்றவன் ஆகுக; நாளைக்கே மாறுபடுவான் ஆகுக; என்னைத் தஞ்சமென்று வந்தவனை நெஞ்சார ஏற்பேன். நெடிது நாள் பழகிய தோழனாகவே அவனைக் கருதுவேன்'' என்று தூய அறம் இயம்பிய கருணாமூர்த்தி இவன்.

இன்றுவந் தான்என்று உண்டோ?
எந்தையை யாயை முன்னைக்
கொன்றுவந் தான்என்று உண்டோ?
அடைக்கலம் கூறுகின்றான் [1]

---

1 எந்தையை-என் தந்தையை. யாயை-(என்) தாயை. முன்னை-(என்) தமையனை.

துன்றிவந்து அன்பு செய்யும்
 துணைவனும் அவனே; பின்னைப்
பின்றும்என் றாலும் நம்பால்
 புகழ் அன்றிப் பிறிதுஉண் டாமோ?[1] (6, 4, 106)

வந்தவன் சூழ்ச்சியால், தான் இறந்தாலும் கவலையில்லை என்றும் கூறுவான் இராமன். புகலென்று வந்தவன் வஞ்சனையால் 'இறந்த நாள் அன்றோ என்றும் இருந்த நாள் ஆவது' என்றும் உரைப்பான்.

இராமன் கருத்துக்குத் துணைவர் இணக்கம் தெரிவித்த பின்னர், கடைவாயிலில் இருந்த வீடணனைச் சுக்கிரீவன் அழைத்து வந்தான். அப்போது இராமன் அவனைத் தழுவிப் பேசிய பேச்சும், தயா முதலறத்தின்[2] விழுமிய வடிவாக அவன் திகழ்வதை எடுத்துக்காட்டுகிறது:

குகனொடும் ஐவர் ஆனேம்
 முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்;
 எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய;
 நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகலரும் கானம் தந்து
 புதல்வரால் பொலிந்தான் நுந்தை.[3] (6, 4, 143)

இவ்வாறு முதலறத்தின் தூய்மையிலிருந்து சிறிதும் பிறழாது கருமம் புரிந்த காகுத்தன், சுக்கிரீவனுக்கு அரச

---

1. துன்றி-நெருங்கி. பின்றும்-மாறுபட்டு நடந்தாலும்.

2. தயா முதலறம்-தயை என்ற முதலறம்.

3. குன்று சூழ்வான் மகன்-சூரியன் மைந்தனான சுக்கிரீவன். எம்முழை-எம்மிடம். அகனமர்-மனமார்ந்த. புகல்அரும்-புகுவதற்கரிய. நுந்தை-உன் தந்தை. தயரதனை 'உந்தை' என்று வீடணனிடம் இராமன் குறிப்பிடும் நயம் பெரிது.

நீதி ஓதும்போது நூலோர் வினயத்தைப் போற்றுகிறான் எனின், அது வரம்பு கடந்த துயரால் அவன் சிந்தை கலங்கியிருப்பதையே காட்டுகிறது.

5. மனச் சோர்வும் மதிச் சோர்வும்

மன்னுயிரெல்லாம் தன்னுயிர் என்று போற்றும் பண்பாளன், தம்பிக்குத் தரணியைப் பரிவுடன் வழங்கி விட்டு வனம் புகுந்தான். இங்குக் காதலியைப் பிரிந்து கடுந் துயர் உழக்கின்றான். சீதையைக் காத்தற்குத் தனக்கும் தம்பிக்கும் வலிமை இருந்தபோதிலும், அது பயனற்றுப் போயிற்று. இருவரையும் மாயத்தால் வேற்றிடம் போக்கித் தமியளான தையலை வவ்விச் சென்றுவிட்டான் அரக்கன். இல்லாளைக் காக்க முடியாதுபோன அவலம் குரிசிலை வதைக் கின்றது. எவர் துன்பத்தையும் பொறுக்க முடியாத குழைவு இந்நம்பிக்கே உரியது. சீதையின் துயரை இவன் எப்படிப் பொறுப்பான்? பொற்பினுக்கு அணியாகவும் கற்பினுக்கு அரசியாகவும் மிளிரும் சீதையை அன்பினுக்குரிய மனைவியாகப் பெற்ற மென்னெஞ்சன் அவளது பிரிவால் மறுகுவதில் வியப்பில்லை. அவளைத் தன் உயிராகவே அவன் கொண்டிருந்ததால்தானே,

ஈண்டுநீ இருந்தாய்; ஆண்டுஅங்கு
எவ்வுயிர் விடும் இராமன்? (6, 4, 77)

என்று அனுமன் சீதையிடம் கூறினான்.

"இன்னுயிர் இன்றி ஏகும் இயந்திரப் படிவம் ஒப் பான்" என்று இராமனை அனுமன் குறிப்பிட்டது முற்றி லும் உண்மையே.

இன்னொன்று: கந்தருவனும் சவரியும் சாற்றக் கேட்டு சுக்கிரீவனை அடைந்தான் இராமன். மனைவியின் பிரிவால்

மனம் மறுகும் தலைவன், இல்லாளைப் பிரிந்து நின்ற சுக்கிரீவனிடம் பரிவு கொண்டது இயல்பே. தம்பியரே உயிர் என்று கருதிய நம்பி, தம்பியின் மனைவியைக் கவர்ந்த தமையனை வாலிமீது சீற்றம் கொண்டான். இந்த உணர்ச்சி வேகத்தில்,

தலைமையோடு நின் தாரமும்
உனக்கு இன்று தருவேன் (4, 3, 70)

என்று உறுதி கூறினன். உண்மையை முழுமையாக ஆராயாது வழங்கிய ஒருதலைத் தீர்ப்பு இது. அன்றே வாலியின் உயிரை முடிப்பேன் என்றதால் மறைந்து நின்று வாலி தொடுக்கும் பழிக்கு ஆளானன்.

ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை, அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை (4,7, 86)

என்று வாலி இடித்துக் கூறும் நிலைமை ஏற்பட்டது. மேலும் தனக்குற்ற அழிவை எண்ணாது, இராமனுக்கு நேர்ந்த இழிவையே எண்ணி வாலி நாணியதும் கடிந்துரைத்ததும், பின்னர், ஆறி நின்று, தன் குற்றம் உணர்ந்து, இராமனது நெடிது நோக்கும் நோன்மையைப் போற்றியதும், அந்த மாவீரனின் மன விரிவைப் புலப்படுத்தின.[1] ஆவேசத்தில், அவசர வாக்கு அளித்தோமே, மறைவில் இருந்து அம்பு தொடுத்து வில்லறம் திறம்பினேமே, சிறியன சிந்தியாதான் ஆன வாலியை மாய்த்தோமே என்றெல்லாம் நினைந்து நினைந்து மனம் புழுங்குகிறுன் இராமன்.

அதனுல்தான், கிட்கிந்தையில் வந்து வசிக்குமாறு சுக்கிரீவன்வேண்டியபோது, வேந்தன் இருக்கை விரதியர்க்கு

1 வாலி வதைதயைப்பற்றிய விரிவான ஆராய்ச்சியைச் 'சிறியன சிந்தியாதான்' என்ற நூலில் காண்க.

ஒவ்வாது என்று உரைப்பதுடன் அவன் அமையான். 'அரக்கன் சிறையில் தேவி நோன்பிருக்கும்போது, ஆவி போன்ற நண்பரோடு இராமன் இன்பம் மேவினன்' என்ற சொல்லுக்கு இடம் தரேன் என்றதுடனும் நில்லான்.

மேலும் கூறுவான்:

இல்லறம் துறந்தி லாதோர்
இயற்கையை இழந்தும், போரின்
வில்லறம் துறந்தும் வாழ்வேற்கு,
இன்னன மேன்மை இல்லாச்
சில்லறம் புரிந்து நின்ற
தீமைகள் தீரு மாறு,
நல்லறம் தொடர்ந்த நோன்பின்
நவை அற நோற்பல் நாளும்.[1] (4, 8, 23)

மனைவியைப் பிரிந்து வாழ்வதால், இல்லறத்தின் இயற்கையை இழந்து நிற்பதாகக் கூறினன். வாலியை மறைந்து நின்று கொன்றதையே வில்லறம் துறந்த செயல் என்று குறிப்பிடுகிருன். இவை போன்ற வேறு சில அற்பச் செயல்களும் புரிந்ததாக இராமன் எவற்றைக் குறிப்பிடுகிருன்? மனைவியின் புலவியைக் கருதி, மாயமானைத் தானே தொடர்ந்து சென்றதையும், வாலி தன் திறத்தில் உரைப்பதற்கு என்ன உள்ளது என்பதை அறியாது, அவனைக் கொல்வதற்கு ஒரு சார்பாக முடிவு கட்டியதையும் கருதிப் பேசுகின்ருனு? அல்லது வாலியுடன் வாதம் செய்தபோது ஒன்றைவிட்டு வேருென்றைப் பேசித் தன் குறையை ஏற்காதிருந்ததை எண்ணுகின்ருனு? அல்லது, துயரால் அவசமுற்றுத் தேய்வோரின் இயற்கைக்கு இணங்க, தான் இழைக்காத குற்றங்களையும் புரிந்ததாகப் பாவித்துப் பழி சூட்டிக்

---

1 சில்லறம்-அற்ப ஒழுக்கங்கள். நவை-குற்றம்.

கொண்டு சோர்கிறுஞ? யாதாயினும் ஆகுக; தான் இழைத்த தீமைகள் தீர, கார்காலம் முழுவதும் கடுந்தவம் புரிவேன் என்று அவன் உரைப்பதும் கிடக்க; சீதையைப் பிரிந்ததால், அவன் துயரின் வடிவாகித் தடுமாறுகிறுன் என்ற உண்மையை நாம் இங்கு உணரவேண்டும்.

இந்தத் தடுமாற்றத்தில், இராமன் சார்பறம் மட்டுமா பேசுகின்றுன்? அதற்கும் அப்பால் செல்கிறுன்.

மங்கையர் பொருட்டால் எய்தும்
மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கைஇன்று உணர்தி; வாலி
செய்கையால் சாலும்; இன்னும்
அங்குஅவர் திறத்தி ஞனே
அல்லலும் பழியும் ஆதல்
எங்களில் காண்டி அன்றே;
இதற்குவேறு உவமை உண்டோ?* (4, 8, 13)

என்பதும் கதிரோன் மைந்தனுக்குக் காகுத்தன் கற்பித்த அரசநீதியே.

மங்கையரால் பழியும் அல்லலும் மரணமும் நேரும் என்பது இராமன் இங்கு நிறுவப்புகும் சூத்திரம். மாதரால் மரணம் எய்தும் என்பதற்கு வாலியையும், பழியும் தொல்லையும் வருதலுக்குத் தம்மையும் (இராம இலக்குவரையும்) சான்று காட்டுகிறுன் இராமன்.

இந்தக் கொள்கையை இவனுக்கு எவர், எங்கு, எப்போது கற்றுக்கொடுத்தார்? வம்சம் விளங்கச் செய்யும் தாய்க் குலத்தை அழிவு சூழும் இழிநிலைக்கு உரியவரென்று தாழ்த்துவதைவிடக் கொடுமை இல்லை. புனிதவதியான சீதையின் மணாளனு இவ்வாறு பேசுவது? கோசலையின்மகனு இங்ஙனம் கழறுவது? கைகேயி தீயளாக மாறியபோதும்,

---

*உவமை-எடுத்துக்காட்டு.

அவளை மறந்தும் வெறுத்துப் பேசாத சீலனா இவ்விதம் செப்புவது?

இராவண வதம் நிறைவுற்ற பின்னர், தனக்கு முன் தோன்றிய தந்தை, "உனக்கு அமைந்த வரம் ஒன்று கேள்" என்று வற்புறுத்தியபோது, இவன்,

தீயள் என்று நீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியு மாம்வரம் தருகஎனத் தாழ்ந்தான்[1]
(6, 37, 128)

இதே இராமன்தான், துயரத்தால் தன்வசம் இழந்த நிலையில் மாதரால் மரணம் நேரும் என்று சுக்கிரீவனிடம் மொழிகிறான்.

வாலி மங்கையால் மடிந்தான் என்பது எவ்வாறு உண்மையாகும்? சுக்கிரீவன் மனைவியான உருமையிடம் கொண்ட காமத்தால் அவன் இறந்தான் என்று வேண்டுமானால் கொள்ளலாம். காமத்தால் கேடு வரும் என்பதை அரசநீதி வகுத்தோர் அனைவரும் கூறியுள்ளனர். இராமன் திருமுடி சூடவிருந்தபோது, அவனுக்கு அரசியல் போதித்த வசிட்ட முனிவரும் இதனை எடுத்துரைத்தார்.

தூம கேது புவிக்குஎனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காமம் இல்லை எனின்; கடுங் கேடுஎனும்
நாமம் இல்லை; நரகமும் இல்லையே.[2] (2, 2, 29)

1 என் தெய்வம்-கைகேயி.

2 தூமகேது: வால் நட்சத்திரம். வாமமேகலை-அழகிய மேகலை (அணிந்த). மேகலை என்பது மகளிர் இடையில் அணியும் ஒருவகை ஆபரணம்.

தூமகேது என்று முனிவர் குறிப்பிட்டது மங்கையரையா, அவரால் வரும் காமத்தையா? மங்கையரே எனில் குலமகளிரையா, விலைமகளிரையா? இவ்வாறெல்லாம் மயங்குவதற்கு இடம் தரும் செய்யுள் இது. வசிட்டர், உணர்ச்சி வசப்பட்டு, மறைதந்த நாவால் வாய்தந்தன

உரிமை மனைவியை மருவி மகிழும் பெருமையை விடுத்துப் பிற மகளிர்பால் மையல் கொள்ளுவோர் அழிதுயரும் இழிநரகும் எய்துவர் என்பது முனிவரது கருத்து. அதனுல் காமம் என்னும் இழிவு, வரவிருக்கும் கேட்டுக்கு முன்னறிவிப்பாக விண்ணில் தோன்றும் தூமகேதுவுடன் ஒப்பிட்டார்.

உருமை காமத்தால் வாலி மடிந்தான் என்ருலும் அதற்கு உருமை எப்படிப் பொறுப்பாவாள்? குற்றம் நங்கை உடையதா, இச்சை கொண்ட வாலி உடையதா? வாலியே குற்றவாளி என்ருல் மங்கையரால் மடிந்தான் என்பது எப்படிப் பொருந்தும்?

வாலியின் உரிமை மனைவி தாரை; சுக்கிரீவன் அறை கூவியதைக் கேட்டு அமருக்கு ஆர்த்தெழுந்த வாலியை இடை விலக்கினுள் அந்த உத்தமி. சுக்கிரீவனுக்கு இராமன் என்பவன் இன்னுயிர்த் துணைவனுய் அமைந்து உன்னுயிர் கொள்வதற்கு உடன் வந்தான் என்று சேதி கிடைத்திருப்பதாகச் செப்பினுள். தம்பிக்குத் தரணியை வழங்கிய தியாகியும், தருமத்தின் நாயகனுமான இராமன், அண்ணன் தம்பியர் சண்டையில் குறுக்கிட்டு அம்பு தொடுக்கும் அற்பனுக மாட்டான் என்று பேசி, தாரை வாயை அடக்கி விட்டுக் களம் புகுந்தான் வாலி. மாருக, அவன் தாரை சொல் கேட்டிருந்தால் மங்கையால் வாழ்ந்தேன் என்று விதந்து ஓதியிருப்பான்.

கூறினுரன்று; அமைதியாகவே அறிவுரை நல்குகிருர். இரண்டாவதாக, மாதரார் அன்பாலேயே அறம் கண்ட கோசலத்தின் குருநாதன் அவர். மூன்ருவதாக, கற்புக் கடம் பூண்டவருக்கெல்லாம் முன்மாதிரி எனப் போற்றப் பெறும் அருந்ததியின் கணவர் அவர். நான்காவதாக,

> *"மண்ணினும் நல்லள்; மலர்மகள் கலைமகள், கலை ஊர்*
> *பெண்ணினும் நல்லள்"* (2, 1, 39)

என்று இவராலேயே பாராட்டப் பெற்ற சீதையின் மணுளனிடம் பேசுகிருர்; எனவே அவர் காமத்தையே தூமகேது என்ருர் எனக் கொள்வோம்,

சத்தியவான் வாழ்ந்தது சாவித்திரியால் என்பது பெண்ணைக் கண்ணெணப் போற்றிய சான்றோர் வாழ்ந்த பாரத நிலத்தில் பிறந்த கதை.

மங்கையரால் பழியும் அல்லலும் நேரும் என்பதற்கு இவனும் தம்பியும் உதாரணமாம். மனைவியின் பேச்சைக் கேட்டு, மதிமோசம்போய், மாயமானைத் தொடர்ந்து சென்றதால் அல்லலுக்கு உள்ளாயிருப்பதாக அவன் கருது கின்றானா? அவ்வாறு எனில், அது எப்படிச் சீதையின் குற்றமாகும்? காமத்தால் நிகழும் குற்றங்களில் பெண் வழிச் சேறலும் ஒன்று என்று உரைத்த வள்ளுவரும், அதை ஆடவன் குற்றமெனவே கணித்தார். மீண்டும் வாலி தாரையின் பேச்சைக் கேட்டிருந்தால், நன்னுதலாள் பெட் டாங்கு ஒழுகியதால் உய்ந்தேன் என்றுவிளம்பி, வள்ளுவரது பெண் வழிச் சேறல் அதிகாரத்துக்கு அறைகூவல் விடுத் திருப்பான் அல்லவா?

மங்கையால் பழியும் அல்லலும் வந்தது என்று சூர்ப் பணகையைக் கருதி மொழிகின்றானா? அதனைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் இராவணன் ஏன் அவள் பேச்சைக் கேட்டான்? அவன் என்ன எடுப்பார் கைப்பிள்ளையா? அவன் காமவெறியனாயிருந்ததால், சூர்ப்பணகையின் சூழ்ச்சி வெற்றிபெற்றது. அவன் வஞ்சனை இயற்றிச் சீதையை வவ்வியதால் இராம இலக்குவற்கு அல்லல் மூண்டது.

இராமன் அரசியல் பேச்சின் நொய்ம்மையைக் காட் டவே இவற்றை விரித்துக் கூறினோம். அவனைக் கடிந்தும் இடித்தும் வெறுத்தும் பேசுவது நம் நோக்கம் அல்ல; கம்பன் கருத்தும் அல்ல. சீதையைப் போன்ற மனைவியை இராமனைப் போன்ற நம்பி பிரிந்தால், அவன் துயரத்தில் தன்னிலை தவறு வதில் வியப்பில்லை. அது அவனது செவ்விய இயல்பையே காட்டும்.

கார் காலத்தில் தவம் செய்யப்போவதாகக் கூறினன் காகுத்தன். ஆனல் அவன் எப்படித் தவம் செய்ய முடியும்? சீதையின் பிரிவை எண்ணி எண்ணித் தேய்ந்தான். இதனல் மனச் சோர்வும் மதிச்சோர்வும் அதிகமானதால், மழைக்கால முடிவில் வருவதாக வாக்களித்திருந்த வானர வேந்தன் வராமை குறித்து இராமன் சினம் கொள்கிருன்.

நன்றி கொன்று அரு நட்பினை நார் அறுத்து,
ஒன்றும் மெய்ம்மை சிதைத்து, உரை பொய்த்துளார்க்
கொன்று நீக்குதல் குற்றத்தில் தங்குமோ?
*சென்று, மற்று அவன் சிந்தையைத் தேர்குவாய்**
(4, 10, 3)

என்று இலக்குவனிடம் கூறுகிருன்.

நன்றி கொல்வதும், நட்பின் உயிர்ப்பண்பாம் அன்பைத் துணிப்பதும், சத்தியத்தைச் சிதைப்பதும் அற விரோதம் என்பதில் தடையில்லை. ஆனல் அவ்வாறு அறம் திறம்பு வானைக் கொன்று நீக்குதலும் குற்றமாகாது என்கிருன் இராமன். இது என்ன புதுமை என்று உசாவினல்,

நஞ்சம் அன்னவரை நலிந்தால் அது
வஞ்சம் அன்று; மனுவழக்கு ஆதலால் (4, 10, 5)

என்று நியாயம் காட்டுகிருன்.

நன்றி மறந்தவர் அனைவரையும் கொன்றுவிடலாம் என்று மனு எங்கும் கூறவில்லை. தீயோரைத் தரம் அறிந்து தண்டித்தல் தண்டநீதிக்கு உரியதே என்று மனுவும் பீஷ்மரும் வள்ளுவரும் பிறரும் மொழிந்தது உண்மையே. ஆனல் அது அரசனையே சார்ந்த உரிமை. இராமன் அரசன் அல்லன்; சுக்கிரீவன் இவனது குடியும் அல்லன். மேலும்,

---

* நார்-கயிறு: இங்கு அன்பு என்னும் பிணைப்பு. ஒன்றும்: (மனத்தோடு) பொருந்தி அமைந்த.

இவன் தீயோரைத் தேடிச் சென்று தொலைத்தவனுமல்லன். விராதனும் கரன் முதல் காளையரும் கவந்தனும் தாமாக வந்து இகலி மாண்டனர். அறம் கொன்ற கண்டகரை வேர் அறுப்பேன் என்று தண்டகவன முனிவருக்கு அடைக்கலம் அளித்தபோது உறுதி கூறிய இராமன், அந்த அரக்கரிடம் தானாகப் போர்மேல் சென்றானல்லன். இராவணன் வலிய வந்து சீதையை வவ்விய பின்பே, அவனுடன் அமர் நிகழ்த்த எழுகின்றான். அப்போதும், "சீதையை விடுக! போர் தவிர்க!" என்று அறிவுரை பகர்வதற்கு அங்கதனைத் தூது அனுப்புவான். முதற் போரில், தானையும் தேரும் இழந்து தன்னந் தனியனாய் இராவணன் நின்றபோதும், சீதையை விடுத்துத் தேவரை முறையில் வைத்து வீடணனை அரசனாக்கி அறம் நிலைக்க வழி செய்தால், உயிர்ப்பிச்சை அளிப்பேன் என்பான் இராமன். அதற்கு ஒப்பவில்லையானால் "இன்று போய்ப் போருக்கு நாளை வா" என்று மனவிரிவோடு மொழிவான். வலிய வந்து மாறுகொண்ட தீயோரையும் திருத்த முயல்வதும், அது இயலாதபோதே அவரை ஒறுப்பதும் இராமன் நடைமுறையாகும்.

இத்தகைய செவ்விய வழியில் ஒழுகும் இராமன், "வில் உண்டு; அம்புண்டு; நன்றி கொன்றவனைக் கொல்வேன். வானரப் பேரும் மாளும்" என்றெல்லாம் இலக்குவனிடம் பேசுகிறான் எனில், அது அவனது அப்போதைய மனக் குழப்பத்தையே காட்டும்.

பார்க்கப் போனால், "கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்" என்ற நற்செய்தியை அனுமன் வந்து உரைக்கும் வரையில், இராமன் அவலத்தால் நிலை குலைந்தே இருந்தான். இந்தப் பின்புலத்தில்தான், கிட்கிந்தை காண்டத்தில் அவன் ஓதும் அரசநீதியினைக் கணிக்க வேண்டும்.

ஆக, நாம் முதலறத்துக்கும் சார்பறத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஒருவாறு கண்டு அறிந்தோம்; கண்ணெதிரே காட்சி தந்த சமுதாயத்துக்கு அரசநீதி

வகுத்த தொல்லோர் அதனைச் சார்பறமாகவே அமைத்திருப் பதை ஓர்ந்தோம். அச் சார்பறத்தின் சிறுமைகளைக் கம்பன் வெறுத்த போதிலும், கிட்கிந்தை காண்டத்தில் இராமன் வாயிலாக அச் சார்பறமே ஓதப் பெறுவதை விவரமாகப் பயின்றோம். முதலறத்தின் மூர்த்தியான இராமனது நடை முறைக்கு அச் சார்பறம் முற்றிலும் முரணாக உள்ளதென் பதையும், சீதையைப் பிரிந்து சிந்தை கலங்கிய நிலையிலேயே இராமன் அதனை உதட்டளவில் ஓதுகிறான் என்பதையும் தேர்ந்து தெளிந்தோம். சான்றோன் சித்தம் கலங்கும் போதே சார்பறம் பேசுவான் என்று அமைத்து அதன் நொய்ம்மையைக் கம்பன் காட்டும் கைத்திறம் வியத்தற் குரியது.

4. கோசலம் தழுவிய பொதுமைநெறி

அறம் கொன்ற கோன்மையின் கொடுமையினை இலங்கையில் கண்டோம். சார்பறமாக அமைந்த அரசியலின் பெருமையோடு சிறுமையும் இராமன் வாயிலாகக் கிட்கிந்தையில் கேட்டோம். இனி முதலறத்துடன் முரண்படாத ஆட்சிக்கலையின் மாட்சியினைக் கோசலத்தின் காட்சியில் கற்றுத் தெளிவோம்.

கோசலத்தின் சிறப்பினைப் பேசும் பான்மையில் தொடங்குவது இராமகாதை. நீர் நில வளங்களை வருணிக்கப் புகுந்த கம்பன், ஆற்று வெள்ளத்துக்கு காரணமான மழை பொழியும் மேகத்தை முதலாகக்கொண்டு படலத்தைத் தொடங்கும் மரபினைப் பின்பற்றுகிருன் என்பது மெய்யே. ஆனால் கதையின் தொனியை நுனித்து அறியத்தக்க வகையில் அடி எடுத்துக் கொடுக்கும் நாடக நயத்தில் வல்ல கவிஞன், கோசல மக்கள் முதலறத்தினைத் தழுவி வாழும் மேன்மையினை முதற் செய்யுளிலேயே சுட்டி விடுகிருன்:

ஆச லம்புரி ஐம்பொறி வாளியும்,
காசு அலம்பு முலையவர் கண்எனும்
பூசல் அம்பும், நெறியின் புறம்செலாக்[1]
கோச லம்புனை ஆற்றுஅணி கூறுவாம்.

---

1. ஆசலம்-துன்பம்; காசு-இங்குக் காசுமாலை. அலம்பு-ஒலிக்கும். பூசல் அம்பு-போர்வாளி. நெறியின் புறம்-அறநெறியுடன் மாறுபட்ட புறநெறி.

மக்களிடையே பிரிவும் பகையும் தோன்றுவதற்குக் காரணமான காமம், வெகுளி முதலான அறுவகைக் குற்றங்கள் ஐம்பொறி வாயிலாகத் தோன்றுகின்றன. அறம் விரும்பும் வேந்தன் அந்தப் பகைகளை நீக்கவேண்டுமென்று முன்னோர் மொழிந்தனர். கோசலத்திலோ அரசன் மட்டு மன்று, அனைவருமே நெறி திறம்பாப் பொறியினை உடையர் என்பான் கம்பன். எனவே அன்பும் அருளும் தழுவிய அறம் இங்கு நிலைத்து நிற்பது தெளிவாம்.

ஆசலம்புரி ஐம்பொறி வாளியை முதலடியில் இரு பாலார்க்கும் பொதுவாகக் குறித்துவிட்டுப் பின்னர் பெண் டிரின் கண் எனும் அம்பை மீண்டும் தனியே குறித்தது மிகையாகாது. தெளிந்த மனத்தினரான ஆடவரும் சில சமயங்களில் மாதரின் மையல் நோக்கால் கெடுவர். மேனகை கண்ணெறியின் காம நோக்கால் கோசிக முனிவனது தவம் குலைந்தது என்ற கதை உணர்த்தும் கருத்து இதுவே. மேலும், கற்பின் கனலியைக் காவியத் தலைவியாகக்கொண்ட கதைப் பொருளைச் சுட்டுவதற்கும், தத்தம் கணவரை அல்லால் பிறரைக் காமத்தோடு நோக்கார் கோசல மகளிர் என்று சிறப்பாக உரைப்பது பொருத்தமே. தவிர, மகளிரின் கற்பே காலமாரிக்குக் காரணம் என்பது முன்னோர் நம்பிக்கை என்பதாலும், வான் சிறப்புக் கூறப் புகுந்த கவிஞன், கோசல மாதரின் கற்புத் திண்மையைத் தனியே கூறுவது ஏற்புடைத்தே.

1. நாடும் குடிகளும்

திருநீறு அணிந்த சிவனைப்போல் வெண்ணிறமாகத் தோன்றும் மேகம் கடல்நீரை உண்டு திருமாலைப்போல் கரியதாகின்றது. அக் கார்மேகம், வெப்பத்தால் வறண்ட இமயத்தின்மீது பரந்து மழை பொழிகின்றது.

உள்ளி உள்ள எலாம்
உவந்து ஈயும்அவ்
வள்ளி யோரின்
வழங்கின மேகமே[1] (1,1,4)

என்பான் கம்பன். தனக்கு விஞ்சியதே தருமம் என்ற குறு நெறியில் படராது, உள்ளதையெல்லாம் நினைந்து நினைந்து வழங்கி மகிழும் வள்ளலைப்போல் மேகம் மழையைப் பெய்கிறதாம்.

இந்த வெள்ளம் சரயூ நதியில் ஓடிவந்து கோசலத்தின் உயிர்களுக்கெல்லாம் தாய்ப்பால் அனையதாய் ஊட்டம் அளிக்கிறது. ஆற்று வெள்ளம் அனைவருக்கும் பயன்பட வேண்டுமென்பதற்காகப் பல கால்வாய்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. கால்வாய்க் கரையைக் காத்து நின்ற உழவர்கள் புதுப்புனல் வரும் செய்தியைப் பறை கொட்டி அறிவிக்கின்றனர். ஒரு குடும்பம் பல குடும்பங்களாகக் கிளைப்பதுபோல, சரயூ நதி பல கிளைகளாகப் பிரிந்து பொன்னும் முத்தும் நீர்த்துளியும் கரையில் வீசிக்கொண்டு, கோசலம் முழுவதும் பரவிச் செல்கிறது.

காத்தகால் மள்ளர் வெள்ளக்
கலிப்பறை கறங்கக் கைபோய்ச்
சேர்த்தநீர்த் திவலை, பொன்னும்
முத்தமும் திரையின் வீசி[2]

---

1. உள்ளி - நினைத்து. வள்ளியோரின்-கொடையாளரைப் போல.

2. காத்த கால் மள்ளர்-கால் காத்த மள்ளர்: கால்வாய்க் கரையைக் காத்து நின்ற உழவர். கலிப்பறை-ஒலிக்கும் பறை. கறங்க-ஒலிக்க, வெள்ளத்தை அடக்கப் பறை அறைவர் என்று பரிபாடல் கூறும். கைபோய்-கடந்து சென்று. திவலை-துளி

நீத்தம் ஆன்றுஅலேய் ஆகி
நிமிர்ந்து, பார் கிழிய நீண்டு
கோத்தகால் ஒன்றின் ஒன்று
குலம்எனப் பிரிந்தது அன்றே.[1] (1, 1, 18)

இந்த நீர்வளத்தோடு நிலவளமும் பொருந்தப் பெற்றது கோசலம். குளிர்ந்த சோலேகளான அரங்குகளில் ஆண் மயில்கள் நடனமாட, தாமரைத் தண்டுகள் தமது மலர் களாம் விளக்குகளைத் தாங்கி நிற்க, மேகங்கள் முழவென முழங்க, குவளை மலர்கள் அவையோர்போல் கண் விழித்து நோக்க, நீர்நிலேகளிலிருந்து எழும் அலேகள் திரைபோல் அமைய, மகரயாழின் தேனிசைபோல் வண்டுகள் இனிது பாட, மருதம் என்னும் அரசி கொலு வீற்றிருக்கிருள்.

தண்டலே மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளேகண் விழித்து நோக்கத்
தெண்திரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ.[2] (1, 2, 4)

---

1. நீத்தம் - வெள்ளம். ஆன்று - நிறைந்து, விரிந்து. கோத்தகால் ஒன்றின் ஒன்று-ஒன்றிலிருந்து ஒன்ருகப் பிரியும் வாய்க் கால்கள். (பிரமனிடத்தில் பிறந்த குலம் பிறகு பல குலங்களாகப் பிரிந்ததுபோல் பிரிந்தன என்பது பழைய உரை.)

2. தண்டலே-சோலேயில். கொண்டல்-மேகம். தெண் திரை-தெளிந்த நீரலே. எழினி-சித்திரம் எழுதிய திரைச்சீலே. நீர்நிலே அலேகளில் சோலே முதலியவற்றின் நிழல் வீழ, அவ் வலேகள் சித்திர எழினிபோலத் திகழ்கின்றன. மகரயாழ்-நால்வகை யாழில் ஒன்று; 19 நரம்புடையது. யாழின்-யாழின் இசைபோல். தேம்பிழி-பிழிதேம்-இனிய தேன்.

வரப்புக்களில் முத்துக்களும், மடைகளில் சங்குகளும், வாய்க்கால் அணைகளில் பொன்னும், எருமை விழுந்து புரளும் குழிகளில் நீலோற்பலப் பூக்களும், பரம்பு அடித்த வயல்களில் பவழங்களும், நெல் வயல்களில் (மீன் உண்ணும்) அன்னங்களும், கரும்புகளில் செந்தேனும், சோலைகளில் வண்டுகளும் நிறைந்து விளங்கும் நாடு இது.

வரம்புஎலாம் முத்தம்; தத்தும்
மடைஎலாம் பணிலம்; மாநீர்க்
குரம்புஎலாம் செம்பொன்; மேதிக்
குழிஎலாம் கழுநீர்க் கொள்ளை;
பரம்புஎலாம் பவழம்; சாலிப்
பரப்புஎலாம் அன்னம்; பாங்கர்க்
கரும்புஎலாம் செந்தேன்; சந்தக்
காஎலாம் களிவண்டு ஈட்டம்.[1] (1, 2, 2)

கால்வாய் காத்தும், அணை இட்டும், மடைவெட்டியும், நீர் பாய்ச்சியும், கழனி உழுதும், நெல்லும் கரும்பும் பயிரிட்டும், செடியும் கொடியும் மரமும் பேணியும் உழவர் பெருமக்கள் வாழ்கின்றனர். அவர்கள், இலங்கை அரக்கரைப் போல் பிறர் உழைப்பை உறிஞ்சி வாழ்வோர் அல்லர்; தம் உழைப்பின் பயனைப் பறிகொடுத்துவிட்டுப் பதறுவோரும் அல்லர். பாடுபட்டு விளைவித்ததையெல்லாம், மலரில் மது கொள்ளும் வண்டுபோல், மள்ளரே கொள்வார் என்பான் கம்பன்:

1. வரம்பு-வரப்பு. தத்தும்-(நீர்) பாயும். பணிலம்-சங்கு, குரம்பு-அணை. மாநீர்க் குரம்பு-மிகுந்த நீரைத் தேக்கி வைக்கும் அணை. மேதி-எருமை. கழுநீர்-நீலோற்பலம். கொள்ளை-மிகுதி. சாலி-உயர்ந்த சாதி நெல். பாங்கர்-பக்கத்தில். சந்தம்-அழகு. கா-சோலை. ஈட்டம்-கூட்டம்.

கதிர்படு வயலின் உள்ள,
கடிகமழ் புனலின் உள்ள,
முதிர்பயன் மரத்தின் உள்ள,
முதிரைகள் புறவின் உள்ள,
பதிபடு கொடியின் உள்ள,
படிவளர் குழியின் உள்ள,
மதுவளம் மலரில் கொள்ளும்
வண்டுஎன மள்ளர் கொள்வார்[1] (1, 2, 21)

கோசலத்தில் ஒலிகள் பலவுண்டு. கொள்ளையோ கொள்ளை, இன்மையோ இன்மை, கொடுமையோ கொடுமை என்று ஓலமிடும் ஒலி இல்லை. ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்று ஏங்கி நெட்டுயிர்க்கும் ஒலி இல்லை. செருக்கிச் சீறிச் சூறையாடுவோரைக் கோறுவோம் என்று வஞ்சினம் முடிக்கும் ஒலியும் இல்லை. ஆறு பாய் அரவம், மள்ளர் ஆலை பாய் அமலை. ஆலைச் சாறு பாய் ஓதை, சங்கின் வாய் ஓசை, ஏறு பாய் தமரம், நீரில் எருமை பாய் துழனி[2] ஆகியவை அங்குக் கலக்கின்றன. வாளை முட்டும் கதிர்ப் போர்களைக் கடாவடிக்கும் ஒலியும், அப்படிப் பிரித்துக் குவித்த நெல்லை நிறைத்த வண்டிகள் மண் நெளிய ஊர்ந்து செல்லும் ஓசையும் கேட்கின்றன. தத்தம் இல்இருந்து தாமும் விருந்தும் சுற்றமும் பகுத்துண்ணும் அமலை நாடெங்கும் நிறைகிறது.

---

1 கதிர்படு வயலின் உள்ள-வயல்படு கதிரின் உள்ள நெல் முதலியன. கடி-மணம். புனலின் உள்ள: மீன் முதலியன. முதிர் பயன்-பழுத்த கனிகள். புறவின் உள்ள — புன்செய் நிலத்திலுள்ள. முதிரை-அவரை துவரை முதலியன. பதிபடு கொடி-பதியன் இட்டு வளர்க்கப் பெறும் வெற்றிலை முதலியன. படி-பூமி. நிலத்தின் குழியினுள்ளன மஞ்சள், இஞ்சி முதலியன.

2 அரவம், அமலை, ஓதை, ஓசை, தமரம், துழனி—ஒரு பொருட் சொற்கள். ஆலை-கரும்பாலை.

ஆயர் மங்கையர் அங்கை வருந்தவும், நுண்இடை துவளவும் தயிர் கடையும் அரவம் எங்கும் பரவுகின்றது. தினைப்புனங்களில் இளங் கிளிகள் பேசும்; மலர் வனங்களில் வண்டுகள் பாடும்; மனைகளில் நெல் குத்தும் மகளிர் வள்ளைப் பாட்டுப் பாடுவர். நடவு நடும்போதும் களை எடுக்கும் போதும் உழத்தியர் குரவைப் பாட்டுப் பாடுவர்; கோவலர் குழல் ஊதுவர்; மீனவர் பெண்கள், முல்லை நிலத்துக்குரிய செவ்வழிப் பண்ணை இசைப்பர்.

கோசல நாட்டுத் துறைமுகங்களிலிருந்து விளைபொருட் களுடன் சென்ற கப்பல்கள், பொன்னோடு திரும்பி வருகின் றன. அவை அந்தச் சுமையை இறக்கிவிட்டுத் தம் நெடு முதுகை ஆற்றிக்கொள்கின்றன. மேலும் அந்நாட்டில் சுரங்கங்கள் பலவுண்டு. அவற்றிலிருந்து நன்மணி ஏராள மாய்க் கிடைத்தது. இந்தச் செல்வமிகுதியோடு நல்லொ ழுக்கநெறி தவறாது பெருவாழ்வு வாழ்ந்தனர் கோசல மக்கள்.

கலம் சுரக்கும், நிதியம்; கணக்குஇலா,
நிலம் சுரக்கும், நிறைவளம்; நல்மணி
பிலம் சுரக்கும்; பெறுதற்கு அரியதம்
குலம் சுரக்கும், ஒழுக்கம்—குடிக்கெலாம்[1] (1, 2, 38)

உழைத்துக் களைத்த மக்கள் பல வகைகளில் பொழுது போக்குவர். காதைகள் சொரியும் செவிநுகர் கவிகளை நாடிச் செல்வார் பலர். பாட்டும் பண்ணும் சுவைப்பார் பலர். விழாக் காணச் செல்வோர் பலர், கோழிப் போர், எருமைப் போர், செம்மறிப் போர் ஆகியவற்றைக் காணச் செல்வோரும் உளர் பருவ மங்கைகள் சண்பக வனம் சென்று பந்தாடுவர். கந்தனை ஒத்த காளையர் முல்லைக்காடு

1 கலம்-கப்பல். பிலம்-சுரங்கம். சுரக்கும்-கொள்ளக் கொள்ளக் குன்றாது ஊறும்.

சென்று விற்கலை, வாட்கலை முதலியன பயில்வர். புதுமணத் தம்பதிகள் இல்லில் தங்கிக் கூடிக் களிப்பர்.

பல்வகை இசைக் கருவிகளின் பேரோசையும் உழவர் ஏர் ஓட்டும் ஒலியுள் அடங்கின.

> மூக்கில் தாக்குறும் மூரி நந்தும், நேர்
> தாக்கின் தாக்குறும் பறையும், தண்ணுமை
> வீக்கின் தாக்குறும் விளியும்,—மள்ளர்தம்
> வாக்கின் தாக்குறும் ஒலியில் மாயுமே.[1] (1,2,57)

உழவே அனைத்துக்கும் ஆதாரம் என்பதால் சங்கு, பறை, மத்தளம் ஆகியவற்றின் முழக்கம் உழவர் ஒலிக்கு உட்படும் என்றான் கவிஞன்.

இந்நாட்டில் பெண்களும் கல்வி கற்று அறிஞராய் விளங்கினர். அவர்கள் செல்வத்தோடும் கல்வியோடும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியதால், வருந்தி வந்தவர்க்கு விருந்து வைத்துப் பொருள் வழங்குவதையே பெறுவதற்கரிய பேருகக் கருதினர்.

> பெருந்தடங்கண் பிறைநுதலார்க்கெலாம்
> பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
> வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்,
> விருந்தும் அன்றி, விளைவன யாவையே?[2] (1,2, 36)

---

1. மூக்கில்-மூக்குப் போன்ற இடத்தில் (வாய் வைத்து ஊதுதல்). மூரி-வலிய. நந்து-சங்க வாத்தியம். நேர்தாக்கு-நேராகத் தாக்குவதற்குரிய குறுந்தடி. தண்ணுமை-மத்தளம். வீக்கின்-இழுத்துக் கட்டி. விளி-ஓசை. வாக்கின்: (ஏர் ஓட்டும்போது) வாயால் உண்டாக்கும் ஒலி.

2. தடங்கண்-அகன்ற கண். பிறைநுதல்-பிறைமதிபோன்ற நெற்றி. பூத்தல்-உண்டாதல். வந்தவர்-கோசலத்தில் வறுமை இன்மையால், வெளிநாடுகளிலிருந்து வந்தவர் என்று கொள்க. வைகலும்-நாள்தோறும். விளைவன யாவையே-வேறு என்ன விளையக்கூடும்?

2. தலைநகரின் சிறப்பு

இத்தகைய நீர், நிலவளமும் பெருங்குடிகளும் உடைய கோசல நாட்டுக்குத்[1] தலைநகராக அமைந்தது அயோத்தி. எல்லா உலகத்தினரும் வைகுந்தம் அடைவதற்கு அருந்தவம் புரிவார்கள். ஆனால் வைகுந்தத்தைக் காட்டிலும் மேலான இன்பம் அயோத்தியில் இருந்தது. எனவே, ''மாண்டு பிறக்கும் துயர்போய் வைகுந்தம் புக்கவரும்'' அயோத்தியில் அவதரிக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்களாம்.

எவ்வுல கத்தோர் யாவரும், தவம்செய்து
ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்தி
புரிகின்றது அயோத்திமா நகரம்.[2] (1,3,1)

இதனை யாது என்பது? பூமிதேவியின் முகம் என்பதா? திலகம் என்பதா? கண் என்பதா? மங்கலநாண் என்பதா?

---

1 வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான் மீகி என்பான்,
தீங்கவி, செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தான்;
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை, அன்பெனும் நறவம் மாந்தி,
மூங்கையான் பேச லுற்றான் என்ன, யான் மொழியல் (உற்றேன்.

[பாதம்-அடி; நறவம்-தேன்; மூங்கையான்-ஊமையன் என்றே கம்பன் அடக்கத்துடனும் முனிவருக்குரிய வணக்கத்துடனும் நாட்டுப் படலத்தைத் தொடங்குகிறான். ஆனால் ஆதி காவியம் நாட்டுப்படலம் ஒன்றைத் தனியே அமைக்கவில்லை. சரயூநதிக்கரையில் அமைந்த கோசலம் எனும் நாடு தனதானியங்களை மிகுதியாகக் கொண்டது என்று ஒரே ஒரு சுலோகத்தில் கூறிவிட்டு அயோத்தி நகரின் புகழைப் பாடுவதற்குத் தொடங்குவார் வான்மீகி முனிவர். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்த கம்பன், மருதநில மாண்பினை விதந்தோதியும், கடல் வாணிபத்தைச் சுட்டிக்காட்டியும், கோசல நாட்டைப் படைத்து அருள்கிறான். நெறி திறம்பா மாந்தர் அனைவரும் சகல செல்வங்களும் எய்தி இன்புறுவதாகவே கற்பனை செய்கிறான்.

2. அவ்வுலகத்தோர்-வைகுந்த வாசிகள். அருத்தி-ஆவல்.

மணிமாலை என்பதா? இது ஆன்மாக்கள் அனைத்தும் கூடியிருக்கும் சத்தியலோகமா? திருமகளின் செந்தாமரையா? திருமாலின் மணிகள் வைத்த பொற்பேழையா? பிரமனது உலகையும் விஞ்சிய உலகா? எல்லா உயிர்கட்கும் ஊழிக் காலத்திறுதியில் தஞ்சம் அளிக்கும் திருமாலின் திருவயிறு? என்னவென்று சொல்ல இயலாது சோர்கின்றான் கவிஞன்:

நிலமகள் முகமோ! திலகமோ! கண்ணோ!
நிறைநெடு மங்கல நாணோ!
இலகுபூண் முலைமேல் ஆரமோ! உயிரின்
இருக்கையோ! திருமகட்கு இனிய
மலர்கொலோ! மாயோன் மார்பில் நன்மணிகள்
வைத்தபொற் பெட்டியோ! மலரோன்
உலகின்மேல் உலகோ! ஊழியின் இறுதி
உறையுளோ! யாதுஎன உரைப்பாம்![1] (1,3,2)

இங்குப் புண்ணியம் புரிந்தால் சுவர்க்கத்தில் போகம் நுகரலாம் என்று சமயநூல்கள் கூறும். ஆனால் இராமனுக்குரிய அயோத்தியில் மக்கள் புண்ணியமும் இயற்றிப் போகமும் நுகர்ந்தனர். எனவே, அது புண்ணிய பூமியாகவும், போகபுரியாகவும் விளங்கியது.

'புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம்'
என்னும்ஈது அருமறைப் பொருளே;
மண்ணிடை யாவர், இராகவன் அன்றி,
மாதவம் அறத்தொடும் வளர்த்தார்?
எண்ணரும் குணத்தின் அவன் இனிது இருந்துஇவ்
ஏழுலகு ஆளிடம் என்றால்
ஒண்ணுமோ இதனின் வேறொரு போகம்
உறைவிடம் உண்டெனஉணர்தல்?[2] (1,3,5)

1. இலகு-விளங்கும். பூண்-ஆபரணம். உயிரின் இருக்கை-ஆன்மாக்களின் உறைவிடமான சத்திய லோகம். மலரோன்-பிரமன். உறையுள்-உறைவிடம்.
2. ஏழுலகு-ஏழுதீவு. ஆளிடம்-ஆளும் இடம்: தலைநகர். ஒண்ணுமோ-கூடுமோ?

வெண்மதியும் கரியது என்று சொல்லும் அளவுக்குச் சங்கு வெள்ளை பூசிய மாளிகைகளில் பொன் தகடுகள் வேயப் பெற்றிருந்தன. எனவே, அவை வெள்ளிமலைமீது காலைக் கதிரவனின் செந்நிற ஒளி பரவியதுபோல் இருந்தன. வான் உற நிமிர்ந்த மாடமாளிகைகளில், குடிகள் அறநெறி திறம்பாது வாழ்ந்தனர்.

அயோத்தியில் வெற்றிடம் இல்லை; காற்றுக்கும் வெளிச்சத்துக்கும் தவம் புரியும் குடிசைகள் இல்லை. எங்கு நோக்கினும் மண்டபங்களும், மலர் மன்றங்களும், மாடமாளிகைகளும், இயற்கைக் குன்றுகளும், மணிகளால் இயன்ற செய் குன்றுகளும், முத்துப் பந்தல்களும் காட்சி யளித்தன.

பொன்திணி மண்டபம் அல்ல, பூத்தொடர்
மன்றுகள்; அல்லன மாட மாளிகை;
குன்றுகள் அல்லன மணிசெய் குட்டிமம்;
முன்றில்கள் அல்லன முத்தின் பந்தரே[1] (1,3,39)

இங்குள்ள மண்டபங்கள் பலவகையின:

மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்,
அன்னம்மென் நடையவர் ஆடு மண்டபம்
உன்ன அரும் அருமறை ஓதும் மண்டபம்
பன்ன அரும் கலைதெரி பட்டி மண்டபம்[2] (1,3,62)

இந்நகரில் பெண்களைப்போலவே புரவிகளும் பரத நாட்டியத்தில் தேர்ச்சி பெற்று உள்ளன. மத்தளமும் தாளமும் இராகமும் ஒத்துப் பொருந்த, பரதநூலில் கூறப் பெற்ற முறைப்படி, பதங்களுக்கு ஏற்பச் சதிமிதிப்பவர்

---

1. மன்று-மன்றம். குட்டிமம்-தளவரிசை செய்த தரை. முன்றில்-முற்றம்.

2. திறை-கப்பம். உன்ன அரும்-நினைத்தற்கரிய. பன்ன அரும்-சொல்வதற்கரிய. பட்டி மண்டபம்-வாத மண்டபம்.

நடன மகளிர். குதிரைகளும் அவர்களோடு ஆடுவதால், பெண்களின் காற்சதங்கை ஒலியும் குதிரைகளின் கழுத்தி லிடப்பட்ட கிண்கிணி மாலைகளின் ஒலியும் ஒத்து விழு கின்றன.

பதங்களில், தண்ணுமை, பாணி, பண்உற
விதங்களின், விதிமுறை சதிமி திப்பவர்
மதங்கியர்; அச்சதி வகுத்துக் காட்டுவ
சதங்கைகள்; அல்லன புரவித் தார்களே.[1] (1,3, 52)

இந்நகரில் சங்கு ஒலியும், ஊது கொம்பு ஒலியும், யாழ் கின்னரம் அனைய நரம்பு வாத்தியங்களின் ஒலியும், குழல் போன்ற துளைக் கருவிகளின் ஓசையும், வேறு பல பின்னணி வாத்தியங்களின் ஓசையும் எழுந்து கடல் அலையின் ஒலியை யும் வெல்கின்றன என்பான் கம்பன்.

3. நனவாக வேண்டிய கனவு

அயோத்தியில் கல்லாமை என்பது இல்லாது ஒழிந்தது. அனைவருமே கல்வியில் கரைகண்டவரானதால், கற்றுத் தேர்ந்தவர் என்று ஒரு சிலரைக் குறிப்பிட்டு உரைக்கும் பெற்றியும் அங்கு இல்லை. அயோத்தி நகரம், கல்வி என்ற வித்திலிருந்து முளைத்து வளர்ந்த தருவை நிகர்க்கும் என்றே கூறலாம். கேள்விஞானம் என்ற கிளைகளையும், அரும் தவம் என்ற இலைகளையும் பெற்றுப் பொலியும் தரு அது. அது அன்பாகிய அரும்பினைத் தோற்றுவித்து, அறம் என்ற பூவை மலரச் செய்து, இன்பம் என்ற கனியை அடைந்து நிற்கிறது என்று உரைப்பான் கவிஞன்.

---

1. பதம்: அபிநயத்துக்கும் நாட்டியத்துக்கும் உரிய பாட்டு. பாணி: கைத்தாளம். பண்-இராகம். உற-ஒத்து நிகழ. விதிமுறை-பரத நூல் வகுத்த முறைப்படி. சதி-லயம். மதங்கியர்-நடனமாடும் மகளிர். தார்கள்-கிண்கிணி மாலைகள். சதியை வகுத்துக் காட்டுவது ஆடலரசியின் சதங்கை ஒலி; இல்லாவிட்டால் குதிரையின் கிண்கிணி நாதம் என்றதால் இரண்டுமே என்பது பெறப்படும்.

ஏகம்முதல் கல்விமுளைத்து எழுந்து,
எண்ணில் கேள்வி
ஆகும்முதல் திண்பணை போக்கி,
அருந்த வத்தின்
சாகம்தழைத்து, அன்புஅ ரும்பித்
தருமம் மலர்ந்து,
போகங்கனி ஒன்று பழுத்தது
போலும் அன்றே[1]. (1,3, 75)

இலங்கையில் அறிவு இருந்தது; அன்பு இல்லாமையால் அது துன்பமே விளைவித்தது. அங்குத் தவம் இருந்தது; ஆனால் அது தருமத்தைத் தழுவாததால் அவமாயிற்று. அங்குப் போகம் இருந்தது; இரக்கமில்லாத அரக்கரின் பாவ வழிப்பட்ட போகமாக அது அமைந்தது.

அயோத்தி மக்கள், அன்பின் திறமும் அறிவின் உரமும் தவத்தின் செம்மையும் அறத்தின் ஊற்றமும் ஒருசேரப் பெற்றுப் போகம் என்ற கனியை அடைந்து நுகர்ந்தனர்.

எல்லோரும் இன்புற்றிருக்கும் அயோத்தியில், கொள்வார் இன்மையால், கொடுப்பார் இல்லை; கள்வர் இல்லாமையால் காவலும் இல்லை.

கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லைமாதோ.
(1,3, 37)

அன்பு, அறிவு, அறம், பொருள் முதலிய சகல செல்வங்களையும் எல்லோரும் அடைந்து அநுபவித்ததால், அயோத்தி

---

1. ஏகம் முதல் கல்வி-கல்வி ஏகம் முதல்-கல்வி என்ற ஒப்பற்ற விதை. எண்ணில்-அளவிட முடியாத. கேள்வி-கேள்வி ஞானம். முதல் திண்பணை-அடிமரமும் கிளைகளும். சாகம்-இலை. போகங்கனி-போகக்கனி.

யில் உடையவன், இல்லாதவன் என்ற வர்க்க பேதமே ஒழிந்துவிட்டது.[1]

எல்லாரும் எல்லாப்பெருஞ் செல்வமும் எய்த லாலே,
இல்லாரும் இல்லை; உடை யார்களும் இல்லை மாதோ
(*1*,3, 74)

என்பான் கம்பன். இது தலைநகருக்கு மட்டும் உரிய சிறப்பு அன்று. கோசல நாட்டுக்கே உரிய பெருமை என்பதை முன்பே நாட்டுப் படலத்தில் புலப்படுத்தினான் கம்பன்.

வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய்உரை இலாமையால்;
ஒண்மை இல்லை, பல் கேள்வி ஓங்கலால்![2] (*1,2,53*)

---

1. அயோத்தி நகரின் சிறப்பினை வான்மீகி முனிவர் விதந்தோதுகிறார். அத்திரு நகரில் அனைவரும் செல்வராயும் அறிஞராயும் நற்குணசீலராயும் வாழ்ந்ததாக அவர் புகல்கிறார். அந்த அரிய சித்திரத்தைத் திருத்திப் புதுக்கி, ஒரு கற்பனையான பொதுமைவழிச் சமுதாயத்தை நகரிலும் நாட்டிலும் அமைத்தான் கம்பன்.

முதனூலில் இருந்த இரண்டு கருத்துக்களைக் கம்பன் விடுத்தது கவனத்துக்குரியது. ஒன்று: நான்கு வருணத்தினரும் தத்தம் குடிக்குரிய பணிபுரிந்து ஒத்து வாழ்வதாக முதனூல் கூறுகிறது. முதலறம் தழுவிய தனது கோசலத்தின் பொதுமை ஏற்பாட்டுக்கு இது பொருந்தாது என்றே கம்பன் இதனை விடுக்கிறான். மற்றொன்று: அயோத்தியில் நாத்திகன் இல்லை என்று ஆறும் சருக்கத்தில் இரண்டு தடவைகள் முதனூல் வற்புறுத்திக் கூறும். நாத்திகர்களில் நல்லவர்களும் ஆத்திகர்களில் தீயோரும் இருக்கக்கூடும் என்பதால், நல்லோரின் கோசலத்தில், நாத்திகரான சான்றோர்களுக்கும் இடம் உண்டு என்று கம்பன் கருதினான் போலும்! கடவுள் இலனா உளனா என்ற கேள்விக்குக் கூறும் விடையிலிருந்து மக்களைக் கணிக்காது, மனிதரது குணம், செயல் ஆகியன கொண்டே அவர்களைத் தரமிடும் தகைமைக்குரிய கம்பன், அயோத்தியில் நாத்திகன் இல்லை என்ற கருத்தை அறவே நீக்கினான்.

2. செறுநர்-பகைவர். ஒண்மை-பேரறிவு.

வறுமை இல்லாததால் கொடைவள்ளலுக்குத் தேவை இல்லாது போய்விட்டது. பகைவர் இன்மையால், போர் வீரத்தைக் காட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. பொய் உரைப்பார் எவரும் இல்லாததால் உண்மைக்குத் தனிநிலை இல்லாது ஒழிந்தது. அனைவரும் அறிஞர்களானதால், கற்றுத் தெளிந்தவர் என்று சிலரை மட்டும் பாராட்டுவதற்கு இடமில்லாது போயிற்று.

ஆக, கோசலம் ஒரு புதிய உலகம். மக்கட் பண்பு மாநிலமெங்கும் தண்ணொளி வீசி மண்ணை விண்ணாக்க வேண்டுமென்று விரும்பிய கவிஞனது வளமார்ந்த மனோ பாவனையில் வடிவெடுத்த இலட்சிய உலகம். என்றோ ஒரு நாள் நனவாக வேண்டிய கனவு. அங்கு இறுமாந்து ஏவல் கொள்ளும் செல்வந்தர் இல்லை; இணையடி தொழுது தொழில் புரியும் ஏழை இல்லை. அண்டிக் கெடுப்பவன் இல்லை; மண்டி யிட்டுத் தொண்டுபுரியும் அடிமை இல்லை. மனிதனை மனிதன் சுரண்டும் புன்மைக்கு அங்கு இடமில்லை. பொருள் நசை, பொருமை, கோபம் முதலிய சிறுமைகள் அங்குத் தலைகாட்ட முடியாது. நல்லறமன்றிப் பிறிதொன்று ஆற்று வதற்கு வகையில்லாத சமுதாயம் அது. எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் வேண்டிய அளவு துய்த்து வாழும் அங்குக் குற்றம் நிகழ்வதற்கே வாய்ப்பு இல்லை. அதனால் குற்றம் புரி வதைத் தடுப்பதற்கான காவலோ, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான நீதிமன்றமோ, தண்டிக்கப்பட்டவரை அடைத்து வைப்பதற்கான சிறையோ அங்குத் தேவை யில்லை. இந்த வன்முறைக் கருவிகளெல்லாம் பயனற்றுப் போய்விட்டன.

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை, தம் சிந்தையின் செம்மையால்

ஆற்றல் நல் அறம் அல்லது இலாமையால்,
ஏற்றம் அல்லது, இழிதகவு இல்லையே[1]. (1, 2, 39

---

1. ஆற்றல்—ஆற்றுவது; அந்நாட்டு மக்கள் செய்வது. இழிதகவு—தாழ்வு; கோசலத்திலும் சாவு நிகழ்வது உண்டு என்பதால், 'கூற்றம்' என்பதற்கு 'யமன்' என்று பொருள் கொள்வது பொருந்தாது. 'அகாலமரணம்' என்று வை. மு. கோ. அவர்களும் 'எமனைப் பற்றிய பயம்' என்று அண்ணுமலைப் பதிப்பும் உரைகாண்பது இட்டு நிரப்பும் முயற்சிகளே. 'கூற்றம்' என்ருல் 'தண்டனை' என்று பொருள் கொள்வதே நேரிது, "அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்" என்று நான்மணிக்கடிகை (82) கூறும் போது—அது பழமொழி என்பது, முன்பே 'பல் அவையோர் சொல்' எனச் சிலப்பதிகாரம் (வழக்குரை கதையின் இறுதியில் வரும் முதல் வெண்பாவில்) செப்பியதால் விளங்கும்-'கூற்றம்' எவ்வாறு யமனையோ மரணத்தையோ குறிக்கும்? குற்றத்தின் தன்மை யாதாயினும்—தினையளவுத் தீங்கு விளைவித்தாலும் பனையளவுத் தீங்கு புரிந்தாலும்—எல்லாக்குற்றவாளிகளையும் அறம் ஒரு படித்தாகக் கொன்ருல், அது தன்னையே மறுத்துவிடும். குற்றங்களின் தராதரம் பார்த்து நியாயமான தண்டனை வழங்குவதே அறம். எனவே, அல்லவை செய்தார்க்கும் அறம் தக்கதண்டனை வழங்கும் என்றே பொருள் கொள்வோம். அதே போல் கம்பனும் 'தண்டனை' என்ற பொருளிலேயே 'கூற்றம்' எனும் சொல்லை ஆள்கின்ருன் என்போம்.

4. மன்னவனது பண்புநலன்கள்

இந்தப் புகழ்சான்ற நாட்டுக்கும் குடிகளுக்கும் நல் வேந்தனுய் அமைந்தான் தயரதன். அவன் அரசர்க்கரசன்; உலகேழும் ஓம்பும் வள்ளல்; தருமதேவதையை நிகர்த்தவன்.[1]

அம்மாண் நகருக்கு அரசன்; அரசர்க்கு அரசன்
செம்மாண் தனிக்கோல் உலகஏழினும் செல்ல நின்ருன்;
இம்மாண் கதைக்கு ஓர் இறையாய இராமன் என்னும்
மொய்ம்மாண் கழலோன் தருநல்அற மூர்த்தி அன்னுன்[2]
(1,4,1)

---

1. தயரதனது பண்புநலன்களை எடுத்துரைப்பதிலும் கம்பனது காவியம் முதனூலுக்குப் பெரிதும் கடன் பட்டிருக்கிறது. அவன் சத்தியத்தைக் காப்பதில் பேரூக்கம் கொண்டவன் என்றும், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் முறையாகக் கைக்கொண்டு ஒழுகுவோனென்றும், மாவீரனென்றும், பொறிகளை அடக்கி ஆண்டவனென்றும், முனிவருக்கு நிகரான ராஜரிஷி என்றும், நகரிலும் கிராமத்திலும் வாழும் மக்களிடம் நிறைந்த அன்பு கொண்டவனென்றும் முதனூல் பேசும். அவற்றைக் கருவாகக்கொண்டு தயரதனது குணசித்திரத்தை அமைப்பான் கம்பன். ஆனுல் சாம, தான, பேத, தண்டம் என்ற நால்வகை உபாயங்களையும் தகுதிக்கேற்பக் கடைப்பிடிக்கும் தீர்க்கதரிசி என்று ஆதிகாவியம் கூறுவது தனது அரசனுக்கு ஒவ்வாது என்று கம்பன் விடுவித்துவிடுகிருன். தானம் என்ற பெயரால் பிறரைத் தன் வசப்படுத்த அரசன் வழங்குவதெல்லாம் இலஞ்சமே. இலஞ்சம் வழங்கலும், இதயத் தொடர்பில்லாத நல்லுரையை நாவால் வழங்குதலும், பிரித்தாளலும் கம்பனது தயரதன் கற்றிலன். குற்றமே இழைக்காத நாட்டின் கொற்றவனுக்கு, உரிய தண்டனை அளித்து அடக்குதல் என்ற உபாயமும் தேவையில்லை.

2. மாண்-மாட்சிமை பொருந்திய. நகர்-அயோத்தி. தனி ஒரு-ஒப்பற்ற. இறை-தலைவன். மொய்-வலிய.

அறிவும் அருளும் அறமும் சால்பும் இனையன யாவும் பிற அரசர்கட்கு அறைகுறையாகவே அமைந்திருந்தன. தயரத னுக்கோ இந்தப் பண்புநலன்கள் அனைத்தும் முழுமையாக நிறைந்து ஏவல் புரிந்தன என்பான் கம்பன்.

இந்த அறவேந்தன் தாயும் சேயும் தவமும் மருந்தும் தானேயாகி மன்னுயிர் ஓம்பினுன் என்று கம்பன் கூறுகிறன்:

தாய்ஒக்கும் அன்பின்; தவம்ஒக்கும் நலம்பயப்பின்;
சேய்ஒக்கும், முன்நின்றுஒரு செல்கநி உய்க்கும் நீரால்;
நோய்ஒக்கும் என்னின்,மருந்துஒக்கும்; நுணங்குகேள்வி
ஆயப் புகுங்கால் அறிவுஒக்கும்-எவர்க்கும், அன்னுன்[1]
(1,4,4)

புனிதத்திலும் உயர்விலும் அன்னையின் அன்பை விஞ்சியது யாதும் இல்லை. பால் உண்ணும் குழவியின் பசுங் குடல் பொறுக்காது என்று நோய் நீக்கும் மருந்தைத் தானே உண்பாள் எனத் தாய் அன்பு பாராட்டப்பெறும். அழுது கேட்பதற்கு முன்னுல், நேரம் அறிந்து பால் ஊட்டும் ஊக்கம் அவளுக்கு உரியது. பசி நோக்காது, கண் துஞ்சாது, மெய்வருத்தம் பாராது தொண்டு புரிவதில் அன்னைக்கு இணை எவரும் இலர். சேய்நலம் பேணும் தாய்போல் குடிகள்பால் தூய அன்புகொண்டு தொண்டு செய்தான் தயரதன்.

தவத்தின் திறனுக்கு நேருமில்லை, நிகருமில்லை என்பது தொல்லோர் கொண்டமுடிவு. குடிகள் அனைவரும் எல்லாப் பெரும் செல்வமும் பெற்று மனநிறைவோடு வாழ்வதற்கு வசதி செய்த வேந்தனுதலால், வேண்டின வேண்டியவாறு அளிக்கும் தவத்துக்கு நிகராகின்றுன்.

பேறுகளில் சிறந்தது புத்திரப் பேறு என்பர். "பொன் போல் புதல்வர்" என்று புறம் (9) கூறும்.

---

1 பயப்பின்-விளைவிப்பதில். உய்க்கும்-செலுத்தும். நீரால் நீர்மையால்; தன்மையால். நுணங்கு-நுட்பமான. ஆய-ஆராய.

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுஇன்றி எய்துப,
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் [1]

என்பது அகப்பாட்டு [66] வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வானேர்க்கு உயர்ந்த உலகம் புகுவதற்கும், பெற்றவர்க்குப் புத்திரர் பெருந்துணையாவர் என்பது முன்னேர் கொண்ட நம்பிக்கை. தாய் தந்தையர்க்குத் தன்னேரில்லாத் தொண்டு புரியும் மகன்போல் தயரதன் தன் குடிகளுக்குப் பணிபுரிந்தான். [2]

இவ்வுலக வாழ்வில் இன்பமும் துன்பமும் இணைபிரியா இரட்டையராகப் பின்னிப் பிணைந்திருக்கின்றன. புல்லர்களும் கயவர்களும் எண்ணித் துணிந்து இயற்றும் கொடுமையால் விளையும் துயரம் பெரிது. ஆனல் கயமை நீங்கிய சமுதாயத்திலும் நோய், மூப்பு, இறப்பு முதலியவற்ருல் இன்னல் விளைவதைத் தவிர்ப்பது அரிது. எனவே, மனிதனின் உளம் உவந்த சிரிப்பிலும் வேதனையின் சாயல் படிந்திருக்கிறது என்று வானம்பாடிப் பாட்டில் ஷெல்லி கூறுகிருன். இந்த உண்மையைக் கருத்தில் கொண்டால், சால்புள்ளத்தால் சிறந்த கோசல மக்களுக்கும் இடை இடையே துன்பம் ஏற்பட்டதைப் புரிந்துகொள்ளலாம். அவ்வாறு துன்பம் நேரும்போது அதனைத் துடைப்பதில், நோய் தீர்க்கும் மருந்து எனத் தயரதன் விளங்கியதாகக் கம்பன் கூறுகிருன். மருந்தின் வகை நான்கு என்பார்

---

1 இசை-புகழ். செறுநர்-பகைவர். செயிர்தீர்-குற்றமற்ற பயந்த-பெற்ற.

2 சேய் என்ற சொல்லுக்குத் தலைவன் என்று பொருள் கொண்டு இரண்டாம் அடிக்கு உரை கூறுவார் உண்டு. முன் நின்று நல்லவழியில் இட்டுச் செல்லுவதில் தலைவனைப் போன்றவன்” என்பார். ஆனல் தலைவனைப் போன்றவன் என்று தலைவனையே கூறுதல் பொருந்தாது.

வள்ளுவர் (குறள் 950). அவை, "பல பிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விஜாவாற்றல்களால் மேம்படுதல், எளிதில் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்தல்" என்று விரிவுரை தருவார் பரிமேலழகர். மருந்துக்கு நிகர் என்றதால், நாட்டு மக்களின் துயரை நீக்குவதில் தயரதன் புலப்படுத்திய விரைவும் வேகமும், அவன் கண்ட வெற்றியும் வெள்ளிடை மலையென விளங்கும்.

புத்தகம் பயிலா வீட்டில் பொலிவும் இல்லை, பயனும் இல்லை. குறு தறு நடந்தும், சிறுகை நீட்டியும், இட்டும் தொட்டும் அடிசில் தீண்டியும், கன்னங் குழியப் புன்னகை உகுத்தும், யாழும் குழலும் பின்னிட மிழற்றியும், ஈன்றோர் அறிவை இன்பத்தால் மயக்கும் மக்களை அடையாதவனைப் போலவே, படியாதவனும் கேளாதவனும் வெறுமையில் காலம் தள்ளுகின்றனர் எனலாம். "வாய்விட்டுச் சிரியாதவனை நம்பாதே' என்று கார்லைலும்; "இசையின் இனிமையில் ஈடுபடாதவன் சதி செய்யும் வஞ்சகனுவான்" என்று ஷேக்ஸ்பியரும் மொழிந்ததைப்போல் கற்றோ கேட்டோ வளராதவனையும் கடியலாம். ஆனல் பல கற்றும் கல்லாதவனுக இருப்பதைவிடப் பழியொன்றில்லை. நீரை உறிஞ்சும் கடற்பஞ்சுபோலவும், மையை ஒற்றி எடுக்கும் காகிதம்போலவும், படித்தோ கேட்டோ பெற்றதை நினைவில் பதிய வைத்தால் போதாது. அதன் மெய்ப் பொருள் காணுதல் வேண்டும். கசடறக் கற்றதையும் செவி யுறக் கேட்டதையும் பகுத்துத் தொகுத்து ஒப்பு நோக்கி உண்மையைத் தேர்வதற்கு அறிவே உதவுகின்றது. இவ் விதம் மனிதனுக்கு வழிகாட்டும் அறிவினைப் போல் மாந் தருக்கு நண்பனுகவும் நல்லாசிரியனுகவும் தயரதன் திகழ்ந் தான் என்கிருன் கம்பன்.

தள்ளரும் புகழ்பெற்ற இவ் வள்ளலின் வெண் கொற்றக் குடையைத் தேய்வின்றி வளரும் சந்திரனுக்கு ஒப்பிடு

வான் கம்பன். மண்ணுலக மாந்தரெல்லாம் அச்சம், துன்பம் முதலிய வெப்பத்திலிருந்தும் அறியாமை என்ற இருளி லிருந்தும் விடுபட்டு இன்பத்தோடு அறிவு பெற்று வாழ் வதற்கு வசதி செய்த குடை அது. இந்தத் தண்நிழல் வாழ் வில் நிலைகண்ட குடிகள் விண்ணிடைத் தோன்றும் மதியும் மிகை என்றே கருதினர்களாம்!

மண் இடை உயிர்தொறும்
வளர்ந்து, தேய்வு இன்றித்
தண் நிழல் பரப்பவும்
இருளைத் தள்ளவும்
அண்ணல்தன் குடைமதி
அமையும், ஆதலான்
விண் இடை மதியினை
'மிகைஇது' என்பவே.[1] (*1*,4, 9)

எல்லா உயிருக்கும் பேதா பேதமின்றி ஒளியும் வெப்ப மும் நல்குவான் பகலவன். அவனைப் போலவே தயரதனது ஆட்சிச் சக்கரமும் அனைவருக்கும் ஒரு படித்தாக அமைந்தது

குன்றென உயரிய குவவுத் தோளினன்
வென்றிஅம் திகிரி வெம்பரிதி யாம்என,
ஒன்றென உலகிடை உலாவி, மீமிசை
நின்று, நின்று, உயிர்தொறும் நெடிது காக்குமே.[2]
(*1*,4,11)

நின்று நின்று காக்கும், உயிர்தொறும் காக்கும், நெடிது காக்கும் என்று இயைத்துப் பொருள் கொள்ள வேண்டும். ஒவ்வொரு உயிரையும் உன்னிப்பாகவும் இடைவிடாமலும்

1. உயிர்தொறும்-ஒவ்வொரு உயிர்க்கும். தண் நிழல்-குளிர்ந்த நிழல். இங்கு இன்பத்தை உணர்த்தும். இருளை-அறியாமை என்ற இருளை. குடைமதி-சந்திரவட்டக் குடை.
2. குவவு-திரண்ட. அம்-அழகிய. திகிரி-ஆட்சிச் சக்கரம். பரிதி-சூரியன். மீமிசை-வானவெளிக்கு மேலே.

காத்தலில் கொற்றவனுக்கு இருந்த அக்கறையை இவ்விதம் புலப்படுத்துகிருன் கம்பன்.

வயலொன்று தவிர வேறு வருவாய்த் துறை யாதும் அடைந்திரா ஏழை உழவன், அந்த வயலை எப்படிப் பண் படுத்திப் பயிரிட்டுப் பாது காப்பானே, அதேபோல் வையகம் முழுவதையும் ஓம்பினுன் தயரதன்.

வையகம் முழுவதும் வறியன் ஓம்புமோர்
செய்எனக் காத்துஇனிது அரசு செய்கின்ருன். (1,4,12)

மன்னனை உயிராகவும் மக்களை உடம்பாகவும் பாவித்துப் பேசுவதே மரபு[1] அதனைக் கம்பன் நன்கறிவான். அக் கருத்தின் முதலாய நோக்கம் யாதாயினும், அதன் முடிவாய பயனுகக் கொடுமையும் விளைவதை அவன் கண்டான். அறத்தின் காவலனுகக் கருமம் புரியவேண்டிய வேந்தன், மனம் போன போக்கில் சட்டம் இயற்றும் கர்த்தாவாக மாறுவது கண்டு மனம் மறுகினுன். எனவே, பழைய

1 *''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்''*

—புறம், 186

''மன்னுயி ரெல்லாம் மண்ணுள் வேந்தன்
தன்னுயிர்''

—மணிமேகலை (7,11,12)

''மன்னுயிர் ஞாலக்கு இன்னுயிர் ஒக்கும் இறை''

—பெருங்கதை இலாவணகாண்டம், அவலந்தீர்ந்தது, 17-18

''வீங்குநீர் வேலி வாழ்பவர்க்கு ஆவியாபவர் அரசர்''

– சூளாமணி (5,99)

''மன்னனை இன்றி வைகும் மண்ணுலகு எண்ணும் காலை
இன்னுயிர் இன்றி வைகும் யாக்கையை ஒக்கும்என்பார்''

—பெரியபுராணம் 990

தலைப்பை மாற்றிவிடுகிறான். 'மக்களே உயிர், மன்னனே உடம்பு' என்று கூறிவிடுகிறான். சிங்கம் அனைய வலிமை உடைய தயரதன் மன்னுயிரெல்லாம் தன்னுயிர் போலப் பாதுகாத்தலால், அவன் எல்லா உயிரும் தங்குவதாகிய உடலை ஒத்திருந்தான் என்பது கம்பன் கருத்து:

வயிரவான் பூண் அணி
மடங்கல் மொய்ம்பினான்,
உயிர்எலாம் தன் உயிர்
ஒக்க ஓம்பலால்,
செயிர் இலா உலகினில்
சென்று நின்றுவாழ்
உயிர்எலாம் உறைவதுஓர்
உடம்பும் ஆயினான்.[1] (1,4, 10)

மக்களாகிய உயிரின் ஏவலுக்கே மன்னனாகிய உடம்பு கட்டுப்பட வேண்டுமென்ற இக்கருத்தை வசிட்ட முனிவர் இராமனுக்கு எடுத்துரைக்கும் அரசநீதியாகவும் கம்பன் அமைத்து விடுகிறான்.

வையம் மன்னுயிர் ஆக, அம் மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல்அன்ன மன்னனுக்கு,
ஐயம் இன்றி, அறம்கட வாது, அருள்
மெய்யில் நின்றபின்; வேள்வியும் வேண்டுமோ? (2,2,25)

மன்னர்கள் வருவார்கள், போவார்கள்; ஆனால் மக்கட் சமுதாயத்துக்கு மூப்பும் இல்லை, அழிவும் இல்லை. எனவே மன்னனை நிலையாத யாக்கைக்கும், வையகத்தை (மனித சமுதாயத்தை) மன்னுயிர்க்கும் (நிலைபேறு உடைய உயிர்க்கும்) ஒப்பிட்டார் வசிட்டர். மேலும், மன்னுயிர்க்குத்

1. வான்பூண்-சிறந்த நகைகளை. அணி-அணிந்த. மடங்கல்-சிங்கம் (போன்ற). மொய்ப்பினான்-வலிமையை உடையவன். செயிர்-குற்றம். சென்று வாழ் உயிர்-நடப்பன (சரம்). நின்று வாழ் உயிர்-நிற்பன (அசரம்).

தொண்டு புரியும் உடல் அனைய அரசன், அன்பின் முதிர்ச்சி யான அருள் என்ற மெய்ந்நிலையில் நின்று அறவழி பிழை யாது ஒழுகினால், யாகமும் எதற்கு என்று அவர் வினவு கின்றார். சார்பறம் தழுவிய வேந்தர்க்கு வேள்வி வேண்டப் படலாம். ஆனால் முதலற நிலையில் நின்று மன்பதை காக்கும் மன்னனுக்கு யாகம் போன்ற சடங்குகள் தேவையில்லை என் பதே ''அயனையே நிகர் தூயமாமுனிவன்'' எடுத்துரைக்கும் கருத்து.[1]

கம்பன் அரசனை அதிகார நிலையிலிருந்து அகற்றித் தொண்டு நிலையில் நிறுத்துவதால்தான், தயரதன் அரசை 'ஓம்பினான்' என்றும், 'காத்தான்' என்றும் கூறுவதுடன் அமைகின்றான். ''இனிது அரசு செய்கின்றான்" என்று ஓரிடத்தில் கூறுவான். ஆனால், ஆண்டான் என்று எங்குமே சொல்லவில்லை. (அயோத்தியா காண்டம் மந்திரப் படலத் தில்) தயரதன் தன் அமைச்சர்களைக் கூட்டி வைத்துப் பேசும் போதும்,

வையம்என் புயத்திடை, நுங்கள் மாட்சியால்,
ஐஇரண்டு ஆயிரத்துஆறு ஆண்டு தாங்கினேன்.[2]
(2,1,13)

---

1. முதலற வேந்தர்க்கு யாகம் தேவையில்லை என்ப தால்தான், முதனூலில் (பால காண்டத்தில்) விரித்துரைக்கப் பெறும் அசுவமேத யாகம் பற்றி யாதொன்றும் கூறாது போகிறான் கம்பன் எனலாம்.

2 ஐயிரண்டு ஆயிரத்து ஆறு-அறுபது ஆயிரம்.

என்றே கூறுவான். அடுத்துவரும் செய்யுளில் இதனை விளக்கமாகவே எடுத்துரைக்கின்றான்.

கன்னியர்க்கு அமைவரும்
கற்பின், மாநிலம்
தன்னை இத் தகைதரத்
தருமம் கைதர,
மன்னுயிர்க்கு உறுவதே
செய்து வைகினேன்;
என்னுயிர்க்கு உறுவதும்
செய்ய எண்ணினேன். (2, 1, 14)

கன்னியர் தம் கற்பின் திண்மையால் தம்மைக் காத்துக் கொள்வதுபோல, உலகினோரும் தம் தருமத்தால் தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர் என்கிறான் தயரதன். எனவே, ஆண்டேன் என்பது கிடக்க; காத்தேன் என்பதும் ஓம்பினேன் என்பதும்கூட மிகையே. ஏதோ, மன்னுயிர்க்கு என்னால் இயன்ற நன்மையைச் செய்வதே வாழ்க்கைப் பணியாகக்கொண்டு கருமம் இயற்றினேன் என்றுதான் இயம்பமுடியும் என்கிறான் தயரதன்.

தயரதன் தன்னடக்க சீலன் என்பதால் தன் பங்கைக் குறைத்துக் கூறுகிறான் என்று எண்ணவேண்டியதில்லை. கோசல மக்கள் தம் ஒழுக்கத்தாலேயே தம்மைக் காத்துக் கொண்டனர் என்பதைக் கம்பன் நாட்டுப் படலத்திலேயே நவின்றுவிட்டான்.

பொற்பின் நின்றன, பொலிவு; பொய்யிலா
நிற்பின் நின்றன, நீதி; மாதரார்
அற்பின் நின்றன, அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன, கால மாரியே[1] (1, 2, 59)

கோசலத்தின் ஆடவரும் பெண்டிரும் தோற்றப் பொலிவைப் பேணுவதற்குச் செயற்கையான உபாயம் நாடார். அவர்கள் நற்குணசீலர்களாய் விளங்கியதால், கண்கவர் உருவ அமைதி இயல்பாகச் சமைந்திருந்தது.

---

1 பொற்பு-அகத்தின் அழகு; நற்குணம். பொய்யிலா நிற்பு-உண்மை நிலை. அற்பு-அன்பு. காலமாரி-பருவ மழை.

அவர்கள் நீதிமன்றம் சென்று முறையிட்டும் வழக்காடியும் நீதியை நிலைநாட்டினரல்லர். அனைவருமே நீதியின் நிலைக்களனான உண்மையைப் பண்பாகக் கொண்டிருந்தமையால் நீதி இயல்பாகவே ஏற்றம் கொண்டது.

அவர்கள் அரசின் வன்மைக்கு அஞ்சியோ, மேல் உலகில் இன்பம் பெறுவதற்கான பேரத்தின் பகுதியாகவோ அறம் இயற்றினரல்லர். அன்பு நெறி தவறாத மாதர்கள், தம் குழந்தைகளுக்கு அதே அன்பு என்னும் அமுதைத் தாய்ப்பாலுடன் ஊட்டினார்கள். தாயைப்போலச் சேயும் அன்பின் நிறைகுடமாக வளர்ந்தது. எனவே, அன்பு என்ற பண்பின் பயனான அறம் கோசலத்தில் இயல்பாகவே நிலை கொண்டது.

கோசலம் வெள்ள மிகுதியாலோ மழை இன்மையாலோ துன்புறவில்லை. மழையைத் தருவிக்கும் மகம் (யாகம்) ஏதும் அரசன் இயற்றவில்லை. கொழுநனை வழுத்தி வாழும் கற்புக் கரசிகளாகக் கோசல மாதர் திகழ்ந்ததால் அங்குப் பருவ மழை அளவாகவும் தவறாமலும் பெய்தது.[1]

இவ்விதம் கோசல மக்கள் தமது ஒழுக்கத்தாலேயே தம்மை ஓம்பியதால், அங்குக் குற்றமும் கூற்றமும் இல்லாது போயின. மக்களை அடக்கி ஆளும் தலைவனாக (உயிராக) அரசன் இல்லாது, அவர்களது அறநெறிச் செயல்களை முறைப் படுத்தும் தொண்டனாகவே (உடலாகவே) அரசன் பணி யாற்றினான்.

தனிஉடைமை முறைக்கு முடிவு கட்டுவதால் மலரும் சமதர்மச் சமுதாயம், தன்னலம் பேணும் சிறுமைக்கு இடம் தராத புதிய தலைமுறையை உருவாக்குமென்றும், விஞ் ஞானத்தின் சாதனைகளால் செல்வத்தை மிகுதியாகப் பெருக்குமென்றும் மார்க்ஸியம் கூறும். நாளாவட்டத்தில், உழைப்பையும் தோழமையையும் இயல்பாகக் கொண்ட சமு

[1] தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (55)

என்ற குறளின் கருத்தையே கம்பன் இங்குக் குறித்தான்.

தாயம் உருவாவதால், வன்முறைக் கருவிகளின் தொகுப்பாக உள்ள ஆட்சிமுறை தேவையற்றுப்போய் உதிர்ந்துவிடு மென்பர். திறமைக்கு ஏற்றவாறு பாடுபட்டுத் தேவைக்கு ஏற்றவாறு பயன்பெறும் நிலை அமையும் என்பர். அனைவரும் தோழராய்க்கூடி உழைத்து எல்லாப் பெரும் செல்வமும் துய்க்கும் பொதுஉடைமைச் சமுதாயத்தைப் பற்றிய இந்தக் கருத்தோட்டத்தோடு, சான்றோர் நெறியில் நின்ற கம்பனது கற்பனை வளம் படைத்துள்ள கோசலக் காட்சியை ஒப்பிட்டு நோக்கினால், கவிஞனது நெடிது நோக்கும் நோன்மை நன்கு புலனாகும்.

5. படைகள் ஒப்புக்கே

நாடு காக்கும் வேந்தனுக்கு நாற்படையும் தேவை என்று முன்னோர் கூறினர். அரசருள் சிறந்தவனாக விளங்கு வதற்குப் படைவலியே முதல் தேவை என்பார் வள்ளுவர் (3 8). முதனூலும் படைஞரின் வீரம் திறமை முதலான வற்றையும், படையில் பொருந்திய யானை குதிரைகளின் வகைகளையும் தன்மைகளையும் விரிவாகப் பேசி, இந்தப் படை வலியாலேயே, அந்நகர் அயோத்தி (எவராலும் எதிர்த்துப் போர் செய்ய இயலாது என்று பொருள்) என்ற பெயருக்கு ஏற்றதாயிற்று என்று கூறும். ஆனால் தயரதனின் நாற்படைப் பெருமையைக் கம்பன் விரித்துரைக்கவில்லை. அரசர் சிலர் அவனைப் பகைத்துக் கறுவினாலும், அவரவர் தரத்துக்கு ஏற்றவாறு தயரதன் தன் கைவேலைத் தீட்டுவான் என்றும், அந்த ஒலியைக் கேட்டமாத்திரத்தில் அவர்கள் பணிந்ததால், அவன் சேவடி அணிந்த பொற்கழல் தேயும் என்றும் கம்பன் நகைச்சுவை ததும்ப நவில்வான். மீண்டும்,

'எய்' என எழுபகை எங்கும் இன்மையால்
மொய்பொருந் தினவுஉறு முழவுத் தோளினன்'[1] (1,4,12)

---

1 'எய்' என-என்மீது அம்பை விடு என்று. எழு-எதிர்த்து வரும். மொய்-போர். முழவு-மத்தளம்.

என்றே தயரதனைக் குறிப்பிடுவான். கோசிக முனிவர் மிதிலை மன்னனிடம் பேசுங்கால்,

துனிஇன்றி உயிர்செல்லச்
சுடர்ஆழிப் படைவெய்யோன்
பனிவென்ற படிஎன்னப்
பகைவென்று படிகாப்போன்[1] (1,11,14)

என்று கூறிப் பகலவனைக் கண்ட பனி விலகியதுபோல், தயரதனைக் கண்ட பகை விலகியது என்று உணர்த்துவார். "தனு அன்றித் துணை இல்லான்" என்றே "தருமத்தின் கவசத்தான்" ஆன தயரதனைக் குறிப்பிடுவார். பார்க்கப் போனால், தயரதனது நால்வகைப் படையின் சிறப்பை எழுச்சிப் படலம் முதலாக உண்டாட்டுப் படலம் ஈறாக உள்ள பாலகாண்டப் படலங்களில்தான் முதலில் காண்கிறோம். அங்கு அவர்களது செருமுக வீரமா புலனாகின்றது? அன்று. ஊடிக் கூடும் மனைவிமார்களுடன் அவர்கள் இன்புற்றதே சித்திரிக்கப் பெறுகின்றது. மீண்டும் அண்ணனைத் தேடி அடவி சென்ற பரதனுடன் ஏழு கடலும் எழுந்ததைப் போல் பெரும்படை கிளம்பிச் சென்றதை அயோத்தியா காண்டத்தில் படிக்கிறோம். கழல் அணிந்து வில் ஏந்திய வீரர்கள் யானை தேர் புரவிகளோடு வருவதைக் கண்டுதான் முதலில் குகனும் பின்னர் இலக்குவனும், பரதன் போர்மேல் வருவதாக அயிர்த்துச் சீறினர். ஆனால் இங்கும் வீரர்களது அடலாண்மை புலனாகவில்லை. தலைவனைப் பிரிந்த தானையரின் அவலமே அறியப்படுகிறது. ஆக, கோசலத்தின் படைகள் ஒப்புக்கே இருந்தன என்பதை உய்த்துணரலாம்.

---

1 துனி-துன்பம். சுடர் ஆழிப் படை வெய்யோன்-திருமாலின் சக்கரப்படை போன்ற ஒளி உடைய கதிரவன், படிகாப்போன்-பூமியைக் காப்பவன்,

பொருள் நசை கொண்ட அரசியலார் நாடு பிடித்துக் கேடு சூழ்வதற்குப் படை வலுவைப் பெருக்குவர். இராவணன் போன்ற இவர்களிடமிருந்து அவனியைக் காக்க விரும்பும் இராமன் அனைய அருள்வழித் தலைவர்களும் சேனை பலம் திரட்ட வேண்டும். ஆனால் முதலறம் தழுவிப் பொதுமை நெறியில் உய்யும் உலகில் பகை ஏது? போர் ஏது? அங்குப் படையால் வரும் பயன் யாது? எனவேதான், கம்பனது கனவுலகமான முதலறம் கண்ட கோசலத்தில், படை அழகுக்கே அமைவதாயிற்று. அந்நாட்டு இளைஞர்கள் வில்லும் வாளும் பயில்வதெல்லாம் கலைநலம் கருதியே இயற்றும் பொழுதுபோக்குக் கருமம் ஆயிற்று.

எனவே, இராமன் தனது கருவூலத்தையும், ஆயுத சாலையையும் வற்றாது காத்து நிற்றல் வேண்டுமென்று வான்மீகத்தில் தயரதன் இராமனுக்கு ஓதியதைக் கம்பனது வசிட்டர் அறைகூவுகிறார்:[1]

யாரொ டும்பகை கொள்ளலன் என்றபின்
போர்ஒ டுங்கும்; புகழ்ஒடுங் காது; தன்
தார்ஒ டுங்கல் செய்யாது (2,2,21)

என்று அவர் மௌலி சூடவிருந்த இராமனுக்கு அறிவுறுத்துகிறார். பகைகொள்ளாதிருந்தால் போர் மூள்வதற்கில்லை என்பதுடன் அவர் அமையவில்லை. பகைவரை வென்று வாகை சூடிப் புகழ்பெறுவதினும், பகைவரே இல்லை என்ற சிறப்பால் பெறும் மாலை தாழ்ந்ததல்ல என்பதை எடுத்துக்

---

1 கருவூலம்-பொக்கிஷம். முடிசூடவிருக்கும் மைந்தனுக்குத் தந்தையே, அரசநீதி போதிப்பதாக வான்மீகி முனிவர் கதையை நடத்துகிறார். கோசலத்தின் குருநாதனான வசிட்டர் அரசநீதி போதிப்பதே சிறந்ததென்று கருதிய கம்பன், அவ்வாறே கதைப்போக்கை மாற்றுகிறான்.

தார்-மாலை.

காட்டும் வகையில் ''புகழ் ஒடுங்காது, தன் தார் ஒடுங்கல் செய்யாது'' என்பார். மேலும் அவர் கூறுவார்:

கோளும் ஐம்பொறியும் குறையப் பொருள்
நாளும் கண்டு, நடுவுறும் நோன்மையின்
ஆளும் அவ் அரசே அரசு; அன்னது,
வாளின் மேல்வரு மாதவம், மைந்தனே![1] (2,2,22)

காமம் வெகுளி அனைய குற்றங்களுக்கு ஏதுவாய் உள்ள ஐம்பொறி வன்மையை அடக்கியும், போர்களால் உண்டாகும் கொலைகளைக் குறைத்தும், நாள்தோறும் பொருளைப் பெருக்கியும் நடுநிலை தவறாது ஆளும் ஆற்றல்சால் அரசனே அரசன் என்கிறார். 'ஆளும் அவ்வரசே அரசு' என்றதனால், அங்ஙனம் ஆளாதவன் அரசனாகான் என்பது பெறப்படும். இவ்வாறு தன்புலன் அடக்கிப் பிறருக்குத் தொண்டு புரியும் கொள்கை, வாள்கொண்டு ஆள்வதைவிட மேலானது என்றும், அது பெரும் தவத்துக்கு நிகர் என்றும் கூறுகிறார் முனிவர்.

தேவராயினும் சரி, மனிதராயினும் சரி, வன்பகை நீக்கி உய்வதற்கு அன்பினிற் சிறந்த கருவூலமோ, படைக்கலமோ இல்லை என்று சாற்றுகிறார் வசிட்டர்:

என்பு தோல்உடை யார்க்கும் இலார்க்கும், தம்
வன்ப கைப்புலன் மாசுஅற மாய்ப்பதுஎன்?
முன்பு பின்புஇன்றி, மூஉல கத்தினும்
அன்பின் நல்லதோர் ஆக்கம்உண் டாகுமோ?[2]
(2,2,24,)

---

1 கோள்-கொலை.

2 என்புதோல் உடையார்-மனிதர். (என்புதோல்) இலார்-தேவர். வன்-வலிய. புலன்-இந்திரியம்.

இவ்வாறு அன்பு பேணிப் பகை இன்றி வாழும் இலட்சிய உலகில், நாற்படையும் அழகுக்கே இருந்தன என்பதில் வியப்பில்லை.

6. அரணும் அணியே

அயோத்தி ஆழ்ந்த அகழியையும், உயர்ந்த மதிலையும் அரணாகக் கொண்டிருந்தது. பொன்விலைப் பூவையரின் மனம்போல் ஆழம் காணமுடியாததாகவும், கல்லாதான் செய்த புன்கவியைப்போல் தெளிவு இல்லாமலும், அகழி இருந்தது என்பான் கம்பன். அதனைக் கடல் என்றே மேகம் மயங்கும் என்றும் கூறுவான். இந்த அகழிக்கு இப்பால் நகரைச் சுற்றி அமைந்த மதில், விண்புகும் அளவுக்கு உயர்ந்திருந்தது. அயோத்தியின் அழகையும் வானவர் வாழும் அமராவதியின் வனப்பினையும் ஒப்புநோக்கவே, அம்மதில் தேவர் உலகம் புகுந்ததோ என்று வியப்பான் கம்பன். கம்பனது கோசலத்தில், கற்சுவர்களும் அழகின் தரம் பார்க்கக் கற்றிருந்தன போலும்!

அயோத்தியின் மதில், நுட்பமான அறிவாலும் முடிவு காணமுடியாததாக இருப்பதால், வேதத்தை ஒக்கும். வானவர் உலகம் புகுதலால், தேவரை ஒக்கும். திண்ணிய பொறிகளை (யந்திரங்களை)த் தன்னகத்தே அடக்கிய செயலால், பொறிவாயில் ஐந்தும் அடக்கிய முனிவரை ஒக்கும். கடத்தற்கு இயலாத காவலாக அமைந்திருப்பதால், கலைமானை ஊர்தியாகக் கொண்ட துர்க்கையை ஒக்கும்; சூலங்களைத் தாங்கியிருப்பதால், காளியை ஒக்கும்; எய்தற்கு அருமையால் ஈசனை ஒக்கும். இவ்வாறெல்லாம் மதிலின் சிறப்பை வியந்து ஓதுவான் கம்பன்.

ஆனால் அந்த மதில் ஆதிகாவிய அயோத்தியின் மதிலினைப்போலக் காவலுக்காக அமைந்தது அன்று. பகைவர்

இருந்தால் அல்லவா காவல் தேவை? பகை காணு லட்சிய உலகமான கோசலத்தின் தலைநகருக்கு அமைந்த மதில் ''நகருக்கு அணி என இயற்றியது'' என்று கூறிவிடுவான் கம்பன். படையைப்போலவே மதிலும் அகழியும்கூட அணிகளாகத் திகழ்ந்தன என்பது தேற்றம்.

7. ஒற்றர் இல்லை

தன் நாட்டைக் காப்பதற்கும், பிறர் நாட்டைக் கொள்வதற்கும் வேந்தனுக்கும் வேண்டுவன கூறப் புகுந்த வள்ளுவர், ஒற்றுடலையே முற்படப் பேசினுர். முன்னோர் அனைவருக்கும் இது ஏற்புடைத்தே. ''தம் நாட்டிலும் பிற நாடுகளிலும் நடந்தவையும் நடக்கின்றவையும் நடக்க விருப்பவையுமான செய்திகளில், ஒற்றர்கள் மூலம் அமைச்சர்கள் அறியாதது ஒன்றும் இல்லை'' என்றே வான்மீகம் கோசல மந்திரிகளைப் பற்றிப் பேசுங்கால் குறிப்பிட்டுச் செல்லும். ஒற்றுடலைத் தனியே நோக்கின் அது தாழ்ந்த செயலே என்பதையும், வழிமுறையில் தோன்றும் இப் பழுதினைக் குறிக்கோளின் தூய்மையால் களையலாமெனத் தொல்லோர் அமைதி காட்டினர் என்பதையும் முன்பே விவரித்தோம்.

ஆனுல் வன்பகை நீக்கி அன்பு நெறியில் வாழும் இலட்சிய உலகான கம்பனது கோசலத்துக்கு ஒற்று எற்றுக்கு? அவநம்பிக்கையாலும் அச்சத்தாலும் உந்தப்படும் அரசனுக்குரிய அச் சிறுசெயல், தயரதன் சிந்தனைக்கு ஒவ்வாது. அவன் குடிகளிடம் வெறுப்பைக் கண்டவன் அல்லன்; விருப்பையே கண்டவன். அவர்களது அன்பை நம்பாதவனும் அல்லன். அவன் ஏன் ஒற்றரை நாட வேண்டும்? புறப்பகை உட்பகை யாதுமின்றிப் பெருவாழ்வு வாழ்ந்த கோசல மக்களின் தலைவன் ஒற்றுடக் கற்றிருக்க முடியாது. எனவே, கம்பன் பாலகாண்ட அரசியற் படலத்

திலோ, அயோத்தியா காண்ட மந்திரப் படலத்திலோ, இராமனுக்கு வசிட்டர் அரசியல் போதிக்கும் இடத்திலோ, ஒற்றரைப்பற்றிக் குறிப்பிடவே இல்லை. கோசலத்தில் ஒற்றர் இருந்தாரென்று ஓரிடத்திலும் உரைக்கவில்லை. ஒற்றரை அறியாச் சமுதாயம் என்பது கோசலத்தின் தனிச் சிறப்புக் களில் ஒன்று.

8. அமைச்சர் மாட்சிமை

அரசுக்குச் சிறப்புத் தருவது அமைச்சு. மும்மூர்த்தி களுக்கும் உரிய தோள்வலியை அடைந்திருந்தாலும், அமைச்சர் மொழிவழியே தொழில் செய்வதே அரசனுக்கு ஏற்றம் தருவதாகும் என்பது கோசலத்தின்கொள்கை. இதனை வசிட்டர் இராமனுக்கு ஓதுவார்:

உமைக்கு நாதற்கும் ஓங்குபுள் ஊர்திக்கும்,
இமைப்புஇல் நாட்டம்ஓர் எட்டுஉடை யானுக்கும்,
சமைத்த தோள்வலி தாங்கினர் ஆயினும்,
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே.[1] (2,2,23)

தயரதனுடைய அமைச்சரைக் குறித்துக் கம்பன் அயோத்தியா காண்டத்தின் மந்திரப் படலத்தில் பேசு கின்றான்.

நவையற்ற செய்கைக்கு உறுதுணையாய் அமைந்த நல்நெடுந்தவன் என்று கலைக்கோட்டு முனிவரால் பாராட் டப்பெற்ற குருநாதனான வசிட்ட முனிவரே தயரதனது தலைமை அமைச்சர் எனலாம். அவரை மும்மூர்த்திகளோடு நான்காவது மூர்த்தியாக உயர்த்தி, ''மன்னவன் காவலின்

---

1 உமைக்கு நாதன்-சிவன். ஓங்குபுள்- கருடன். (புள்) ஊர்தி-திருமால். நாட்டம்-கண். இமையாத எட்டுக் கண்களை உடையவன், நான்முகனாகிய பிரமன் ஆவான்.

ஆணைசெய் கடவுள்'' (தயரதனுக்குக் கட்டளையிடுதற்குரிய கடவுள்) என்றே கம்பன் கூறுவான். அவர் நீங்கலாக, அரசனுக்கு அறுபதினாயிரம் அமைச்சர் இருந்தனர் என்பான் கம்பன். அறுபதினாயிரம் என்பது குறியீடான எண்; 60,000 அல்ல, அதிகம் பேர் என்றே பொருள்படும். தயரதன் புவி புரந்தது அறுபதினாயிரம் ஆண்டு, அவனுடைய மனைவியர் அறுபதினாயிரர், மிதிலையில் சிவனது வில்லைத் தூக்கிவந்தவர் ''அறுபதினாயிரர் அளவில் ஆற்றலார்'' என்ற செய்திகளையும் நோக்கின் இது தேற்றம். மந்திரிகள் பலராயினும் ஒருமனப் பட்டவராகவே செயல்பட்டனர் என்று வான்மீகம் மொழிவதைப் பின்பற்றி,

உறுநியில் ஒன்றுஇவற்கு
உணர்வுஎன்று உன்னலாம் (2,1,10)

என்பான் கம்பன். அவர்கள் வெகுமானிகள் என்று ஆதிகாவியம் உரைப்பதை அடியொற்றியும், திருக்குறளில் ஒழிபியலில்[1] அமைந்துள்ள மானமுடைமைக் குறள் ஒன்றை ஆண்டும், ''மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்'' (நீரார்-தன்மையுடையவர்) என்று இயம்புவான் கம்பன். ஆன்ற குடிப்பிறப்பு, நூலறிவு, கேள்விஞானம், மதிநுட்பம், நல்லொழுக்கம், காலமும் இடமும் ஏற்ற கருவியும் தேர்ந்து செயல்படும் திறன், புகழுக்கு வேண்டும் செய்கை இயற்றும் ஆற்றல், ஊழையும் உப்பக்கம் காணும் திண்மை முதலியவற்றைப் பொருந்தப் பெற்றவரென்றும், முன்னோரைத் தழுவி, தயரத அமைச்சருக்கு இலக்கணம் கூறுவான் கம்பன்.

ஆனால் முன்னவரிடமிருந்து வேறுபட்டும் செல்வான் கம்பன். பிரித்தல், பொருத்தல் முதலான வஞ்சனைகளில்

---

1 *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
உயிர்நீப்பர் மானம் வரின். (969)

ஒழிபியல் (ஒழிபு + இயல்): நூலின் முன் இயல்களில் சொல்லாது ஒழிந்தவற்றைக் கூறும் இயல்.

வல்லவனே அமைச்சன் என்ற நூலோர் கொள்கையை அவன் மறுப்பான்.[1] பகையும் போரும் இல்லாது தோழமை நெறியில் வாழும் அவனது புது உலகத்தில், வஞ்சனை அறிவார் இலர்; அதற்குத் தேவையும் இல்லை. அங்கு வன்முறைக் கருவிகள் பயனற்றுப் போனதைப் போலவே, சந்தி, விக்கிரகம் போன்ற புன்னெறிச் சூழ்ச்சிகளுக்கும் இடமில்லாது போயிற்று. எனவே, கோசல அமைச்சர், ''செம்மையின் திறம்பல் செல்லாத் தேற்றத்தார்" ஆயினர். செந்நெறி வழுவாத் தேர்ச்சிக்குரிய இந்த அமைச்சர்,

நலம்முதல் நலியினும் நடுவு நோக்குவார்;
சலம்முதல் அறுத்து, அருந் தருமம் தாங்கினர்.[2]
(2,1,55)

அவர்கள் அரசியலைத் தாங்குவதே கருமம் என்று குன்றிய வட்டத்தில் சிறுக நோக்குவார் அல்லர்; தருமம் தாங்குதலே தலையாய பணி என்ற தெளிவினைப் பெற்றவர். அந்த மெய்யறிவுதான் சலமுதல் அறுத்தலைச் சாத்தியமாக்கியது. அத்தகையோர் அறமுதல் நலியினும் அரசின் நலனை ஓம்பவேண்டும் என்ற ஒற்றைச்சாண் நினைப்புக்கு இடம் தரார். மாறாக, அரசுநலத்தின் அடிவேரே நலிந்தாலும், நடுநிலை நழுவாதவராக விளங்குவர். மேலும் இந்த அமைச்சர்,

தம்உயிர்க்கு இறுதிஎண்ணார்; தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி, நீதி விடாதுநின்று, உரைக்கும் வீரர்
(2,1,8)

என்பான் கம்பன்.

---

1 கோசல அமைச்சர்கள் சந்தி, விக்கிரகம் என்ற ராஜ தந்திரத்தின் உண்மையைச் செவ்வையாக அறிந்தவர்களாகவும், கரவில் காரியம் செய்து முடிக்கும் விரகில் வல்லவர்களாயும் இருந்தனர் என்பதே வான்மீகம் தரும் காட்சி.

2 நலம் முதல்-அரசியல் நலத்தின் ஆணிவேர். சலம் முதல்-கோபத்தின் அடிவேர்.

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு (634)

என்ற குறளை இது நினைவூட்டுகிறது. ஆனால், இக்குறள் பிரித்தல்-பொருத்தல் கலையைக் குறிப்பிடும் குறளைத் தொடர்ந்து வருவதால், ஒருதலையாச் சொல்லல் என்பதற்கு, 'சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதுவே செயற்பாலதென்று துணிவு பிறக்கும் வகை சொல்லுதலும்" என்று பொருள் கண்டார் பரிமேலழகர். கம்பனது கோசலத்தின் மந்திரிகள் சந்தி விக்கிரகத்தைப்பற்றிச் சிறிதும் அறியாதவர். எனவே, அவர்கள் 'நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்' ஆயினர். இதனை விஞ்சும் வீரம் எது? காவலன் கனன்று எழுந்தாலும் கலங்காது நின்று, மரணத்தையும் திரணமாக மதித்து, நீதியினை எடுத்துரைப்பதே விழுமிய வீரம் ஆகும்.

கோசல அமைச்சர் 'மும்மையும் உணரவல்லார்'. முக்காலமும் உணரவல்லாராயினும் வருமுன் காப்பதற்காக முறை வழுவார். யாது வரினும், தருமம் திறம்பார். எனவே, ''ஒருமையையே மொழியும் நீரார்'' என்பான் கம்பன்.

9. நட்பின் திட்பம்

அரசின் அங்கங்களில் நட்பும் ஒன்று.

அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு (74)

என்றார் வள்ளுவர். அன்புநெறியில் ஆக்கம் தேடிய தயரதன், நல்லோரை விரும்பித் தழுவினான்; உடுக்கை இழந்தவன் கைபோல அவருக்குற்ற இடுக்கண் தீர்த்தான்; அவர்தம் நட்பினுக்குப் பாத்திரமாகிப் பொலிவுற்றான்.

சம்பரனிடம் தோற்றோடி வந்த இந்திரனுக்குத் தயரதன் அடைக்கலம் அளித்தான் என்பது கதை. அவன் சம்பரனைத் தொலைத்து அமராவதியைத் தேவர்கோனுக்கு மீட்டுக் கொடுத்ததைக் கோசிக முனிவர் நெஞ்சாரப் புகழ்கிறார்.

இன்தளிர்க் கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழல்இருக்கை இழந்து போந்து,
நின்றுஅளிக்கும் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறை இரந்துநிற்ப, நோக்கிக்
குன்று அளிக்கும் குலமணித்தோள் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து, நீகொண்டு
அன்றுஅளித்த அரசுஅன்றோ, புரந்தரன் இன்று
ஆள்கின்றது?—அரச! என்றான்[1] (1, 6, 9,)

தேவருக்கும் முனிவருக்கும் தொல்லை ஏற்பட்டால் அவர்கள் சிவன், திருமால், பிரமன், தயரதன் ஆகிய நால்வரில் ஒருவரிடம்தான் முறையிட முடியுமென்று கூறித் தயரதனை நான்காவது மூர்த்தியாகப் போற்றுகிறார் கோசிக முனிவர்.

என் அனைய முனிவரரும் இமையவரும்
இடையூறுஒன்று உடைய ரானால்,
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்,
பாற்கடலும், பதும பீடத்து

---

1 இன்தளிர்...நிழல் இருக்கை என்றது இந்திரலோகத்தை; நின்று அளிக்கும் தனிக் குடை என்றது தயரதனது சந்திர வட்டக் குடையை. அளிக்கும்-காக்கும். குன்று அளிக்கும் குலமணி-மலையில் கிடைக்கும் பலவித இரத்தினங்களை (அணிந்த) புரந்தரன்-இந்திரன்.

அந்நகரும், கற்பகநாட்டு அணிகவரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்நகரும் அல்லாது' புகல் உண்டோ?—
இகல்கடந்த புலவு வேலோய்![1] (1, 6, 8,)

நல்லோருக்கு நன்மை செய்யும் நண்பனாகத் தயரதன் விளங்கியதால்தான், தாம் இயற்றும் தவ வேள்வியைக் காப்பதற்கு இராமனைத் தருக என்று கோசிக முனிவர் உரிமையுடன் கேட்கிறார். அச்சொல் கேட்ட அரசன், "கண்ணிலான் பெற்று இழந்தான்" என உழந்தது மெய். தானே சென்று வேள்வி காக்க விரும்பியதும் உண்மை. ஆனால், வசிட்ட முனிவரின் மதிமொழிக்கு இணங்க, இராமனையே அனுப்புவதற்கு இறுதியில் இசைகிறான். இன்னுயிர் அனைய மைந்தனை, போர்க்களம் கண்டிராத பாலகனை, நிருதரோடு பொருதுவதற்கு அனுப்பத் துணிந்ததில், தவசிகள்பால் தயரதனுக்குள்ள நேயம் புலனாகும்.

வையகத்தின் மன்னர்களெல்லாம் அவனுக்கு நண்பர்கள் தாம். எனவே, அவர்கள் இராமனுக்குத் திருமுடி சூட்டும் வைபவத்தில் பங்குகொள்ள ஊக்கத்தோடும் வந்து கூடுகின்றனர்:

இமிழ்திரைப் பரவை ஞாலம்
எங்கணும் வறுமை கூர
உமிழ்வது ஒத்து உதவு காதல்
உந்திட, வந்தது அன்றே;

---

1 பன்னகம்-பல்நகம். நகம்-மலை. பல்நகமும் நகு-வேறு பல மலைகளையும் எள்ளி நகையாடும். வெள்ளிப் பனிவரை-குளிர்ந்த வெள்ளி மலையான கைலாயம். பதுமம்-தாமரை. பதுமபீடத்து அந்நகர்-நான்முகனது உலகம். கற்பக நாடு-இந்திரன் உலகம். அணிகவரும்-அழகைக் கவர்கின்ற. புலவுவேல்-கொழுப்பினைத் தடவிய வேல்.

குமிழ் முலைச் சீதை கொண்கன்
கோமுடி புனைதல் காண்பான்,
அமிழ்து உணக் குழுமு கின்ற
அமரரின் அரச வெள்ளம்[1] (2, 3, 71)

அமுதம் உண்பதற்கு ஆர்வத்துடன் கூடும் அமரரைப் போல், உலக மன்னரெல்லாம் மௌலி புனையும் விழாவைக் காண்பதற்குப் பெருங் காதல்கொண்டு வந்தனர். அந்த அரசர் கூட்டத்தை நோக்கினுல், இதர நாடுகள் வெறுமையுற்று விட்டன என்று தோன்றுமாம்!

இந்திரனுக்கு இணையாகக் கூறத்தக்க பேரரசர்கள் தத்தம் சந்திரவட்டக் குடையுடன் மௌலி சூடும் மண்டபத்தினுள் பிரவேசித்தபோது, சந்திரன் ஒருவன் அல்லன், ஒரு கோடிச் சந்திரர் உண்டு என்று கருதும்படி இருந்ததாகவும் கவிஞன் கூறுவான்.

இராமன் நளிர்முடிசூடி நிலமகள் நலம்பெறும் மணம் கண்டு உவப்பதற்கு வராதவர் யார்? இடம் பெயர முடியாத மலைகளும், பூமியைச் சுமக்கும் பொறுப்பிலிருந்து விடுபட முடியாத திக்கு யானைகளும், பகைமை பாராட்டும் இலங்கை நிருதருமே வரவில்லை என்பான் கம்பன். இவ்வாறு நிருதர் தவிர ஏனையோர் யாவரும் தயரதனுக்கு நண்பராயிருந்த சிறப்பைப் புலப்படுத்துகிருன்.

கைகேயியின் சூழ்ச்சியால் இராமன் வனம் செல்கிருன் என்ற செய்தி கேட்டு அரசரும் அல்லாதவரும் தயரதனைப் போலவே மனம் மறுகி மண்ணில் வீழ்ந்தனர், தயரதனே அருளைத் துறந்ததால், தாமும் அறத்தைக் கைவிடுவோம் என்று வெறுப்போடு பேசிய அரசர்கள், பெருங் காற்றில் விழுந்த மராமரம்போல், மண்ணில் விழுந்து புலம்பினர்;

---

1 இமிழ்திரை ஒலிக்கின்ற அலை. பரவை-கடல். கூர-மிக. உந்திட-தள்ள, தூண்ட. கொண்கண்-கணவன். அமரரின்-தேவரைப்போல்.

ஆ! ஆ! அரசன் அருள் இலனே ஆம் என்பார்;
காவா அறத்தைஇனிக் கைவிடுவேம் யாம்என்பார்;
தாவாத மன்னர் தலைத்தலைவீழ்ந்து ஏங்கினர்;
மாவாதம் சாய்த்த மராமரமே போல்கின்றார்.[1] (2, 4, 95)

நட்பு என்னும் பண்பு கோசலத்துக்கு இயல்பாக அமைந்ததொன்று. எனவே, தானும் மனைவியும் தம்பியுமாகவே காடு ஏகிய இராமனுக்குச் சென்ற இடமெல்லாம் தோழர்கள் வாய்க்கின்றனர்.

குகன் என்ற நாவாய் வேட்டுவன் கங்கைக்கரையில் இராமனைச் சந்திக்கின்றான். தாயின் நல்லான் ஆன அத்தூயனைத் தன் நண்பனாகவே ஏற்கிறான் இராமன்.

முன்புஉளேம், ஒருநால்வேம்; முடிவுஉளது எனஉன்னா
அன்புஉள, இனிநாம்ஓர் ஐவர்கள் உளர்ஆனோம்[2]
(2, 7, 43)

என்று குகனிடம் கூறுகிறான் காகுத்தன். என்றும் நிலைத்திருப்பதும் எல்லையற்றதுமான அன்பு உண்டாகிவிட்டதால் இராம இலக்குவ பரத சத்ருக்கனர் என்ற நால்வர், குகனோடு சேர்ந்து ஐவராகிவிட்டதாகக் கூறுகிறான். "எம்பி நின் தம்பி, நீ தோழன், சீதை கொழுந்தி" என்று உறவு பாராட்டுகிறான். இந்த வாழி நட்பினை உன்னியே, பரதன் படைகளைக் கண்டு ஐயுற்ற குகன் பேசுவான்:

ஆழ நெடுந்திரை ஆறு
கடந்துஇவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு[3]
விலங்கிடும் வில்லாளோ?

---

1) காவா காவாத. தாவாத-நிலைதவறாத. தலைத்தலை-ஆங்காங்கு. மாவாதம்-பெருங்காற்று.

2) முடிவு; அளவு அல்லது கால வரம்பு. உன்னா-எண்ண முடியாத.

3) வேழம்-யானை. விலங்கிடும்-(அஞ்சி) விலகும்.

'தோழமை' என்றுஅவர் சொல்லிய
சொல்ஒரு சொல் அன்றோ?
'ஏழைமை வேடன் இறந்திலன்'
என்றுஎனை ஏசாரோ?[1] (2, 12, 15)

குலநலமே நோக்கும் குறுநெறி அறியாத இராமன், குணநலம் கருதிக் குகனைத் தோழனாகக் கொண்டதைப் போலவே, வனநரன் என்று கருதத்தக்க வானரனும் சுக்கிரீவனையும் நண்பனாகக் கொள்கிறான். ''உன் கிளை எனது: என் காதல் சுற்றம்,உன் சுற்றம்; நீ என் இன்னுயிர்த் துணைவன்'' என்று அவனிடம் கூறுகிறான். வானரர் துணை வலியால்தான் சீதை அசோகவனத்தில் சிறைப்பட்டிருப்பதைக் கண்டுபிடிப்பதும் இராவணாதியரை வதம் செய்வதும் சாத்தியமாகிறது.

இராம-சுக்கிரீவர் நட்பின் தூய்மையைப் பலவகையில் புலப்படுத்துவான் கம்பன். சுவேலமலை உச்சியிலிருந்து இராமன் முதலானோர் இலங்கையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, எதிரே கோபுர உச்சியில் இராவணன் நிற்பதைக் கண்டு ஆவேசம் கொண்ட சுக்ரீவன் அவனை நோக்கிப் பாய்கிறான். பண்டு, காலைக் கதிரவனைச் செங்கனி என்று கருதி அதனைப் பறிக்கப் பாய்ந்த அனுமனைப் போலவும், உதயகாலத்தில் குன்றுக்குக் குன்று செங்கதிர் பரப்பும் தந்தையைப் போலவும் இரவி குமாரன் பாய்ந்து சென்றதைக் கண்ட இராமன், ''ஒன்றிய உணர்வே ஆய ஓர் உயிர்த் துணைவ'' என்று விளித்துப் பதறுகிறான். (ஒன்றிய-என் உணர்வோடு ஐக்கியமான. ஓர்-ஒப்பற்ற).

---

1) ''தோழனைக் காவாத வேடன் மானங்கெட வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று உலகத்தார் பழிப்பார்'' என்பது ஈற்றடியின் பொருள்.

வையம்ஓர் ஏழும் பெற்ருல்,
வாழ்வெனே? வாரா யாகில்
உய்வெனே? தமிய னேனுக்கு[1]
உயிர்தந்து உதவி யோனே! (6, 11, 28)

என்று கதறுகிருன். தனியனுய்த் தவித்த தனக்கு நட்பாய் அமைந்து, உயிர் தந்த சுக்கிரீவன் இராவணனேடு மலைந்து மாண்டால், ஏழ்உலகும் பெற்ருலும் வாழேன், உய்யேன் என்று உரைக்கிருன் இராமன்.

ஒழிவுஅரும் உதவி செய்த[2]
உன்னையான் ஒழிய வாழேன் (6, 11, 31)

என்று மீண்டும் புலம்புகிருன். அவ்வேளையில், இராவண னது மகுட மணிகளைப் பறித்துக்கொண்டு சுக்கிரீவன் மீண்டு வரவே இழந்த உயிரை அடைந்ததுபோல் இராம இலக்கு வரும் பிறரும் மகிழ்ந்தனர். இராமன்,

அன்பனை அமரப் புல்லி
மஞ்சனம் ஆட்டி விட்டான்,
தன்பெரு நயனம் என்னும்
தாமரைத் தடத்து நீரால்[3] (6, 11, 34)

அருவி பொழியும் விழியனுன இராமன், அவசரப்பட்டு ஆபத்துக்கு உள்ளாகாதே என்று வானர வேந்தனை எச்சரிக் கிருன். சூரிய குமாரனே, சீதையை மீட்காது, பத்துத் தலை யும் பறித்து வாராது, ''வெறுங்கை வந்தேன்" என்று

---

1 வாழ்வெனே, உய்வெனே என்பன வாழேன், மாள்வேன் என்று பொருள்படும். தமியனேன்-கதியற்றவன்.

2 ஒழிவு அரும்-என்றும் அழியாத.

3 அன்பனை-சுக்கிரீவனை. அமரப் புல்லி-இறுகத் தழுவி. தடம்-நீர்நிலை. இங்குக் கண்ணைக் குறித்தது.

''என்னுயிர் சுமந்து உழலா நின்றேன்'' என்றும் வருந்து கின்ருன். மேலும்,

நூல்வலி காட்டும் சிந்தை நும்பெரும் தூதன், வெம்போர்
வேல்வலி காட்டி னுர்க்கும் வில்வலி காட்டி னுர்க்கும்
வால்வலி காட்டிப் போந்த வளநகர் புக்கு, மற்றுஎன்
கால்வலி காட்டிப் போந்தேன்; கைவலிக்கு அவதி
(உண்டோ?[1]

என்று மனங் குமைகிருன். அனுமன் தன் வால்வலி காட்டிய இலங்கையில் புகுந்து கைவலி காட்ட இயலாது கால்வலி காட்டி ஓடிவந்தேன் என்று கதறுகிருன். பின்னர், இராவண னது மௌலி மணிகள், அவனது சிரத்தினும், உயிரினும் சிறந்தன என்றும் அவைகளைப் பறித்ததன் மூலம் அவனது

வீங்கிய புகழை எல்லாம்
வேரொடும் வாங்கி விட்டாய்

என்றும், சிவனே செய்யமுடியாததைச் செய்தாய் என்றும் வீடணன் புகழ்கின்ருனென்று கூறி, தூய நேயத்தைப் படம் பிடித்துக் காட்டும் இக்காட்சிக்குத் திரை இடுகிருன் கம்பன்.

சுக்ரீவனைப் போலவே, வீடணனும் இராமனுக்கு இன்னுயிர் நட்பாய் அமைந்து செயல்பட்டான். இலக்கு வன் முதலானோர் நாகபாசத்தால் கட்டுண்டபோது, மத் தினுல் கடையப்பெறும் தயிர்போல், அவன் மனம் மறுகினுன் என்பான் கம்பன். ''எல்லோரையும் கொன்ற கொடியோன் என்னைக் கொன்ருனில்லை; நான இயல்பாக இறந்தேனு மில்லை'' என்று வெறுப்பு மிகுதியோடு உரைத்தவனுய்த் தாங்காத் துயரில் சோர்ந்து விழுந்தான் என்றும்

1) 6, 11, 42. நூல்வலி காட்டும் சிந்தை-நூற்பயிற்சியால் சிறந்த மனத்திண்மை. தூதன்-அனுமன். வேல் வலியும் வில் வலியும் காட்டியவர் அரக்கர். அனுமன் வால்வலி காட்டியது, வாலில் வைத்த தீயால் இலங்கையை எரித்தது. போந்த-வந்த. புக்கு-புகுந்து. அவதி-அளவு.

கம்பன் கூறுவான். மீண்டும் மேகநாதன் ஏவிய பிரமாத்திரத்தால் இலக்குவனும் வானரரும் இறக்க, அத்திர பூசை முடித்து வந்த இராமன் அதனைக் கண்டு புலம்பி அறிவு சோர்ந்து ஆவி அடங்கிக் கிடக்க, உணவு கொணரச் சென்றிருந்த வீடணன் மீண்டும் வந்து இந்த அவலத்தை நோக்குகின்றான். நஞ்சு உண்டவன்போல் சோர்ந்து உணர்வு நீங்குகிறான். பின்னர் உணர்வு பெற்று, நெட்டுயிர்த்து வெதும்புகிறான்.

அன்புஎன்ப தொன்றின் தன்மை
அமரரும் அறிந்த தன்றால் (6,23,4)

என்று கூறி, இராம இலக்குவர்பால் வீடணன் கொண்டிருந்த அன்பைச் சொல்லால் புலப்படுத்த முடியாது என்கிறான் கம்பன். இராமன் மேனியில் வடு இல்லை என்பது கண்டே, வீடணன் நடுக்கம் தீர்ந்தான் என்றும் கம்பன் கூறுவான்.

இராம இலக்குவரும் வீடணனிடம் தூய நட்புக்கொண்டிருந்தனர் என்பதை யுத்த காண்ட வேல் ஏற்றப்படலத்தில் தெளிவாகக் காண்கிறோம். மண்டோதரியை மணந்தபோது மயனிடமிருந்து பரிசாகப் பெற்றதும், பட்டால், பட்டவன் அயனாயினும் கொல்விப்பதுமான வேலாயுதத்தை இராவணன் வீடணன்மேல் விடுத்தபோது, வீடணன் செத்தான் என்றே இமையவர் வருந்தினர். அடைக்கலம் புகுந்தவன் அழியப் பார்க்கும் பழியை அடையேன் என்று உறுதி கொண்ட இலக்குவன், வேலைத் தன் மார்பில் ஏற்பதற்காக வீடணனுக்கு முன்னால் போய் நின்றான். அப்போது வீடணன் இலக்குவனையும் முந்த, இருவரையும் விலக்கி அங்கதன் மேற்செல்ல, சுக்கிரீவன் அங்கதனுக்கும் முன் செல்ல, அவனுக்கு முன்னால் அனுமன் செல்கிறான். இவ்வாறு, ஐவரும் உயிர்த் தியாகம் செய்வதற்குப் போட்டியிடுகின்றனர். அப்போது இலக்குவன் காற்றினும் வேகமாகச் சென்று, நால்வரையும் கடந்து நின்று, விண்ணவரும் கண் புடைத்துப் புலம்ப, வேலைத் தன் மார்பில் ஏற்கிறான்:

முன் நின் ருர்எலாம் பின்உறக் காலினும் முடுகி,
'நின்மின், யான்இது விலக்குவென்' என்றுஉரை நேரா,
மின்னும் வேலினை, விண்ணவர் கண்புடைத்து இரங்கப்
பொன்னின் மார்பிடை ஏற்றனன், முதுகிடைப் போக.[1]
(6,31,32)

''இலக்குவன் இறந்தபின் யான் உயிர் தரியேன்'' என்று கண்ணழியக் கலுழ்ந்த வீடணன் தற்கொலை செய்து கொள்ளத் துணிந்தபோது, சாம்பன் அதனைத் தடுப்பான். அனுமனைக் கொண்டு மருத்துமலை கொணர்ந்து இலக்குவனை உயிர்ப்பிக்க ஏற்பாடு செய்கிருன். அவ்வாறே வேல் தைத்த நோவு நீங்கி இலக்குவன் எழுந்தவுடன், அனுமன் தன்னை இரு கையால் தழுவி, ''எந்தாய்! ''எந்தாய்! விழுந்திலன் அன்றே மற்று அவ்வீடணன்?" என்றே முதலில் கேட்கிருன். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவனுய்த் தொழுது நிற்கும் வீடணனைக் கண்ணுல் கண்டதும், துணுக்கமும் துயரமும் நீக்கிக் 'கொழுந்தியும் மீண்டாள், பட்டான் அரக்கன்' என்று உவகை கொண்டான்.

எல்லாரும் இராமனை அடைந்து நடந்ததைக் கூறவே, அவன், தொழுத தம்பியைத் தழுவி,

புறவு ஒன்றின் பொருட்டா யாக்கை
புண்ணுற அரிந்த புத்தேள்
அறவனும், ஐய! நின்னை
நிகர்க்கிலன், அப்பால் நின்ற[2]

---

1 காலினும் முடுகி-காற்றினும் விரைவாகச் சென்று. நின்மின்-நில்லுங்கள். உரை நேரா-உரைத்து. புடைத்து-அறைந்து. இரங்க-அழ. முதுகிடைப்போக - முதுகின் ஊடே உருவிப் போகும்படி.

2 புறவு-புரு. புத்தேள்-தெய்வம். அறவன்-அறத்தின் மூர்த்தியான சிபிச் சக்கரவர்த்தி.

பிறவினை உரைப்பது என்னே?
பேர்அரு ளாளர் என்பார்
கறவையும் கன்றும் ஒப்பார்
தமர்க்குஇடர் காண்கில் என்றான்[1] (6,31,49)

நாடும் குடியும் பொருளும் அரியணையும் துறந்து இராமன் காடு சென்றதும் நலமாயிற்று. இராம இலக்குவர் வில்வலியாலும் அறம் வளர்த்த அவருக்கு வாய்த்த துணை வலியாலும் அவனுக்குக் கேடு சூழ்ந்த இராவணாதியர் அழிந்தனர்; அறம் வென்றது.[2]

இராமன் மௌலிபுனைந்து புவியைப் புரப்பதற்கென்று குறிக்கப்பெற்ற நாளில், மகிழ்ச்சியால் மெய்ம்மறந்து மாநகர் வீதிகளில் திரண்ட மக்கள்,

பூவலயம் இன்று தனிஅன்று;
பொதுஎன்பார். (2,3,102)

ஆனால், இலங்கை நிருதரைக் கணக்கில் எடுக்காத கூற்று அது. வனமாளச் சென்ற இராமன், அரக்கரை அழிப்பதன் மூலம் பூவலயம் முழுமையும் முதலறம் தழுவிப் பொதுமை நெறியில் வளமை காண்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது என்பது கம்பன் நடத்தும் கதை.

---

1 பிறவினை-வேறு செயல். தம்மைச் சார்ந்தார்க்குத் துன்பம் நேர்தலைக் கண்டால், கன்றுக்கு உதவும் பசுவைப் போல் அவர்க்கு உதவுவார் என்பது ஈற்றடியின் பொருள். தமர்-தம்மைச் சார்ந்தவர்.

2 தயரதனது நட்பின் பெருமையும், நட்புப்பண்பின் வடிவாகத் திகழ்ந்த இராமன் அடைந்த நல்லினமும் ஆதி காவியம் சிறப்பாகப் பேசுவனவே. ஆயினும் முதனூலில், இராம-குகர் நட்பின் சித்திரம் நன்கு ஒளிரவில்லை. வீடணன் விவகாரத்தில் ராஜதந்திரமும் தலை காட்டுகிறது. குகன், சுக்கிரீவன், வீடணன் முதலானோரும் இராமனும் மாசற்ற கேண்மை கொண்டு நவயுகத் தலைவர்களாக உருவெடுப்பது கம்பன் காவியத்தில்தான்.

ஆகக்கூடி, "காவிரி நாடு அன்ன கழனி நாடு" ஆன கோசலத்தின் நீர் நில வளங்களைக் கண்டோம்; உழைப்பால் உயர்ந்த உத்தமர்களைக் குடிகளாகக்கொண்டு, எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் துய்த்தலுக்கு வாய்ப்பு அளித்து, அரசியல் சிறந்ததைஅறிந்தோம். "தனியறத்தின் தாயே!" என்றும், "தயாநிலையே!" என்றும் அறத்தின் மூர்த்தியான இராமனால் பாராட்டப்பெற்ற தயரதனது ஆட்சியில் ஒற்றருக்கு இடமில்லை என்பதையும், படையும் அரணும் அழகுக்கே அமைந்தன என்பதையும், வஞ்சனையும் வன்முறையும் தலைகாட்டவில்லை என்பதையும் தேர்ந்து தெளிந்தோம். தன்னலம் அறியாத கோசலத்தில், தவம் தழைத்து, அன்பு அரும்பி அறம் மலர்ந்து போகம் கனிந்து மக்கள் உயர்ந்தனர் என்பதை உணர்ந்தோம். நல்லோர் அனைவரையும் நண்பராகப் பெற்று உயர்ந்த கோசலத்தின் தலைவன் காடு சென்றபோதும், துணைவலியால் மேம்பட்டான் என்பதையும், அதனைக் கொண்டே இராவணன் வதம் என்ற யுகப் புரட்சியைச் சாதித்து, முதலறம் தழுவிய புதிய சகாப் தத்தை அவனியெங்கும் தோற்றுவித்தான் என்பதையும் பயின்று புரிந்தோம்.

இவ்வாறாக, மாந்தர் அனைவரும் பொதுமை வழியில் தோழராய்க் கூடி அறம் இயற்றி இன்பம் துய்க்கும் நவயுகத் தைக் காண்பதற்கான அரிய முயற்சியில், ஊக்கமும் ஊற்றமும் அளிப்பதாகக் கம்பனது கோசலம் உயிர்த் தெழுந்து ஒளிர்கிறது.

★